திகன - இன்னும் கிடைக்காத நீதி!? 05

அபாயாவில் மறைந்திருக்கும் ஆர்.எஸ்.எஸ் 07

ஜம்இய்யதுல் உலமாவின் தோல்வி 11






# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 394 • 18 மே 2018 வெள்ளிக்கிழமை • றமழான் 1439 • விலை 40.00






# சாஜிதா பானுவின் மீது கட்டவிழ்த்து விடப்படும் இனவாதம்

இபலோகம பிரதேச சபையின் பிரதேச செயலாளர் சஜீதா பானு மீதான இனவாதச் செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. வரலாற்றுப் புகழ் மிக்க விஜிதபுர தொல்பொருட்களுக்கு சேதம் விளைவித்ததாக பொய்க் குற்றம் சாட்டியே இந்த இனவாத செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அனுராதபுரம் இபலோகம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டம் ஒன்றை அமைப்பதற்காக பிரதேச செயலாளர் சாஜிதா பானு அனுமதியளித்த 10 ஏக்கர் நிலப்பரப்புக்கு அப்பாலுள்ள பிரதேசத்தில், தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட (பக். 14)



## முஸ்லிம் சமூகத்திலிருந்து புதியதொரு தலைமை




தேசிய முஸ்லிம் தலைமைத்துவ சபை என்ற பெயரில் முஸ்லிம் சமூகத்துக்கான புதியதொரு தலைமை உருவாக்கப்படவுள்ளதாக சித்தி லெப்பே ஆய்வு மன்றத்தின் தலைவர் சட்டத் தரணி மர்சூம் மௌலானா தெரிவித்தார். சித்தி லெப்பை ஆய்வுப் பேரவையின் முதலாவது தேசிய ஆய்வு மாநாடு தொடர்பில் ஊடக வியலாளர்களுக்கு விளக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (பக். 12)

## ஜோர்தானுக்கான விசா நடைமுறைகள் இலகுபடுத்தப்படும்



வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க இம்மாதம் ஜோர்தானுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிப்பதற்கான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. (பக். 14)

## முஸ்லிம்கள் பணக்காரர்கள் என்பது உண்மையே

கம்பஹா கல்வி வலயத்தின் இரண்டு முஸ்லிம் பாடசாலைகளுக்கு கட்டடம் நிர்மாணிப்பதற்கான நிதி ஒதுக்கீட்டின் போது, முஸ்லிம்களுக்கு அரபு நாடுகளில் இருந்தும் பள்ளிவாசல்களுக்கூடாகவும் ஏராளமான நிதி வருகிறது. எனவே அவர்களது பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்க வேண்டிய அவசியமில்லை என எதிர்ப்புத் தெரிவித்த சம்பவமொன்று தொடர்பில் கடந்த மீள்பார்வையில் செய்தியொன்று வெளியாகி இருந்தது.

அதனை உண்மைப்படுத்தும் வகையில் கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு இரண்டு முஸ்லிம் பணக்காரர்கள் இணைந்து 30 கோடி ரூபா பெறுமதியான 08 மாடிக் கட்டடமொன்றை நிர்மாணித்துக் கொடுத்துள்ளனர். இலங்கையில் இதுவரை எங்குமே நிர்மாணிக்கப்பட்டிராத 08 மாடி (பக். 12)




## சிலாவத்துறை முஸ்லிம்கள் மீள்குடியேற எதிர்ப்பு

மன்னார் மாவட்டத்தின் சிலாவத்துறைப் பிரதேசத்திலிருந்து பயங்கரவாத விடுதலைப் புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்களை மீள்குடியேற்றுவதற்கு பிரதேசத்திலுள்ள தமிழர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டில் பயங்கரவாதப் புலிகளின் மிரட்டலுக்கு அஞ்சி அங்கிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் குடும்பங்களில் 70 குடும்பங் (பக். 12)

## அமைச்சர்களின் பேரீத்தம் பழ வேண்டுகோளுக்கு பிரதமர் அனுமதி



பல வருடங்களாக இலங்கை முஸ்லிம்கள் நோன்பு துறப்பதற்கென சவூதி அரசாங்கம் வழங்கி வந்த ஈத்தம் பழங்கள் இம்முறை வர மாட்டாது என முஸ்லிம் கலாச்சாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்கான காரணத்தை சவூதி அரசாங்கம் அறிவிக்கவில்லை என முஸ்லிம் கலாச்சாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் அப்துல் மலிக் தெரிவித்தார்.

முஸ்லிம்களுக்கு ரமழான் மாத காலத்தில் சவூதி அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படும் (பக். 12)

## பயங்கரவாதத்திற்கு நிதி வழங்கலை தடுப்பதற்கான குழுவிற்கு புதிய அங்கத்தவர்கள் நியமனம்

சட்டவிரோத பணப்பரிமாற்றலையும், பயங்கரவாதத்திற்கு நிதி வழங்கலையும் தடுப்பது தொடர்பிலான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவிற்கு புதிய உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் நிதிப் புலனாய்வுப்பிரிவு நிதியமைச்சின் கீழ் 2006ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

சட்டவிரோத பணப் பரிமாற்றலையும் பயங்கரவாதத்திற்கு நிதி வழங்கலையும் தடுப்பதற்கான தேசிய கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதை தொடர்ந்து சட்டவிரோத பணப்பரிமாற்றலையும் பயங்கரவாதத்திற்கு நிதி வழங்கப்படுவதையும் தடுப்பது தொடர்பான தேசிய ஒருங்கிணைப்புக்குழு என புதிதாகப் பெயரிடப்பட்டுள்ளது. (பக். 12)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை இணையத்தில் வெளியான பதிவுகளுக்கு கிடைத்த பின்னூட்டல்களில் (comments) சில பின்வருமாறு:

## ஜேர்மனியின் நாசிஸமும் இலங்கையின் பாசிஸமும்.

நாசிசம் ஹிட்லர் பற்றிய பார்வை மீள் வாசிப்புக்கு உள் வாங்கப் படணும். "கிரிஸ்டல் நாக்ட் அல்லது உடைந்த கண்ணாடி சில்லுகளின் இரவு", இந்நிகழ்வு பற்றிய உண்மை ஒரு கேள்வியாகவே உள்ளது.

- அபூ ஸெய்னப்

## காஷ்மீரில் ரக்பி பெண்கள் அணிக்கு பயிற்சி கொடுத்த நாமல்!

இஸ்லாம் பகிரங்க விளையாட்டுக்களை அனுமதிக்கின்றதா? பெண்கள் அந்நிய ஆண்களுகளுடன் கைலாகு செய்யலாமா? ஒரு பெண் அந்நிய ஆணுடன் சேர்ந்து தங்க முடியுமா?

- ரஸ்னி

## முகத்தினை மூடும் அபாயாக்கள் அணிவதை முற்றாக தடை செய்யும் சட்டம் வேண்டும் - ஞானசார தேரர்

நாட்டுச் சட்டத்தின் மூலம் முகம் மூடுவது நல்லதா அல்லது இது கருத்து வேறுபாடுகள் உள்ள ஒரு சட்டம். எனவே, நாங்கள் முகத்தையும் மணிக்கட்டையும் திறந்த இஸ்லாமிய சிறந்த ஆடையை முஸ்லிம் பெண்களுக்கு அணியுமாறு அறிவுரைகள் வழங்கி நல்லதொரு இஸ்லாமிய சமூகத்தை கட்டியெழுப்புவதா என்று அறிஞர்களும், புத்திஜீவிகளும் சிந்தித்து செயலாற்ற வேண்டிய ஒரு யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

பெண்களின் முகத்தை மூடி இலங்கையில் இஸ்லாமிய வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவதற்கு முன்னர் இன்னும் ஏராளமான விஷயங்கள் நடைமுறையில் வரவேண்டியுள்ளன என்பதை யாவரும் அறிவர்.

ஒவ்வொருவரும் தான் நினைத்த பிரகாரம், தான் விளங்கியதற்கு ஏற்ப அல்லது தங்களுடைய ஜமா அத்தினருடைய விருப்பு வெறுப்புக்கு ஏற்ப பத்வாக்களை ஒட்டுமொத்த இலங்கை முஸ்லிம்களுக்கும் திணிக்க முற்படக் கூடாது. சரியான முடிவை எடுக்காத பட்சத்தில் இலங்கை இஸ்லாமிய சமூகத்தில் அகில இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இருக்கும் ஜம்மியதுல் உலமாக்கள் குழுவினருக்கு மதிப்பும் மரியாதையும் இல்லாமல் போய் விடும் என்பது நாங்கள் சொல்லி அறிஞர்கள் அறிய வேண்டியதில்லை.

- அபூ அனஸ்

முஸ்லிம் பெண்கள் முழுமையாக முகத்தினை மூடும் அபாயாக்கள் அணிவது அந்நிய நாட்டில் வாழும் நாம் மறு பரிசீலனை பண்ண வேண்டிய விடயம். வைத்தியசாலைக்கு செல்லும் போது முகத்தை மட்டுமல்ல அந்நிய ஆண் வைத்தியரிடம் காட்ட வந்ததை எல்லாம் காட்டாமலிருக்க முடியுமா? வேலை பார்க்கும் பெண்கள் என்றெல்லாம் யோசிக்க வேண்டும்.

- முஹம்மட்

## நாவலப்பிட்டிய முஸ்லிம்களை பாதுகாத்ததால் கிடைத்த பரிசு

சமூகம் சார்பாக இவரது சேவையைப் பாராட்டி சில பரிசு, பதக்கங்களை நீங்கள் அவருக்கு கொடுத்திருக்க வேண்டும். - அபூ அதீக்

நாவலப்பிட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மதிப்பிற்குரிய R.D. ஆனந்த ராஜபக்ஷவை மட்டுமல்ல, ஆளும் கட்சி அமைச்சு பதவியை வைத்திருந்த பிரதமரால் முடியாததை எதிர்க்கட்சியை சேர்ந்த நாவலப்பிட்டிய பொஹொட்டுவ கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய மஹிந்தானந்த அளுத்கமகே அவர்கள் கண்டியில் தாக்குதல்கள் ஆரம்பித்த மறுதினமே நாவலப்பிட்டிய முஸ்லிம் தரப்பிலுள்ள மதத் தலைவர்கள், அமைப்புக்கள், குழுக்கள் என்பவற்றுடன், பௌத்த மத தலைவர்கள், வணிக அமைப்புக்கள், சங்கங்களையும் அழைத்து ஒரு வினைத்திறனான கூட்டத்தை நடாத்தினார் என்பது முஸ்லிம்களால் பாராட்டப்படவேண்டிய விஷயம் பிரதமருக்கே இல்லாத துணிவு,நல்ல சமயோசிதம். - றவூப் முஹம்மட்

## பலஸ்தீனர்கள் ட்ரம்பின் முன்மொழிவை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் வாய் பொத்தி இருக்க வேண்டும் -சவூதி இளவரசர்

சவூதியின் அழிவு இவரிலிருந்து ஆரம்பித்து விட்டது, இனி சவூதி முஸ்லிம்களின் பொல்லாத காலம். அராபிய வசந்தம் வீசப்போகிறதோ? உண்மையான முஸ்லிம்களை அல்லாஹ் ரட்ஷிப்பானாக. - றவூப்

## இனி என்ன செய்வது?

முஸ்லிம்கள் சிலரது போக்கு, பொது நடத்தையில் ஏற்பட்ட மாற்றம் என்பன அவர்களிடையே ஒரு அச்ச உணர்வை தூண்டியுள்ளது. அதன் முன் எச்சரிக்கை தான் அவர்களிடம் உள்ளது. முஸ்லிம்களிடமுள்ள இவை அனைத்தும் போலியானது, உண்மையான இஹ்லாசுடன் செய்யப்படுவது அல்ல என்பது முஸ்லிமுக்கு புரிகிறது.

மற்றவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. மார்க்கத்தை சொல்வதில் போட்டி, முரண்பாடுகள், அந்நியரிடம் முஸ்லிம்களை காட்டிக்கொடுப்பது, தவறான கருத்தை பரப்புவது, தனித்தனியான பள்ளிவயூசல் அதிகரிப்பது, அந்நியமக்கள் உள்ள பகுதிகளிலும் போட்டிக்கு ஒலி பெருக்கியில்அதிக சப்தமாக அதான் சொல்வது, தமிழில் பிரசங்கம் பண்ணுவது, தின்பதில் மட்டும் ஹலாலை பார்த்து சம்பாதிப்பதில் வட்டி, மோசடி,இலஞ்சம் போன்ற பல காரணங்களால் எம்மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது. எனவே ஒரு தட்டு, தட்டி வைக்கவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

- தாஸீம்

மீள்பார்வை பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் குறித்த உங்கள் கருத்துக்களை 0776633902 என இலக்கத்திற்கு SMS, Whatsapp, Viber அல்லது IMO ஊடாக உங்கள் பெயர், முகவரி குறிப்பிட்டு அனுப்பி வைக்கலாம்!

## மாற்றத்திற்கான மடவளையின் சிரமதானப் பணி

'மாற்றத்திற்கான மடவளை' எனும் தொனிப்பொருளில், மடவளை இளைஞர் சமூக நல அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிரமதானப்பணி, கடந்த (13) ஞாயிற்றுக்கிழமை, மடவளை நகரில் இடம்பெற்றது. சுமார் பத்து வருடங்களுக்கும் மேலாக சுத்திகரிப்புச் செய்யப்படாமல் இருந்த, வத்தேகம கண்டி பிரதான வீதியில் அமைந்துள்ள வடிகான்களைச் சுத்திகரிக்கும் பணியே அன்றைய தினம் மேற்கொள்ளப்பட்டது. மடவளை இளைஞர் சமூக நல அமைப்பைச் சேர்ந்த சுமார் 70 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இந்த சிரமதானப்பணியில் ஈடுபட்டனர். அன்றைய தினம், காலை 10 மணியளவில் ஆரம்பமான இச்சிரமதானப் பணி, இரவு 10 மணிவரை மேற்கொள்ளப்பட்டமை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. - ஐ. ஏ. காதிர் கான்











ஸ்ரீலங்கா முஸ்லீம் மீடியா போரம் மாதாந்தம் மாவட்டம் தோறும் பாடசாலை உயர்தர மாணவ மாணவிகளுக்காக நடாத்திவரும் ஊடகக் கருத்தரங்கும், பயிற்சிப் பட்டறையும் 12-05-2018 கொழும்பு கைரியா மகளிர் பாடசாலையில் நடைபெற்றது. கொழும்பில் 8 பாடசாலைகளிலிருந்து 150 க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை Life and confidence club மகளிர் அணியும் முஸ்லீம் மீடியா போரத்துடன் இணைந்து நடாத்தியது. 21ஆம் நூற்றாண்டில் ஊடகத்தின் பங்கு எனும் தலைப்பில் இது நடைபெற்றது. முஸ்லீம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன், தகவல் திணைக்களத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் ஹில்மி மொஹமட், ஊடகவியலாளர் ஜெம்சித் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் புர்கான் பீ. இப்திகாரும் விரிவுரைகளை நடாத்தினார்கள். (அஷ்ரப் ஏ சமத்)




Happy Family நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த ரிப்கா தாஹாவின் முதலாவது ஓவியக் கண்காட்சி மற்றும் சிறுவர் சித்திரப் பட்டறை மே மாதம் 6ஆம் திகதி திஹாரிய தாருஸ் ஸலாம் ஆரம்பப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் ரிப்கா தாஹாவின் ஓவியங்கள் மற்றும் கைப்பணிப் பொருட்கள் சுமார் 100 காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. விழாவின் பிரதம அதிதியாக மீள்பார்வை பத்திரிகையின் முன்னால் பிரதம ஆசிரியர் சகோதரர் சிராஜ் மஷ்ஹூர் அவர்களும் சிறப்பு அதிதி[illegible] அஸ்மிர், தாருஸ்ஸலாம் ஆரம்பப் பாடசாலையின் அதிபர் எம்.எப்.எம் ஸபீர், அம்வா பெண்கள் அமைப்பின் தலைவி பர்ஸானா ஹபீப், க்ரஸன்ட் சர்வதேச [illegible] மற்றும் அத்லா அமைவின் தலைவி பஸீனா ஸவாஹிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அடுத்த தலைமையை தீர்மானிக்கும் சைபர் அரசியல்

• நேசன்

கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான வியத்மக அமைப்பின் 2018 இற்கான வருடாந்த மாநாடு கடந்த வாரம் நடைபெற்றது. இதில் உரையாற்றிய பேராசிரியர் ரொஹான் குணரத்ன, புதிய உலகை வெல்வதற்குத் தேவையான நான்கு சக்திகளைக் குறிப்பிட்டார். இராணுவம், கடற்படை, விமானப்படை என்பவற்றோடு நான்காவதாக தற்போது சைபர் படையும் முக்கியமானதாக இருப்பதாக அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

உலக அரங்கில் முக்கியமான அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றியீட்டுவதற்கு இந்த சைபர் படையின் தொழிற்பாடு வெகுவாக செல்வாக்குச் செலுத்தியது என்பது இன்றளவில் உலகறிந்த செய்தி. தேர்தலுக்கு முன்னரான அனைத்துக் கணிப்பீடுகளும் ஹிலாரி கிளிங்டன் வெல்லுவார் என்பதை உறுதிப்படுத்தியிருந்த போதும், எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் தாண்டி ட்ரம்ப் வெற்றிபெற்றார் என்பதை ட்ரம்பின் சாகசம் என்று வர்ணிப்பதை விட்டு, சைபர் செய்த சாதனையென்றே உலகம் பார்க்கிறது. இதற்கு அமெரிக்காவின் வைரியான ரஷ்யாதான் பின்னணியில் இருந்து ஆட்டிப் படைத்துள்ளமை தற்போது நிரூபணமாகியுள்ளது.

அடுத்த நாடுகளில் மக்களின் அபிப்பிராயங்களை வடிவமைக்கும் சுயநல நோக்கில் நாடுகள் தமது தளத்தை பயன்படுத்தியிருப்பதை தேர்தல் நடந்த அடுத்த வருடம் ஏப்ரலில் பேஸ்புக் நிறுவனம் முதல் தடவையாக ஒப்புக் கொண்டிருந்தது. ரஷ்யப் பின்னணியிலான 120 போலியான பக்கங்கள் திறக்கப்பட்டு, 80,000 பதிவிடல்கள் மூலமாக 29 மில்லியன் மக்களை அவை சென்றடைந்திருப்பதாக பேஸ்புக் நம்புகிறது. பகிரப்படுவதன் ஊடாகவும், விருப்பைத் தெரிவிப்பதன் ஊடாகவும் அது இதனை விடவும் பெரியதொரு எண்ணிக்கையினருக்குச் சென்றடைந்திருக்கலாம் எனவும் அது நம்புகிறது.

இதற்கு மேலதிகமாக ரஷ்யாவில் இருந்து 2752 ட்விட்டர் கணக்குகள் பேணப்பட்டிருக்கின்றன. 18 யூடியூப் சனல்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. ரஷ்யத் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் 4,700 டொலர் பெறுமதியான விளம்பரங்கள் இந்தத் தேர்தல் காலத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன என கூகிள் தெரிவிக்கிறது.

ரஷ்யாவின் அநாமதேயங்களும் (Trolls) தானியங்கிகளும் (Bots) தமது



நலனுக்காக டொனால்ட் ட்ரம்புக்காக வேலை செய்ததோடு மட்டுமன்றி, புலம் பெயர்வு, இஸ்லாமோபோபியா போன்ற சர்ச்சைக்குரிய உதவாக்கரை விடயங்களையும் அமெரிக்க மக்கள் மத்தியில் விதைத்து அவர்களுக்கிடையே பிரிவினைகளை ஏற்படுத்தும் வேலைகளையும் சமூக ஊடகங்கள் இந்தத் தேர்தலின் போது செய்தன என த கார்டியன் சுட்டிக் காட்டுகிறது.

கொலம்பிய பல்கலைக்கழக டிஜிட்டல் ஊடக நிலைய அதிகாரி ஜொனதன் அல்பிரைட்டின் அலசல்களின்படி, Being Patriotic என்ற பேஸ்புக் பக்கம், தேர்தல் பிரச்சார காலங்களில் 'சட்டவிரோத', 'அமெரிகன்', 'ஷரீஆ சட்டம்' போன்ற சொற்களை அதிகம் பாவித்துள்ளதாகக் குறிப்பிடுகிறார். இது போன்ற பேஸ்புக் பக்கங்களில் மில்லியன் கணக்கான அமெரிக்கர்கள் தாங்கள் தமது நாட்டவருடனேயே உரையாடுவதாக எண்ணியே இந்த பேஸ்புக் கணக்குகளில் உலாவியிருக்கிறார்கள் எனவும் அவர் மேலும் கூறுகிறார்.

அமெரிக்காவின் அரசியல் கட்சிகளெதற்கும் ஆதரவளிப்பதனை விட, அமெரிக்காவில் ஏற்கனவே உள்ள பிரிவினைகளை அதிகரிக்கச் செய்வதனையே ரஷ்யாவின் விரிந்த மூலோபாயம் நோக்காகக் கொண்டுள்ளது தெளிவாகவே தெரிகிறது என அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பயங்கரவாதத்துக்கான டிஜிட்டல் எதிர்செயலின் முன்னாள் ஆலோசகர் ஜொனதன் மோர்கன் தெரிவிக்கிறார். இது நிச்சயமாகத் தொடரும் என்றே நான் நினைக்கிறேன் என்கிறார் அவர்.

பேராசிரியர் ரொஹான் குணரத்ன சொல்லுகின்ற நான்காவது படையின் தாக்கம் தான் இது. ஓர் அந்நிய நாட்டின் மீது தொடர்பாடல் பைபர் வழியாகப் படையெடுத்து, அங்குள்ள மக்களின் உணர்வுகளைத் தூண்டி, தூண்டப்பட்ட மக்களை ஒரு திரளான சக்தியாக்கி தனக்குத் தேவையானதைச் சாதித்துக் கொள்ளும் இந்த சைபர் படையெடுப்புக்கான சாத்தியம் இலங்கைக்கு இல்லை என்று சொல்ல முடியாது. இலங்கை இந்திய, சீன, அமெரிக்க வல்லரசுகளின் கழுகுப் பார்வையில் சிக்கியுள்ள ஒரு கேந்திர முக்கியத்துவம் மிக்க நாடு என்ற வகையில் இவை எல்லாமே தமக்குத் தேவையானதொரு களத்தை இலங்கையில் தயாராக்குவதற்கு கங்கணம் கட்டிச் செயற்படும் தேவையுடனிருக்கின்றன. இவற்றுள் மஹிந்த ராஜபக்ஷ தனது பதவிக் காலத்தில் எடுத்த சீன சார்பு முன்னெடுப்புக்கள், சீனாவுக்கு வலுவானதொரு நிலையை ஏலவே இலங்கை மண்ணில் ஏற்படுத்தி விட்டிருக்கின்றன. இந்த ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை இந்தியாவுக்கும் அதனூடாக அமெரிக்காவுக்கும் இருக்கிறது. இந்த வகையில் இலங்கையில் ஒரு சைபர் ஆக்கிரமிப்பு மிகவும் எதிர்பார்க்கப்பட வேண்டியதொன்றே.

நவீன யுகத்தில் சமூக ஊடகங்கள் அரசாங்கங்களைத் தீர்மானிக்கின்ற அளவுக்கு சக்தி பெற்றிருக்கின்றன. பூகோள அரசியலில் இந்த சைபர் அரசியல் மிக முக்கியமானது. நாடுகளில் தேசியவாத உணர்வுகளைத் தூண்டி விட்டு பூகோள அரசியலை முன்னகர்த்திச் செல்வது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் வெற்றியுடன் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

பிரான்ஸில் லபெனைத் தோற்கடித்து மக்ரோன் ஆட்சிக்கு வருவதற்கும் சைபர் அரசியலின் தேசியவாத உணர்வைத் தூண்டிவிடும் யுக்தி காரணமாக இருந்தது.

இலங்கையில் தேசியவாதம் இனவாதத்துடன் இரண்டறக் கலந்தே பயணிக்கிறது. அதனால் தேசியவாதம் தூண்டப்படும் போதெல்லாம் இனவாதம் மேலோங்குகிறது. அல்லது இனவாத அலை மேலெழும்போது தேசியவாத உணர்வுகள் கிளர்ந்தெழச் செய்யப்படுகின்றன. முஸ்லிம்கள் மீதான திகன தாக்குதல்களுக்கு சைபர் அரசியலின் தேசியவாத உணர்வு தூண்டப்பட்டதே காரணமாகும். இதனூடாக இனவாதம் மேலெழுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. உலக சைபர் அரசியல் அரங்கில் நடந்தது போன்றதொரு சைபர் ஆக்கிரமிப்பு தான் இங்கும் நடைபெற்றது என்பது தான் திகன தாக்குதல்களின் பின்னர் இலங்கையில் சில நாட்கள் பேஸ்புக் தடைசெய்யப்பட்டதற்குக் காரணமாகும்.

மனிதன் இயல்பிலேயே அவசரக்காரனாகவே படைக்கப்பட்டுள்ளான். அந்த வகையில் இந்த இயல்புக்குரிய கோபம், பொறாமை, வெறுப்பு அனைத்தும் அவனில் குடிகொண்டிருப்பவை. மதங்களும் அறிவும் இவற்றைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றன. இப்படி அடக்கி வைத்திருப்பவைகளை வெடித்து வெளிவரச் செய்கின்ற வேலையைத் தான் சமூக ஊடகங்கள் செய்கின்றன. இது தான் சைபர் கலாச்சாரமாக போற்றப்படுகிறது.

இந்தக் கலாச்சாரம் தற்போது நாட்டின் கலாச்சாரமாக மாற்றப்பட்டிருப்பதன் விளைவைத் தான் திகன தாக்குதல்கள் வெளிப்படுத்தின. இதனை பேஸ்புக்கைத் தடைசெய்வதனூடாக இலங்கை அரசாங்கம் கட்டுப்படுத்த முனைந்தாலும், அது தனது நாட்டுக் கட்டுப்பாட்டையும் மீறி நடைபெறுகின்ற ஒரு விடயம் என்பதை அரசாங்கத்துக்கு உணர்த்தியதும் திகன சம்பவங்கள்தான்.

சீனா சைபர் கலாச்சாரப் புரட்சியை எதிர்கொண்டபோது அங்கும் மக்கள் VPN ஊடாக சைபர் உலகில் சஞ்சரித்தனர். அப்போது கூகிளுடனும் அப்பலுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி தனக்கிருக்கும் வல்லமையால் சீனா அதனைக் கட்டுப்படுத்தியது. இலங்கை போன்ற சிறிய நாடுகளினால் இது சாத்தியமில்லை. ஆகவே இவ்வாறான சைபர் ஆக்கிரமிப்புக்களின் போது இலங்கை போன்ற நாடுகள் பல்தேசிய சக்திகளுக்கு முன்னால் அடிபணிவதைத் தவிர வேறு வழிகள் இருக்கப்போவதில்லை. இதனை வேறு வழிகளில் சொல்வதென்றால், மூன்றாவது சக்தியொன்றினால் எமது அரசியலை இலகுவாக மாற்றிவிட முடியும்.

ஜொனதன் அல்பிரைட்டின் கருத்துப்படி, அமெரிக்காவில் ஸ்திரமற்ற ஒரு ஆட்சியைக் கொண்டுவருவதற்காகவே ரஷ்யா சைபர் ஆக்கிரமிப்பின் மூலம் டொனல்ட் ட்ரம்பை வெற்றி கொள்ளச் செய்தது என்கிறார். அதற்கெனவே இனவாத, தேசியவாத கருத்துக்களை அது விதைத்தது. இது தொடர்ந்து கொண்டே இருக்கும் என்று நான் நம்புகிறேன் என்று மோர்கன் கூறுகிறார்.

இலங்கையிலும் ஸ்திரமற்ற ஓர் ஆட்சி நீடிப்பது தான் இலங்கையில் கால்பதிக்க நினைக்கின்ற மூன்றாம் சக்திகளின் தேவைப்பாடு. மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாட்டின் எதிர்காலத் தலைமைக்குக் கனவு காண்பவர்கள் சீன சார்பு நிலைப்பாட்டை எடுத்திருப்பவர்கள் என்பதனால் இந்தியா இதனைப் பொறுத்துக் கொண்டிருக்கப் போவதில்லை. ஸ்திரமில்லாத தற்போதைய நல்லாட்சியில் குளிர் காய்ந்து கொண்டிருக்கும் இந்தியா, தற்போது குறிவைத்திருப்பது நடப்பு அரசாங்கத்தையல்ல. அடுத்து வரப் போகும் தலைமையையும் அதனை ஸ்திரமில்லாமல் செய்வதற்கான அஸ்திரங்களைப் பிரயோகிப்பதற்கான வழிகளையுமே அது சிந்திக்கிறது. இந்த வகையில் இதற்குப் பகடைக்காய்களாக இலங்கை முஸ்லிம் சமூகம் தொடர்ந்து இருக்கப் போகிறது என்பது மிகத் தெளிவானது.

இனவாதக் கருத்துக்களுக்கூடாக ட்ரம்பை ஜனாதிபதியாக்கியது அமெரிக்காவின் ஸ்திரத்தன்மையை குலைப்பதற்கென்றிருந்தால், தற்போது இலங்கையில் பரப்பப்பட்டிருக்கும் இனவாத அலைகளால் உருவாகி வரும் அடுத்த ஜனாதிபதி நிச்சயமாக சைபர் தாக்குதலின் பாதிப்புக்குட்பட்டவராகவே இருக்கப் போகிறார் என்பது நிச்சயமானது.

# அபாயாவில் மறைந்திருக்கும் ஆர்.எஸ்.எஸ்

• லத்தீப் பாரூக்

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் முஸ்லிம் ஆசிரியைகள் முஸ்லிம் பெண்களுக்காக இஸ்லாம் வகுத்துக் கொடுத்துள்ள கலாசார முறைப்படியான பெண்களின் கண்ணியம் காக்கும் 'ஹபாயா' அணிவது தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட மிகைப் படுத்தப்பட்ட சர்ச்சை முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக தமிழ் மக்களைத் தூண்டி விடும் RSS இன் சதித் திட்டமாகும். தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கு இடையிலான நல்லுறவை இரு சமூகங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கிழித்தெறிவதற்கான ஒரு சதித் திட்டமே இங்கு அரங்கேற்றப்பட்டுள்ளது.

சில தீய சக்திகளால் கையாளப்படும் இந்த சந்தேகத்துக்கு இடமான சதி முயற்சிகள் இரு சமூகங்களினதும் நலன் கருதி முளையிலேயே சமாதானமான முறைகளைக் கையாண்டு களையப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் தமது தீய நோக்கம் கொண்ட சொந்த நிகழ்ச்சி நிரலுடன் உள்நாட்டில் நிலை கொண்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தீய சக்திகள் இந்த நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இரு சமூகங்களுக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய முரண்பாடுகளைத் தோற்றுவிக்க வாய்ப்புண்டு.

இன்று இந்த நாட்டின் அரசியல் நிலைமைகள்; ஊழல், மோசடி, வர்த்தகமயமாக்கல், இனவாதம் மற்றும் குற்றப் பின்னணிகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. 30 வருடகால யுத்தம் ஏற்படுத்திய காயம் இன்னும் குணப்படுத்தப்படவில்லை. அந்தக் காயங்கள் சிக்கல் மிக்கவையாகக் காணப்படுகின்



றன. இரு சமூகங்களுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த நாம் செய்ய வேண்டிய காரியங்கள் நிறைய உள்ளன.

இனவாத யுத்தம் 2009 மே மாதத்தில் முடிவடைந்த பிறகு சமூகங்களை ஒன்றிணைக்கும் பணியை ராஜபக்ஷ அரசு மேற்கொண்டு நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் என முழு நாடும் எதிர்பார்த்தது. ஆனால் அது நடக்கவில்லை.

மாறாக எல்லோரும் அதிர்ச்சி அடையும் வகையில் ராஜபக்ஷ அரசின் அனுசரணையோடு வன்முறைகள் மற்றும் இனவாதம் என்பன கட்டவிழ்த்து விடப்பட்டு இந்த நாடு நரகமாக மாற்றப்பட்டது. இந்த மோசமான நிலையில் இருந்து விடுபடுவதற்காக கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் அதனை அடுத்த பொதுத் தேர்தலிலும் மக்கள் மைத்திரி - ரணில் கூட்டணிக்கு நம்பிக்கையோடு வாக்களித்தனர்.

ஆனால் மைத்திரியும் ரணிலும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டனர். [illegible] களும் முஸ்லிம்களுக்கு எதிரான ராஜபக்ஷ யுகத்தின் இனவாதத்தையே தொடர்ந்தனர்.

தெற்கில் உள்ள இனவாத சக்திகள் முஸ்லிம்களுக்கு எதிரான தமது சொந்த நிகழ்ச்சி நிரலை இந்த அரசின் கீழும் அமுல் செய்யத் தொடங்கின. அரசாங்கம் அதை கண்டுகொள்ளத் தவறிவிட்டது. ஏற்கனவே மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தமிழ்-முஸ்லிம் உறவுகளை மேலும் பிளவுபடுத்தி இதை விட மோசமான நிலைக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்பை நிச்சயமாக இந்த இனவாத சக்திகள் தவற விடப்போவதில்லை.

இவ்வாறான சூழ்நிலைகளின் கீழ் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் யார் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி தமது சொந்த நலன் கருதி ஒற்றுமையாக வாழ வேண்டியது கட்டயாமாகும்.

கடந்த காலங்களைப் போலன்றி இன்று இலங்கை அழிவை ஏற்படுத்தும் சர்வதேச சக்திகளின் ஆடுகளமாக மாற்றப்பட்டுள்ளது. அந்த சக்திகள் எல்லாமே இந்த நாட்டை குட்டிச் சுவராக்கும் தீய நோக்குடன் தமக்கே உரிய சொந்த நிகழ்ச்சி நிரல்களோடு இங்கு நிலை கொண்டுள்ளனர்.

உதாரணத்துக்கு இந்து பாஸிஸவாதிகளான ராஸ்திரிய சுவயம் செவாக் அல்லது RSS இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அடியோடு துடைத்தெறியும் கொள்கைப் பிரகடனத்தை நிகழ்ச்சி நிரலாகக் கொண்ட ஒரு அமைப்பு. அவர்கள் இங்கு உள்ளார்கள் என்பது பொதுவாகத் தெரிந்த ஒரு விடயம். ஊடகம் போன்ற உணர்வுபூர்வமான துறைகளுக்குள் அவர்கள் ஊடுருவி உள்ளார்கள் என்ற சந்தேகமும் பரவலாகக் காணப்படுகின்றது.

இரண்டு வருடங்களுக்கு முன் மரவண்புலவு சச்சிதானந்தன் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோர் RSS அலுவலகத்தைத் திறந்து வைத்தனர். தமிழ் மக்களை முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டிவிடும் RSS சிவசேனா நிகழ்ச்சி நிரல் இதன் மூலம் இங்கு அறிமுகம் செய்யப்பட்டது. இந்து மதத்தை ஊக்குவிப்பதோ அல்லது பிரபலப்படுத்துவதோ அவர்களின் நோக்கம் அல்ல. மாறாக முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்துக்கும் எதிராக இந்துக்களைத் தூண்டி விடுவதுதான் அவர்களின் குறிக்கோள்.

இதுபற்றி மரவண்புலவு சச்சிதானந்தன் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் RSS வவுனியா அலுவலகமானது RSS, விஷ்வ இந்து பரிஷத் மற்றும் சிவசேனா என்பனவற்றின் ஆலோசனை பெற்றே திறந்து வைக்கப்படுவதாகக் கூறினார்.

RSS இங்கு வருகை தந்துள்ளமை பற்றியும் அதன் முஸ்லிம் விரோத நிகழ்ச்சி நிரல் பற்றியும் பலர் அரசுக்கு எச்சரிக்கை விடுத்தனர். இப்போது திருகோணமலை பாடசாலை விடயம் தலை தூக்கியுள்ள நிலையில் அந்த மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப், பாராளுமன்ற

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## மனித நாகரிகத்தின் மதிப்பை உணர்த்த வேண்டும்

காஸாவில் இதுவரை 80 பேருக்கு மேல் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தமது நாடு அந்நியர்களால் ஆக்கிரமிப்பதனை எதிர்த்த நிராயுதபாணி மக்களே இங்கு அநியாயமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். உலக நாடுகளின் எதிர்ப்புக்கு மத்தியில் அமெரிக்க தூதரகத்தை ஜெரூஸலத்துக்கு மாற்றி இஸ்ரேலின் எல்லையை விஸ்தரித்தமைக்கு எதிராக பலஸ்தீன மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதன் போதே இவர்கள் மீது துப்பாக்கிச் சூடுகளும் வான்வழித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 2000 க்கும் மேற்பட்ட பலஸ்தீன மக்கள் இதனால் காயங்களுக்குள்ளாகி இருக்கின்றனர்.

யூதர்களுக்கு ஒரு நாட்டை உருவாக்குவதற்காக பலஸ்தீன் நாட்டிலிருந்த 700,000 க்கும் மேற்பட்ட மக்களைத் துரத்தியடித்த நக்பா தினத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவை அனுஷ்டித்துக் கொண்டிருந்த வேளையிலேயே அம்மக்களுக்கு இந்தப் பேரிடி விழுந்திருக்கிறது. படிப்படியாகத் துண்டாடப்பட்ட பலஸ்தீன பூமிக்குச் சொந்தமானதென ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட கிழக்கு ஜெரூஸலத்தையும் ஆக்கிரமிக்கும் வகையிலேயே அமெரிக்கா டெல் அவிவில் இருந்த தனது தூதரகத்தை கிழக்கு ஜெரூஸலமுக்கு மாற்றியது.

உலக நியதிகள் அனைத்தையும் மீறுகின்ற அநியாயமானதொரு செயற்பாடாகவே உலகம் முழுவதும் இதனைக் கருதுகின்ற போதும் அமெரிக்கா இந்த அடாவடித் தனங்களைப் புரிந்திருப்பதன் மூலம் நீதி,நியாயங்களை காலில் போட்டு மிதித்திருக்கிறது. உண்மையில் இது மனித நாகரிகத்துக்கே பெரும் அச்சுறுத்தலாகும். இந்தக் காட்டுமிராண்டித் தனத்தை உலகெங்கும் பரப்புவதே அமெரிக்காவை ஏற்றுக் கொண்ட நாடுகள் செய்கின்ற வேலையாகும்.

அந்த வகையில் தான் இலங்கை அரசாங்கமும் இந்த அநியாயத்துக்கு எதிராக குரலெழுப்பாது மௌனித்து வருகிறது. அகிம்சையையும் அமைதியையும் போதிக்கும் பௌத்த தர்மத்துக்கு அரசியல் யாப்பில் முதலிடம் கொடுக்க வேண்டும் என்று யாப்பு வரைபவர்கள் எவருமே, காஸாவில் நடைபெறும் கொடூரமான படுகொலைகளை கண்டும் காணாமல் இருப்பது அகிம்சை நாட்டின் பிரஜைகளை வெட்கித் தலைகுனிய வைக்கிறது. அநியாயமும் அநீதியும் எங்கு நடந்தாலும் அதற்கெதிராகக் குரலெழுப்பவும் முடியாத நிலைக்கு இலங்கை அரசாங்கம் இழிவடைந்திருப்பது அப்பட்டமான அடிமைத்தனமாகும்.

கூட்டரசாங்கம் கடைப்பிடித்து வருகின்ற கொள்கையில்லாத வெளிநாட்டுக் கொள்கையே இதற்குக் காரணமாகும். நாட்டு மக்கள் நாட்டுத் தலைமைகளிடம் எதிர்பார்ப்பது இறைமையுள்ள அரசைப் பாதுகாப்பதாகும். அந்த வகையில் தனது நட்பு நாடொன்றுக்கு அநியாயம் நடக்கும் போது அதற்கெதிராகக் குரல் கொடுக்கின்ற தார்மீகக் கடமையைச் செய்வதற்கு வேறெந்த நாட்டினதும் தயவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது இறையாண்மையுள்ள ஒரு நாட்டுக்குப் பொருத்தமானதல்ல.

நல்லாட்சி என்று சொல்லிக் கொண்டு பதவியேற்றதில் இருந்து இந்த அரசாங்கம் அநியாயமிழைக்கப்பட்டுள்ள பலஸ்தீன் மக்கள் தொடர்பில் ஓரவஞ்சனையுடனேயே நடந்து கொள்கிறது. அங்கு அநியாயமாகப் படுகொலை செய்யப்படுகின்ற பச்சிளம் பாலகர்கள், அப்பாவிகள், பெண்கள் தொடர்பில் கவலை தெரிவிப்பதற்குக் கூட அது பயப்படுகிறது. இந்த நிலையில் இன, மத வேறுபாடுகளைத் தாண்டி அரசின் மனிதாபிமான உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான அழுத்தங்கள் பல்வேறு தரப்புக்களிடமும் இருந்து வெளிப்படுத்தப்படுவது முக்கியமானதாகும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருலை வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srockwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# நீதித்துறை (திருத்தச்) சட்டம்:

## நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டும்

• மெய்விளம்பி

நீதித்துறை திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் 67 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு ஆதரவாக 119 வாக்குகளும் எதிராக 52 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி, ஆளும் கட்சியில் உள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாக வாக்களித்தனர். ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆளும் கட்சியிலிருந்து எதிர்க் கட்சிக்குச் சென்ற உறுப்பினர்களுமாக 52 பேர் இதற்கு எதிராக வாக்களித்தனர்.

8 ஆவது நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் 2ஆம் அமர்வு, கடந்த 09ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு, ஆரம்பமானது. இதன் போது, நீதித்துறைத் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதம் நடைபெற்றது. பெரும் ஊழல் மோசடிகள் மற்றும் திருட்டுச் சம்பவங்கள் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு மூன்று நீதிபதிகள் அடங்கிய நிரந்தர நீதாய மேல் நீதிமன்றங்களை அமைப்பதற்கு நீதித்துறை சிறப்பு ஏற்பாடுகள் திருத்த சட்ட வரைவு நீதியமைச்சர் தலதா அத்துகோரலவினால் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இதையடுத்து அந்த திருத்தச் சட்ட மூலம், மாலை 6.30க்கு, வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது, ஆதரவாக 119 வாக்குகளும் எதிராக 52 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன.

இவ்வாக்கெடுப்பு, இலத்திரனியல் முறை மூலம் இடம்பெற்றது. இதில், காமினி லொக்குகே, பந்துல குணவர்தன, துரைரட்ணசிங்கம் ஆகியோர் வாய்மூல வாக்களிப்பைச் செய்தனர். இவ்வாக்கெடுப்பில், ஜே.வி.பியினர் கலந்துகொள்ளாததுடன், அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எதிராக வாக்களித்திருந்தனர்.

இந்தத் திருத்தச் சட்டம் அண்மைக் காலத்தில் சகலராலும் பேசப்படுகின்ற ஒரு விடயமாகவே காணப்பட்டது. அதுவும் எதிர்த் தரப்பினர்களில் ஒரு பிரிவினருக்கு இது கிலியை ஏற்படுத்தும் ஒரு விவகாரமாகவே உள்ளதை அவர்களின் வாதங்கள் வெளிக்காட்டி நின்றன. அரசியல் பழிவாங்கல் நோக்குடன் கூடியதாக இந்தத் திருத்தச் சட்ட மூலம் கொண்டுவரப்படுவதாக ஒன்றிணைந்த எதிர்க் கட்சித் தரப்பினர் தெரிவித்து வருகின்றனர்.


இந்த சட்டவரைவுக்கு எதிராக மகிந்த ஆதரவு கூட்டு எதிரணி உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தது. அதனை ஆராய்ந்த உயர் நீதிமன்றம் நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும் அல்லது அரசமைப்புக்கு முரணான சரத்துக்களில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது.

உண்ட நஞ்சுக்குத்தான் பயப்பட வேண்டும். உண்ணாத நஞ்சு குறித்து ஏன் அஞ்ச வேண்டும் அல்லது அலட்டிக் கொள்ள வேண்டும் என்ற கேள்வி இங்கே எழுகிறது.

2015 இல் நல்லாட்சி அரசு பதவிக்கு வரும்போது நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் மிக முக்கியமான வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டே விசேட நீதிமன்றங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருக்கும், நீதியமைச்சர் தலதா அத்துகோரள அரசின் இந்த நடவடிக்கை எவர் மீதும் பழிவாங்கும் நோக்கத்துடன் கூடியதல்லவெனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் ஒன்றிணைந்த எதிரணியினர் எப்படியேனும் நீதித்துறை திருத்தச் சட்டமூலம் கொண்டுவரப்படுவதைத் தடுப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். முதலில் கொண்டுவரப்பட்ட திருத்தம் தொடர்பில் உயர் நீதிமன்றம் சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியதை அடுத்து அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் எந்தவொரு தரப் ... கொண்டுவரப்பட்டதல்ல. நீண்ட காலத்



தேவையாகக் காணப்பட்ட சட்டமூலமே கொண்டுவரப்பட்டுள்ளது. பொதுமக்களின் பணத்தை, பொதுச் சொத்துக்களை கொள்ளையடித்தவர்களை சட்டத்தின் முன்னால் நிறுத்தி தண்டிப்பது கட்டாயமானதாகவே நோக்க வேண்டியுள்ளது. இதனைச் செய்ய வேண்டிய கடப்பாடு அரசுக்குரியதாகும். இதில் எவர் விடயத்திலும் பாரபட்சம் காட்டப்படக் கூடாது என்பதில் அரசு உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்ற போதிலும் அவை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதில் நீண்ட கால தாமதம் காணப்படுகின்றது. இது மக்களுக்களித்த வாக்குறுதிகள் மீறப்படுவது போன்ற பார்வையையே காட்டுகின்றது. மோசடிகளில் தொடர்புபட்ட அரசியல்வாதிகள் தப்பித்துக் கொள்வதற்கு இந்தக் காலதாமதம் வகை செய்வதாகவே உணர முடிகிறது. கடந்த காலத்தைப் போன்று நல்லாட்சியிலும் தாமதத்துக்கு இடமளித்தால் மக்கள் நம்பிக்கையிழக்கும் நிலையே உருவாகலாம்.

உயர் நீதிமன்றங்களில் நாளாந்தம் வழக்குகள் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வழக்குகள் குவிந்து காணப்படுவதால் ஊழல் மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதில் நீண்ட கால தாமதம் ஏற்படுவதன் காரணமாகவே விசேட நிதிமன்றங்கள் மூன்றை அமைக்க நீதியமைச்சு முடிவெடுத்தது. இதில் எந்தவிதமான உள்நோக்கங்களும் கிடையாது. பாரபட்சமற்ற விசாரணைகளை முன்னெடுப்பதே நோக்கமென அரசு தெரிவித்திருக்கின்றது. இதனை பெரும் தவறாகக் கருத முடியாது.

நல்லாட்சி அரசு பதவிக்கு வந்து மூன்று வருடங்கள் முடிந்த நிலையிலும் ஊழல், மோசடிகளில் சம்பந்தப்பட்டவர்கள் மீது எந்தவித சட்ட நடவடிக்கைகளும் எடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது. அரசாங்கத்தினால் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்றுக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகவே மக்கள் கருதுகின்றனர். அரசு குற்றவாளிகளை பாதுகாக்கின்றதா என்ற மனநிலையும் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

ஊழல் மோசடியை நிறுத்துவதற்கு சட்ட ரீதியான பொறிமுறையொன்றை உருவாக்குமாறு சிவில் சமூகங்கள் உட்பட புத்திஜீவிகள் பல தடவைகள் கோரிக்கை விடுத்து வந்தனர். அதன் பிரதிபலனாகவே ஊழல் மோசடிகளை விசாரிக்க தனியான விசேட நீதிமன்றங்களை அமைக்க அரசு திட்டம் வகுத்து இதன் பொருட்டே நீதித்துறை திருத்தச் சட்ட மூலம் கொண்டுவரப்பட்டது. உண்மையிலேயே வழக்குகள் தேங்குவதை முடிவுக்குக் கொண்டுவர இத்திருத்தச் சட்டம் வழி வகுக்கும். ஆரம்பத்தில் மூன்று நீதிமன்றங்களை மட்டுமே அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விசேட நீதிமன்றங்கள் விடயத்தில் மட்டுமல்ல சாதாரணமாக உள்ள நீதிமன்றங்கள் விடயத்தில் கூட குற்றமிழைத்தோர் தப்பிப்பதற்கு வழிதேடிக் கொண்டிருப்பதையே நோக்க வேண்டியுள்ளது. ஊழல் மோசடிகளில் தொடர்புபட்டவர்கள் இருப்பினும் அவர்கள் பாரபட்சமின்றி தண்டிக்கப்பட வேண்டியவர்களாவர். ''பெரிய திமிங்கிலங்கள் தப்புகின்றன. நெத்தலிகள் மட்டுமே வலையில் சிக்கி மாய்கின்றன''. இந்த நிலை மாற வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அரசு இப்போது எடுத்திருக்கும் முடிவு சரியானதே என்பதை மறுக்க முடியாது. ஊழல், மோசடிக்காரர்கள் இனியும் தப்புவதற்கு இடமளிக்கப்படக் கூடாது. விரைவான நடவடிக்கைகள் மூலம் குற்றவாளிகளுக்கு உச்சபட்சத் தண்டனை வழங்கப்பட வேண்டும். நீதித்துறை மீது மக்களின் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டும். அதற்கு இந்தப் புதிய திருத்தச் சட்டமூலம் வழிவகுக்கும் என நம்பலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றவூப் ஸெய்ன்

# திகன - இன்னும் கிடைக்காத நீதி!?

## முழுயான நஷ்டஈடு இன்னும் வழங்கப்படவில்லை

## அரசியல்வாதிகளின் 30 நாள் காலக்கெடு முடிந்துவிட்டது

## விசாரணை அறிக்கை இன்னும் வெளிவரவில்லை

இழுத்தடிப்பு அரசியலுக்கு தெற்காசிய நாடுகளின் அரசாங்கங்கள் பிரபலமானவை. பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட காட்சியை இந்தியத் தொலைக்காட்சிகள் ஒளிபரப்புச் செய்தன. இந்துத்துவ கரசேவகர்கள் 400 ஆண்டுகால பழமைவாய்ந்த இந்தப் பள்ளிவாயலை விதம் விதமாக உடைத்து நொறுக்கும் காட்சிகளில் குற்றவாளிகள் யார் என்பது முழு இந்தியாவுக்குமே தெரிய வந்தது.

ஆனால், குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கு காங்கிரஸ் அரசாங்கம் ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் விசாரணைக் குழுவொன்றை நியமித்தது. இந்திய நீதித்துத் துறை வினோதம்; 18 ஆண்டுகளின் பின்னர் விசாரணை அறிக்கை வெளிவந்தது. அப்படி வெளிவந்தும் எந்தக் குற்றவாளியும் (உண்மையான பின்னணிச் சூத்திரதாரிகள்) இதுவரை தண்டிக்கப்படவுமில்லை.

வன்முறையின் தீவிரமும் மக்கள் அதன் மீது கொண்டிருந்த கோபாவேசமும் 18 ஆண்டுகளில் தணிந்து விடும் என்ற கணிப்பீட்டில்தான் நீதித்துறை செயல்பட்டது. அதன் முக்கிய குற்றவாளிகளில் ஒருவர்தான் இன்று இந்தியப் பிரதமராக இருக்கும் நரேந்திர மோடி என்பது வேறு கதை. சட்டம் என்ற இருட்டறையில் நீதி தேவதை குறட்டை விட்டும் உறங்கும் இந்தக் காட்சி நமது நாட்டுக்கும் நன்கு பொருந்துகிறது.

திகன இனவெறியாட்டத்தின்போது கடைகளைக் கொள்ளையடித்து, பள்ளிவாயல்களுக்குத் தீயிட்டு, மௌலவிமார்களை அதிரடிப் படையினர் வெளியே இழுத்து வரும் காட்சிகள் CCTV இல் பதிவாகியுள்ளன. கலவரத்தைத் தூண்டியதாகக் குற்றம் சாட்டப்பட்ட அமித் சிங் என்பவனின் அலுவலகம் சுற்றிவளைக்கப்பட்டு முஸ்லிம்களுக்கு எதிரான இனவெறியைத் தூண்டும் துண்டுப் பிரசுரங்கள், பெற்றோல் குண்டுகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகத் துறை பேச்சாளர் அப்போது கூறிவந்தார்.

சுமார் இரண்டு மாதங்கள் கடந்த நிலையில், எவரும் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு குற்றவாளியாய் அறிவிக்கப்படவில்லை. தண்டனைத் தீர்ப்புக்களும் வழங்கப்படவில்லை. அமித் சிங் அனுதாரபுரச் சிறையில் உள்ளதாகவும் விசாரணைகள் இன்னும் தொடர்வதாகவும் கைதுசெய்யப்பட்டோரில் குற்றத்தை சான்றுப்படுத்தும் சாட்சிகள் இல்லாதவர்கள் விடுதலையாகி வருவதாகவும் கூறப்படுகின்றது. ஒட்டுமொத்தமாக இவற்றை நோக்கும் போது பாபரி மஸ்ஜித் விசாரணைக் குழுவே நினைவுக்கு வருகின்றது.

குற்றவாளிகள் யாரும் 'தண்டிக்கப்படாவிட்டால் மீளவும் இதே குற்றங்கள் நிகழ்வதற்கான வாய்ப்பு உள்ளதென்ற உண்மையை அனைவரும் அறிவோம். இன்னொரு புறம் இனவெறியாட்டத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நஷ்டஈடு தருவோம் என்று நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முன்னர் வாய் பிளந்த பிரதமர் ''அஞ்சு பத்தைக்'' கொடுத்து சமாளித்து விடலாம் என்பது போல ஒரு கோடிப் பெறுமதியான கடையை இழந்த முஸ்லிமுக்கு 50,000 கொடுக்குமாறு அதிரடி உத்தரவு போட்டு விட்டு அமைதியாகி விட்டார்.

2020 இல் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்கள் வரை திகன இனவெறியாட்டத்தை அரசியல்வாதிகள் இழுத்துச் செல்வார்கள் என்பதில் மண்ணளவும் சந்தேகமில்லை. 2015 தேர்தலுக்கு அளுத்கமை கலவரம் துருப்புச் சீட்டாக இருந்தது போல், 2020 தேர்தலில் திகன எதிரொலிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இன்னும் சிங்களக் காடையர்களால் தாக்கியழிக்கப்பட்ட, எரியூட்டப்பட்ட பள்ளிவாயல்களும் மத்ரஸாக்களும் புகை கவிழ்ந்த நிலையில் காட்சியளிக்கின்றன. எதுவும் முழுமையாக புனர் நிர்மாணம் செய்யப்படவில்லை. இப் பிரதேசத்தில் இயங்கும் முஸ்லிம் நிறுவனங்களும் பிரதேசவாதிகளும் இது குறித்து அரசாங்கம் எதுவும் செய்யவில்லை என்று அங்கலாய்க்கின்றனர். அரசாங்கமோ மூன்றரை ஆண்டுகளாக அமைச்சரவையை மீளமைத்து மீளமைத்து காலத்தை ஓட்டி வருகின்றது.





உலகச் சந்தையில் பெற்றோலியத்தின் விலை குறைவடைந்துள்ள ஒரு தருணத்தில் இலங்கையில் பெற்றோலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. பெரிய சப்பாத்தை அணிந்திருக்கும் நிதியமைச்சர் மங்கள இரு மாதங்களுக்கு ஒரு முறை பெற்றோலிய விலை மீள் பரிசீலிக்கப்படும் என்று ஆறுதல் வேறு சொல்கிறார்.

சமையல் எரிவாயுவின் விலையும் சுமார் 250 ரூவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. நல்லாட்சி என்று கூறப்படுகின்ற அரசாங்கம் கடந்த மூன்று ஆண்டுகளாக மக்களுக்கு வழங்கிய ஒரே சலுகை இந்த 250 ரூபாதான். தற்போது அதனையும் பின்வாங்கிக் கொண்டுள்ளது. ஊழல் பெருச்சாளிகளும் இலஞ்சம் வாங்குபவர்களும் செய்யும் குற்றங்களுக்கு மக்கள் பச்சாதாபப்பட வேண்டியுள்ளது.

ஸ்திரமில்லாத அரசாங்கத்தைத் தக்க வைக்க மக்களைப் பிழியும் இந்த மோசமான கலாசாரத்தில் நீடித்த சமாதானத்தையோ சகவாழ்வையோ குறித்து சிந்திப்பதற்கு ஜனாதிபதிக்கோ அமைச்சர்களுக்கோ நேரம் இருக்காது. அதை இன்றைய திகன பிரச்சினையில் தெளிவாகக் காண்கிறோம்.


பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதில் சட்டப் பிரச்சினை இருப்பதாக ஒரு புதிய விவாதம் மேற்கிளம்பியிருக்கிறது. இனவெறியாட்டம் நிகழ்ந்த போது பாராளுமன்றக் கட்டடத்தில் கட்டாந் தரையில் உட்கார்ந்து ஆட்சேபம் தெரிவித்த முஸ்லிம் அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாதத்தை நாம் நினைவுபடுத்த வேண்டியதில்லை.

இம்முறை முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும் சமையத் தலைவர்களுக்கும் விடுக்கப்பட்ட அம்மணமான [illegible] னங்களும் கண்டனங்களும் [illegible] அவர்களை சூடுகொள்ள வைத்துள்ளது என்றுதான் மக்கள் நம்பினார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு 30 நாள் காலக்கெடு விதித்தபோது முஸ்லிம்கள் உற்சாகமடைந்தார்கள். ஆனால், எல்லாமே அரசியல் கபட நாடகம் என்பது இப்போது வெளிச்சமாகியுள்ளது. மட்டுமன்றி நமது தலைவர்கள் சூடு சொரணை அற்றவர்கள்தான் என்பதும் தெளிவாகியுள்ளது.



இத்தனைக்கும் மத்தியில் அமைதியாக இருங்கள் என்று மக்களை அமைதிப்படுத்தி, அழிவை அதிகப்படுத்திய தலைவர்களையும் காணவில்லை. ரிஷாத் முதல் ஹக்கீம் வரை பதவி மோகம் பிடித்தலையும் தலைவர்களும் தமது கையாலாகாத் தனத்தைக் காட்டிவிட்டனர். களத்திற்குச் சென்று அறிக்கையிட்டவர்கள் அமைதியாகிவிட்டார்கள். காலக்கெடு விதித்த முஸ்லிம் தலைவர்கள் வாய்பொத்தி இருக்கிறார்கள். மூன்று நாட்களுக்குள் எல்லாவற்றையும் மறக்கும் முஸ்லிம் சமூகம் 60 நாட்கள் கடந்த நிலையில் இதுபோன்ற அனர்த்தங்களை மறக்காமல் இருப்பதுதான் ஆச்சரியமானது.

அரசாங்கத்தில் அட்டை போன்று ஒட்டிக் கொண்டிருந்தால்தான் தமது சுகபோகமும் சுகண்டியும் நீடிக்கும் என்பதை கணித்து வைத்துள்ள இவர்கள், எல்லாவற்றையும் அடக்கி வாசிக்கின்றனர். ஹக்கீம் சட்டம் ஒழுங்கு அமைச்சராக இருந்தபோதே காலி கிந்தோட்டைக் கலவரம் நிகழ்ந்தது. அப்போது ''நான் அமைச்சராக இருக்க வெட்கப்படுகிறேன்'' என்று உணர்ச்சி ததும்பக் கூறிய அவர் வெட்கமில்லாமலேயே அமைச்சரவையில் நீடித்தார். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள், யாரும் விட்டு வைக்கப்பட மாட்டார்கள் என்று ரணில் கூறிய வார்த்தைகள்தான் அன்றைய நாட்களில் தமிழ் பத்திரிகைகளின் தலைப்புச் செய்தியாகியது.



திகன வெறியாட்டத்தில் இதே ரணில், இதே வாக்குறுதியைத்தான் வழங்கினார். ஆனால்; முஸ்லிம்களைக் கொல்ல வந்தவனுக்கும் இனவெறியாட்டத்தில் கொல்லப்பட்ட சிங்களவனுக்கும் ரணில் அரசு நஷ்டஈடு வழங்கியது. குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது. இன்று சட்டத்திலும் நீதித் துறையிலும் நாம் நம்பிக்கையிழக்கிறோம் என்கிறார் அமைச்சர் ஹக்கீம்.

திகன கலவரத்தின்போது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் ''நான் முஸ் [illegible] என்று அறிக்கை [illegible] குச் சென்ற அமைச்சர் ரிஷாத் பொலிஸாரும் விஷேட அதிரடிப்படையினரும் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அனைத்தும் நிகழ்ந்தது என்று அரசாங்கத்தை கடுமையாகச் சாடினார். ஆனால், இன்று இவர்கள் எல்லோரும் அதே அரசாங்கத்தில் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் உள்ளனர். சுகண்டியோடும் சுகபோகத்தோடும் உல்லாசமாக உலா வருகின்றனர்.



சமூகத்தின் இருப்புக்காக தமது பதவியை துறக்கும் அளவுக்கு இவர்கள் ஒன்றும் பெரிய தியாகிகள் அல்லர். ஆயினும், முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளாய் இவர்கள் இருக்கத் திராணியற்றவர்கள் என்பதை பலமுறை நிறுவிவிட்டார்கள். போராடப் போனவன் புறமுதுகு காட்டி ஓடிவந்தது போல் உரிமைப் போராட்டம் நடத்தச் சென்ற முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அநியாயம் செய்கின்ற அரசாங்கத்தின் பக்கம் நின்றே முஸ்லிம்களுக்காக தன்னால் எதுவுமே செய்ய முடியாது என்று கையை விரித்து தன் கையாலாகத் தனத்தைக் காட்டி விட்டார். இது ஹக்கீமுக்கு மட்டுமன்றி ரிஷாத் மற்றும் பைசர் முஸ்தபா போன்ற அமைச்சர்களுக்கும் பொருந்தும்.

கடந்த வாரம் அம்பாறை, கண்டி சம்பவங்கள் தொடர்பாக ஓர் அமைச்சராகவும் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதியாகவும் பாராளுமன்றத்தில் றவூப் ஹக்கீம் ஆற்றிய உரையைப் பாருங்கள்.

''அம்பாறை, கண்டி சம்பவங்களைப் பார்க்கும்போது சட்டம் ஒழுங்கு விடயத்தில் பாரிய நம்பிக்கையீனம் ஏற்பட்டுள்ளது. சொத்துக்களுக்கு உறுதியில்லாத காரணத்தினால் நஷ்டஈடு வழங்குவதில் சில பிரச்சினைகள் தோன்றியுள்ளன. முழுமையாக தீக்கிரையாக்கப்பட்ட இடங்களில் முஸ்லிம்கள் தமது சொத்துக்களை சான்றுப்படுத்துவது எப்படி'' என்று கேள்வியெழுப்பினார் அவர்.

தான் அங்கம் வகிக்கும் அரசாங்கம் என்ற வகையிலும் நம்பிக்கையில்லாப் பிரேரணையிலிருந்து தான் காப்பாற்றிய பிரதமர் என்ற வகையிலும் தனது பேரம் பேசும் ஆற்றலையும் அரசியல் 'சாணக்கியத்தையும்' கையாண்டு, அமைச்சரவையிலுள்ள சக அமைச்சருடன் பேசித் தீர்க்க வேண்டிய ஒரு பிரச்சினையை பாராளுமன்றத்தில் 'உரிமைக் குரலாக' முழங்கும் இத்தகைய தானைத் தளபதிகள்தான் நமது அரசியல் தலைவர்கள் என்பது குறித்து நாம் வெட்கப்பட வேண்டும்.

எல்லாம் பற்றி எரிந்து விட்டது என்பதற்கு கடைகளும் பள்ளிகளும் சாட்சியாக இருக்க, அதற்கு உறுதிகளைக் கோருவது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பதை சட்டம் ஒழுங்கு அமைச்சருக்கு சொல்ல வேண்டிய பொறுப்பு இந்த அமைச்சருக்கு உண்டு. அதை விடுத்து தலைவர்கள் என்போரும் சமூகத்தோடு சேர்ந்து ஒப்பாரி வைப்பதை நாம் எவ்வாறு ஒப்புக்கொள்வது.

நல்லாட்சியைக் கொண்டு வருவோம். தேசிய இனப் பிரச்சினைக்கு நிலைத்த தீர்வு காண்போம் என்று மைத்திரியும் ரணிலும் சந்திரிக்காவும் ஏன் சம்பிக்கவும் உட்கார்ந்திருந்த மேடையில் முழங்கிய ஹக்கீம் இன்று என்ன சொல்கிறார் என்று கேளுங்கள்.

''ஜனாதிபதியின் உரையில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் அணுகுமுறையைக் கூறும் விடயத்தில் ஒரு நழுவல் போக்கு கடைப்பிடிக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது. ஓரிரு இடங்களில் மாத்திரமே சிறுபான்மை விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். தமிழ் முஸ்லிம் மலையக மக்களின் சமவுரிமை, கலாசாரம் தொடர்பில் இங்கு பேசப்பட்டதே ஒழிய வேறு எதுவுமே அவரது உரையில் முன்மொழியப்படவில்லை. தேசிய அரசாங்கத்தின் கொள்கை விளக்கத்தில் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு பற்றி எதுவும் கூறப்படவில்லை.

புதிய அரசியலமைப்புக்கான வழிநடத்தல் குழுவில் நானும் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பலரும் உள்ளோம். குழு என்ற வகையில் 78 தடவைகள் நாம் சந்தித்துப் பேசியுள்ளோம். தற்போது அந்த வழிநடத்தல் குழுவின் எதிர்காலம் என்ன என்பது சந்தேகத்திற்கு இடமானது. இடைக்கால அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தும் அதன் அடுத்த கட்ட நடவடிக்கையைச் செய்ய முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றோம்'' என்றார் ஹக்கீம்.

இப்போது இலங்கையில் தடுமாறுவது நல்லாட்சி அரசாங்கம் மட்டுமல்ல. முஸ்லிம் அரசியல்வாதிகளும்தான் என்பதை அமைச்சர் ஹக்கீமின் இந்த உரை வெளிப்படுத்துகின்றது.

முஸ்லிம்களின் கூட்டங்களில் தமிழில் உரையாற்றும் போது இந்தத் தலைவர்கள் வீறாப்புப் பேசுகிறார்கள். வீராவேசம் போடுகின்றனர். ஆனால், அரசாங்கத்தை அழுத்துவதிலோ மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப பேரம் பேசுவதிலோ ஒதுங்கியிருக்கிறார்கள். கிந்தோட்டை முதல் திகனை வரை இவர்களிடமிருந்து சமூகம் எதிர்பார்த்து ஏமாந்ததுதான் மிச்சம்.

2009 ரமழானில் முஸ்லிம்கள் இரவு வேளைகளில் கிரீஸ் பூதங்களை எதிர்கொண்டார்கள். இப்போது எந்த வேளையிலும் தமக்கெதிராக இனவெறிப் பூதங்கள் வெளிவரலாம் என்று அஞ்சுகிறார்கள். அரசியல் சந்தர்ப்பவாதிகளாலும் அரைகுறை ஆலிம்களாலும் பந்தாடப்படும் முஸ்லிம்களின் தலைவிதி இந்த ரமழானில் எந்த நெருக்கடியையும் எதிர்கொள்ளாதிருக்கப் பிரார்த்திப்போமாக! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுவது நலம்



இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

# நக்பா தினம்:
## பலஸ்தீன் மக்களின் விடுதலைக்காக பிரார்த்திப்போம்

பலஸ்தீன் மக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி மே 15 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் நக்பா தினம் அல்லது பலஸ்தீனத்தின் துக்க தினத்தினையொட்டி உலகம் பூராகவும் ஒத்துழைப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகிறது. பலஸ்தீன மக்கள் எதிர் கொண்ட துயரத்தின் துவக்க தினமாகவே மே 15 ஆம் திகதி உலகம் பூராகவும் நோக்கப்படுகிறது. அதற்கு முன்பிருந்தே அதற்கான செயற்பாடுகள் நடந்தேறிய போதும் துயரத்தின் உத்தியோகபூர்வ துவக்க தினமாக இன்றைய நாள் கருதப் படுகிறது.

இது இலட்சக் கணக்கான பலஸ்தீன மக்கள் தாம் பிறந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட நாள் ஆகும். அவர்கள் பிறந்த பூமியிலும் அதற்கு வெளியிலும் அகதிகளாக்கப்பட்ட தினம் ஆகும். இலட்சக் கணக்கான பலஸ்தீன மக்களின் உயிர் கள் அநியாயமாகப் பறித்தெடுக்கப்பட்ட தினம் ஆகும். அவர் களுக்கு துன்பம், துயரம், மனவேதனை மற்றும் அவர்களது வாழ்க்கையின் இருள் சூழ்ந்த காலகட்டம் ஆரம்பிக்கப்பட்ட தினம் ஆகும்.

இலட்சக் கணக்கான பலஸ்தீன அகதிகள் போன்றே காஸா வின் எல்லைகளில் சுதந்திரத்திற்காக போராடுகின்ற ஆயிரக் கணக்கான பலஸ்தீன் விடுதலைப் போராளிகளுக்கு பலஸ்தீன பூமியானது வெறுமனே வெற்றுக் காணித் துண்டு அல்ல. அவர் களது போராட்டமானது இதுவரை அதற்காக உயிர்நீத்தவர் களுக்காகவும் எதிர்காலத்தில் பிறக்கவுள்ள பலஸ்தீன மக்களுக் காகவும் முன்னெடுக்கப்படும் ஒரு நியாயமான விடுதலைப் போராட்டம் ஆகும்.

இப்போராட்டத்தினை அவர்கள் எழுபது வருடங்களாக தாங்கிக் கொண்டிருப்பது உண்மையிலேயே ஓர் அதிசயம் ஆகும். உலக மக்களின் விருப்பத்திற்கும் ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களுக்கும் எதிராக வீட்டோ (Veto) அதிகாரம் பலஸ் தீன பூமியை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள ஆக்கிரமிப் பாளர்களுக்கு கிடைக்கின்றது.

ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கு எதுவித மதிப்பும் அளிக்கப்படாது உலகின் அதியுயர் ஆயுத பலத்தின் ஆசீர் வாதமும் ஒத்துழைப்பும் இந்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு தொடர்ந்தும் கிடைத்து வருகிறது. ஒரு சில நாடுகளில் அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளும் தலைவர்கள் தமது நாட்டின் பெரும்பான்மையினரின் பேராதரவைப் பெறுவதற்கு அழுத்தத் திற்கும் அடக்குமுறைக்கும் ஆளாக்கப்பட்ட மக்கள் எழுச்சிக்கு எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு ஆதரவு தெரிவிக்கின்றார்கள்.

ஆயினும் பதவிக்கு வந்த பின்னர் அதிகார மற்றும் பலம் ஆகியவற்றிற்கு முன்னாள் பயனற்றவர்களாக மாறி அடக்கு முறை மற்றும் அழுத்தம் ஆகியவற்றைப் பிரயோகிக்கும் சக்தி களின் கையாட்களாக மாறுவதனை இன்று நாம் உலகின் ஒருசில பகுதிகளில் காண்கின்றோம்.

சில அரசியல் தலைவர்கள் முதற்தர சொகுசு விமானப் பிரயாணங்கள், ஐந்து நட்சத்திர சுற்றுப் பயணங்கள் என்ப வற்றுக்காக தனது சுயகௌரவத்தை விட்டுக் கொடுத்து கூட்டத் தோடு வெளிநாட்டுப் பயணங்களுக்காக கிடைக்கப்பெறும் அழைப்பினை ஏற்று உன்னதமான கொள்கைக்கான தமது அர்ப்பணிப்பினைத் தாரை வார்க்கின்றார்கள். அன்று காலனித் துவத்திற்கு உட்பட்டிருந்த எமது நாட்டை விடுவிப்பதற்கான முயற்சியின் போது ஏகாதிபத்தியவாதிகள் எமது சமூகத்தின் மத்தியில் இன, மத, சாதி போன்றே மேல்நாடு, கீழ்நாடு என பாகுபாடு ஏற்படுத்தியமை எனது நினைவுக்கு வருகிறது.

அதேபோல் இன்று மத்திய கிழக்குப் பிராந்தியத்திலும் பலஸ்தீனர்களிடையிலும் தந்திரமாக பாகுபாட்டினை உருவாக்கி அதனூடாக அவர்களது ஆதிக்கத்தை முன்னெடுத்துச் செல் வதற்கு அவர்களால் மேற்கொள்ளப்படும் முயற்சியை நாம் இன்று தொடர்ச்சியாக காண்கின்றோம். ஆயினும் தனது இலட்சி யத்தைத் தளரவிடாமல் இன்றுவரை தமது தாய்நாட்டின் சுதந் திரப் போராட்டத்தினை தொடர்ச்சியாக அவர்கள் முன்னெடுத் துச் செல்வதை நாம் பார்க்கின்றோம்.

இப் பேரவலம் தொடர்பாக உரியவாறு அணுகப்பட்டு நியாயம் வழங்கப்படும் வரை மத்தியகிழக்குப் பிராந்தியத்தின் ஸ்திரத் தன்மை மற்றும் அமைதியானதோர் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பதற்கு முடியாதுள்ளது. காலனித்துவ ஆட்சியாளர்களிடம் இலங்கையர்களான நாம் சுதந்திரம் பெற்று 'இந்த வருடத்துடன் எழுபது ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளது. பலஸ்தீன மக்களின் விடுதலைக்கான் போராட்டத்திற்கும் இந்த ஆண்டில் எழுபது வருடங்கள் பூர்த்தியடைகிறது.

தமது வாசஸ்தலங்களின் திறவுகோல்களைக் கையில் ஏந்திய வாறு தாய்நாட்டின் சுதந்திரத்திற்கான பிரார்த்தனைகளுடன் எழுபது ஆண்டுகளாக நீண்டகால சுதந்திரப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தியுள்ள பாலஸ்தீனர்களுக்கு உலகவாழ் மக்க ளின் விருப்பத்துடன் இணைந்து இன்றைய தினத்தில் நாம் எமது ஒத்துழைப்பினை வழங்குவோம்.

# முஸ்லிம் - தமிழ் உறவின் எதிர்காலம்

• மொஹமட் பாதுஷா

நகமும் சதையும் போன்ற தொடர்பைக் கொண்டிருந்த முஸ்லிம்களுக்கும் தமிழர் களுக்கும் இடையிலான உறவு, இப்போது பின்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறதோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. அபாயா விவ காரம் உள்ளடங்கலாக, இரண்டு இனங்களு டனும் தொடர்புபட்ட பல விடயங்களை, வெளிப்புறச் சக்திகள் தங்களுடைய நலனுக் காக அரசியலாக்கி, பூதாகரமாக்கி விடுகின் றமையாலும், தமிழ், முஸ்லிம் அரசியல் வாதிகளின் செயற்பாடுகளாலும் இந்த உறவில், கீறல் விழத் தொடங்கியுள்ளதோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இன நல்லிணக்கம் பற்றிப் பேசிப் பேசியே உள்ளுக்குள் பகைமைத் தீயை வளர்த்துக் கொண்டிருக்கும் சமூகங்களாக, சிறுபான்மை யினர் மாறியிருக்கின்றனர். தமிழ் - முஸ்லிம் உறவின் ஆரம்பம் எதுவெனச் சரியாகச் சொல்ல முடியாதபடி, அவ்வுறவு தொன்மை யானது. இன்றும்கூட, முஸ்லிம்களின் பல நடைமுறைகளில் தமிழ்க் கலாசாரத்தின் தாக்கம் இருப்பதைக் காணமுடியும்.

அதேபோன்று, தமிழர் வாழ்விலும் முஸ் லிம்களின் பழக்க வழக்கங்களின் தாக்கம் இருக்கின்றது. எனவே, வடக்கு, கிழக்கு போன்ற மாகாணங்களில் இரண்டறக் கலந் தும், ஏனைய பகுதிகளில் அயலவர்களாகவும் வாழ்ந்து வருகின்ற இவ்விரண்டு இனங் களுக்கும் இடையில், பரஸ்பர கலாசார ஒற்றுமைகள் சிலவும், பிரத்தியேக வேறு பாடுகள் பலவும் காணப்படுகின்றன.

முஸ்லிம்களும் தமிழர்களும் சமூக ரீதி யாகவும் வாழ்வியல் ரீதியாகவும் பல ஒற்று மைகளைக் கொண்டிருந்ததற்குச் சமாந்திர மாக, இவ்விரண்டு இனங்களும் ஒருமித்தே அரசியலில் பயணித்ததை மறந்துவிட முடி யாது. காலங் காலமாக, ஐக்கிய தேசியக் கட்சியிலும் சுதந்திரக் கட்சியிலும் இணைந்து பணியாற்றியதன் மூலம், பொது அரசிய லைக் கற்றுக் கொண்ட முஸ்லிம்கள், தங்க ளைத் தனித்துவ அடையாள அரசியலில் புடம்போட்டுக் கொள்வதற்கு, தமிழரசுக் கட்சி ஒரு பாசறையாக அமைந்திருந்தது.

மர்ஹூம்களான மசூர் மௌலானா, எம். எச்.எம். அஷ்ரப் என எத்தனையோ பேர், தமிழரசுக் கட்சியுடன் இணைந்து பணி யாற்றினர். அதேநேரத்தில், தமிழர்கள் ஈழப் போராட்டத்தில் ஈடுபட்ட வேளையிலும், முஸ்லிம்கள் தம்மாலான பங்களிப்புகளைச் செய்திருக்கின்றார்கள் என்பதை யாராலும் மறுக்கவியலாது. எத்தனையோ முஸ்லிம் இளைஞர்கள், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், கணிசமான பண உதவி களையும் முஸ்லிம்கள் செலுத்தியிருந்தனர். அதற்காக, நாட்டுக்கு விசுவாசமற்றவர்களாக இருக்கவில்லை. அரசாங்கத்துக்கும், நாட்டுக் கும் விசுவாசமாக இருந்து கொண்டு, தமிழர் களின் நியாயமான போராட்டத்துக்கு ஆதர வளித்துக் கொண்டும் இருந்த ஒரேயோர் இனம் முஸ்லிம்கள் மட்டுமே என்றால் மிகை யாகாது.

ஆனால், வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை, கிழக்கில் பள்ளி வாசல்களில் நடந்த படுகொலைகள், கல் முனையில் நடைபெற்ற வன்முறைகள் போன்ற இன்னோரன்ன காரணங்களால், முஸ்லிம் சமூகம் சார்ந்த அரசியல் என்பது, தனிவழியில் பயணிக்க வேண்டிய நிலை, ஏற்பட்டது என்பதே உண்மையாகும்.

ஏதோ ஒரு காரணத்துக்காக ஆயுதம் தரித் தவர்கள், முஸ்லிம்களை மாற்றாந் தாய் மனப்பாங்குடன் பார்த்த அதேவேளையில், தனியாகத் தமிழர்களின் நலனைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட தமிழ்க் கட்சி களும், தனியாக முஸ்லிம்களுக்காக உரு வான முஸ்லிம் கட்சிகளும், இந்த விரிசலை மேலும் பெரிதாக்கி, அதில் அரசியல் இலா பம் உழைத்துக் கொண்டு வருகின்றன.

எவ்வாறிருப்பினும், அவசரத்துக்கு உத வும் அயலவன் போல, பேரினவாதத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கும் கூட்டாளிகள் போல, ஒரே மொழியைப் பெரும்பாலும் பேசுகின்ற சமூகங்கள் போல, பல அடிப் படைகளில் முஸ்லிம்கள் தமிழர்களுடன் இணைந்து வாழ்கின்றனர்.

ஆனால், இதற்குள் ஒரு தரப்பினர் பிரி வினையைத் தோற்றுவித்து இனவாத, மத வாதக் [illegible] காய நினைக்கின்றார்கள் என்பதையே இங் [illegible]

கோணமலையில் தொடங்கிய அபாயா எதிர் ப்பு நடவடிக்கைகளும் அதன் எதிர்விளைவு களும் சொல்லாமல் சொல்லிக் கொண்டி ருக்கின்றன.

திருகோணமலையில் உள்ள இந்துப் பாட சாலையொன்றில் கற்பிக்கும் முஸ்லிம் ஆசி ரியைகள், தங்களது கலாசார ஆடையான அபாயாவை அணிந்து பாடசாலைக்கு வரக் கூடாது என்றும் சேலையை அணிந்தே வர வேண்டும் என்றும் பாடசாலை நிர்வாகம் சொல்லியுள்ளது.

இதையும் மீறி, அபாயாவை அணிந்து வர முற்பட்ட போது, பாடசாலைக்கு முன்பாக, முஸ்லிம்களுக்கு எதிராக ஓர் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட விவகாரம், பெரும் சர்ச்சையை தோற்றுவித்திருக்கிறது. ஆசிரியைகள் இன, மத பேதங்களுக்கு அப்பால், பொதுவானதோர் ஆடையைப் பின்பற்றுவது நல்லது என்ற அபிப்பிராயம் இருந்தாலும், ஆசிரியைகள் சேலை அணிந்துதான் வரவேண்டும் என்றோ அல்லது அவர்களுக்கான சீருடை என்ன என் பது குறித்தோ, எவ்வித விதிமுறைகளும் கிடையாது.

ஆனால் சுதந்திரமான, ஜனநாயக நாடொன் றில், ஓர் ஆசிரியை, தனக்கு விரும்பிய ஆடை யை அணிந்து, உடலை மூடி வருவதை, எந்த வகையிலும் கலாசாரப் பாதிப்பாக வரையறை செய்ய முடியாது. ஆனால், திருகோணமலை யில் அது நடந்திருக்கின்றது. உண்மையில், சரி பிழைகளுக்கு அப்பால், திருகோணமலை யில் பாடசாலைக்குள் தீர்க்கப்பட வேண்டிய விடயம், இன்று பொது அரங்குக்குக் கொண்டு வரப்பட்டுள்ளமையும், இன்று வெவ்வேறு சக்திகள், அதைப் பூதாகரமாக்கி இருக்கின்ற மையுமே பெரும் சிக்கல்களுக்கு வித்திட் டுள்ளன.

முஸ்லிம் ஆசிரியைகளின் ஆடை பற்றிய மாற்று நிலைப்பாடுகள் இருந்தால், அது உள்ளேயே தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், பாடசாலை நிர்வாகத்துக்குத் தெரிந் தோ தெரியாமலோ, இவ்விவகாரம் இன்று வேறு குழுக்களின் கைகளுக்குச் சென்று விட்டது. அது இன்று, ஒரு தேசிய விவகார மாக ஆக்கப்பட்டிருக்கின்றது. பாடசாலை யில் நடந்த உள்ளகக் கலந்துரையாடல்கள், இரகசியமான முறையில் கசியவிடப்பட்டு, சில செயற்பாட்டுக் குழுக்களால் பெரிது படுத்தப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னணி யில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாகவும் அறிய முடிகின்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து வந்த, அறிக்கைகளைப் பார்க்கின்ற போது, தென்னா சியப் பிராந்தியத்தில் மையங்கொண்டுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட இனவாத, மதவாத அமைப்புகள், எரிகின்ற நெருப்பில் எண்



ணெய் ஊற்றுவதை அனுமானிக்க முடிகின் றது. அந்த அமைப்புகளோடு, தொடர்பில் இருப்பதாகச் சொல்லும் பொது பல சேனா வும், இதைக் கையிலெடுத்து, முஸ்லிம் களுக்கு எதிரான இன்னுமோர் ஆயுதமாக, இதைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளதைக் காணலாம்.

மாறாக, ஒழுக்கத்தையும் நல்லிணக்கத்தை யும் ஏற்படுத்தும் விதமான ஆடை என்றே, கூறப்படுவதாக விடயமறிந்தோர் கூறுகின்ற னர். அத்துடன் முஸ்லிம் மாணவிகள், தங்கள் கலாசார ஆடையை அணிவதற்கு இடமளிக் கும் சுற்றுநிருபமும் இருக்கின்றது.

அது மாத்திரமன்றி, இலங்கையில் சேவை புரியும் ஆசிரியர்களோ அல்லது வேறு அரச உத்தியோகத்தர்களோ பெரும்பாலான நிறு வனங்களில், ஒரே மாதிரியான சீருடை போன்ற ஆடைகளை அணிவதில்லை. முஸ் லிம் பாடசாலையில் கற்பிக்கும் இந்து ஆசி ரியை, சேலையுடனேயே கடமைக்கு வருகின் றார். சிங்களப் பாடசாலைகளில் உள்ள முஸ் லிம், தமிழ் ஆசிரியைகள், தமது கலாசார உடையை உடுத்தியே செல்கின்றனர். பௌத்த துறவியோ, கத்தோலிக்க மதகுருவோ, அருட் சகோதரியோ அரச பாடாலையில் கற்பிப்ப தற்குப் போனால், அவர்களை அந்தந்தப் பாட சாலையின் இன, மதம் சார்ந்த, கலாசார உடை யுடன் வருமாறு யாரும் சொல்ல முடியாது.

சட்டத்தால் வரையறை செய்யப்படாத விடத்து, தாம் விரும்பிய ஆடையை அணிந்து செல்ல, இந்து ஆசிரியைக்கு இருக்கின்ற அதே உரிமை, முஸ்லிம் ஆசிரியைகளுக்கு இல்லாது போய்விட முடியாது. இந்து ஆசிரி யைகளை, பர்தா அல்லது அபாயா அணிந்து கொண்டு வாருங்கள் என்று யாராலும் சொல்ல முடியாது. இது முஸ்லிம் ஆசிரி யைகளின் விடயத்திலும் பொருந்தும்.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், சபையில் உரையாற்றியது போல, இந்த நாட்டில் கவர்ச்சியான ஆடை உடுத்த அனுமதி இருக்குமாயின், உடம்பை மறைக்கும் ஆடையை உடுத்த ஏன் அனுமதி மறுக்கப்படுகின்றது என்ற கேள்வி எழுகின் றது.

எந்தவொரு முஸ்லிம் ஆசிரியையும் அபா யாவை அணிந்து கொண்டு வந்து, ஏதாவது பிழையான நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டுகள் இல்லை என்பதுடன், அவர் கள் அந்த ஆடை ஊடாக, இஸ்லாத்தைப் போதிக்க முற்படவும் இல்லை. இவ்வாறிருக் கையில், ஏன் இந்த விடயத்தைத் தூக்கிப் பிடிக்க வேண்டும் என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்துக்களின் கலாசாரமும் பண்பாடும் பாதுகாக்கப்பட வேண்டும் என் பதுடன், இந்துப் பாடசாலைகளின் பாரம் [illegible]யங்களுக்கும் முஸ்லிம்கள் மதிப் [illegible] வேண்டும் என்பதில் மறுபேச்சில்லை.

உண்மையில், குறித்த பாடசாலைச் சமூ கம் எதை எதிர்பார்த்ததோ, அதுவன்றி வேண் டத்தகாத பல நிகழ்வுகள், அவரவர்கள் கட் டுப்பாட்டை மீறி, இடம்பெற்றுக் கொண்டி ருப்பதை, உன்னிப்பாக நோக்குவோரால் உணர்ந்து கொள்ளலாம். ஒரு சிறிய விடயத் தைப் பெரிதுபடுத்தியது, குறிப்பிட்ட சில தமிழர்களின் தவறு என்றால், அதைக் கையாண்ட விடயத்தில், முஸ்லிம்களின் பக்க மும் தவறு இடம்பெற்றுள்ளதைச் சொல் லாமல் விட முடியாது.

அதாவது, குறிப்பிட்ட பாடசாலை நிர்வா கத்துக்கும் முஸ்லிம் ஆசிரியைகளுக்கும் இடையிலான சம்பாசனையில் உத்தியோகப் பற்றற்ற விதத்தில் நுழைந்து, முஸ்லிம் ஆசிரியைகளின் கணவன்மார் கடுந்தொனி யில் பேசியிருப்பார்கள் என்றால் அது தவ றாகும். அவ்வாறே, அபாயாவுக்காகக் குரல் கொடுப்பதும் அதற்காகப் போராடுவதும் முஸ்லிம்களின் உரிமையாகும்.

அதற்காகத் தமிழர் ஆடையான சேலையை விமர்சிக்க முடியாது. அந்த வகையில், அபா யாவைச் சரி காணும் முயற்சியில், முஸ்லிம் சமூக வலைத்தளப் பாவனையாளர்கள் சிலர், தமிழர்களின் பாரம்பரிய ஆடையை மட்டு மன்றி, முஸ்லிம் பெண்களாலும் இன்று வரை அணியப்படுகின்ற சேலை பற்றிய, மோசமான விமர்சனங்களை முன்வைத்தமை பெருந் தவறாகும். இவ்வாறு விமர்சிக்கக் கூடாது என்று, முஸ்லிம் முற்போக்குச் சிந் தனையாளர்கள் பகிரங்கமாகக் கூறி வரு கின்றமை கவனிப்புக்குரியது.

இவ்வாறு முஸ்லிம்களின் ஆடைக்கும், தமிழர்களின் கலாசார ஆடைக்கும் இடை யிலான பட்டிமன்றம் போய்க் கொண்டிருப்ப தால், ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இன நல் லிணக்கத்துக்கு எதிரான சூழல், முஸ்லிம் களினதும் தமிழர்களினதும் மனநிலையில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

இது, எதிர்காலத்தில் ஏற்படுத்தப் போகும் விளைவுகள் ஒருபுறமிருக்க, முஸ்லிம் அர சியல்வாதிகளின் மெத்தனமும், தமிழ் அரசி யல் தலைவர்கள் தெரிவிக்கின்ற (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சருமான சிங்காரவேலு தண்டாயுதபாணி மீள்பார்வை பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல் இங்கு தரப்படுகிறது.

**நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி**

# “தமிழ் முஸ்லிம் இனங்கள் சில நேரங்களில் வேறுபட்டு நின்ற காரணத்தினாலேயே பேரினவாத அழுத்தம் அதிகமாய் பதிவதற்கு காரணமாய் அமைந்துள்ளது”

- **கிழக்கு மாகாணத்தில் சிறுபான்மை மக்களின் கல்வி நிலை எவ்வாறுள்ளது?**

கிழக்கு மாகாணத்தில் சுமார் 1200 பாடசாலைகள் உள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை தமிழ் முஸ்லிம் பாடசாலைகள். அநேகமான பாடசாலைகள் கல்வி நிலையில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தி வருகின்றன. எனினும் அண்மைக் காலமாக கிழக்கு மாகாண பாடசாலைகள் மாகாண ரீதியில் க.பொ.த ச/தரப் பரீட்சை பெறுபேற்றில் குறைந்தளவு பெறுபேற்று விகிதாசாரத்தையே காண்பிக்கிறது. ஆனால் 2016 ஆம் ஆண்டினையும் விட கடந்த வருடத்தில் கிழக்கு மாகாணத்தின் பெறுபேறுகளில் ஓரளவு வளர்ச்சித் தன்மையை காணக் கூடியதாக உள்ளது. ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் எமது மாகாணத்தின் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தியளிக்கும் வகையில் இல்லை.

- **அற்கான காரணங்கள் என்னவென நீங்கள் கருதுகிறீர்கள்?**

இதற்கு நியாயமான பல காரணங்கள் உள்ளன. நீண்ட காலப் போர் கிழக்கு மாகாணத்தின் கல்வித் துறையில் மிகுந்த பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. போரில் இடம்பெயர்ந்தவர்கள் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்தமை மற்றும் ஆசிரியர் உள்ளிட்ட இதர வளப்பற்றாக்குறை நிலவியமை போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம். அத்தோடு ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது இங்கு கல்விக்கான வசதி வாய்ப்புகள் குறைவாகக் காணப்படுவதும் மாணவர்கள் கல்வியில் பின்னடைந்தமைக்கு மிக முக்கிய காரணமாக உள்ளது.

- **அண்மையில் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற அபாயா விவகாரத்தை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

சில பாடசாலைகள் தங்களுடைய பாரம்பரிய சமூகம் சார்ந்த கலாசார விழுமியங்களைப் பின்பற்றி வருகின்றன. அந்த வகையில் ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியும் திருகோணமலை மாவட்டத்தில் பாரம்பரிய கலாசாரங்களைப் பின்பற்றும் பாடசாலையாக உள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் மிகப்பெரிய இந்துக் கல்லூரியாகவும் இது உள்ளது. பெண்கள் கல்விக்கு சிறந்த பாடசாலையாகவும் சகல விதமான பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தும் பாடசாலையாகவும் இது அமைந்துள்ளது.

எனவே இத்தகைய கல்லூரிகள் பாரம்பரியமாக பின்பற்றி வருகின்ற ஒழுங்குகளை பேணத்தான் செய்கின்றன. இங்கு கணிசமான அளவில் முஸ்லிம் பிள்ளைகளும் கல்வி கற்கிறார்கள். இங்கு கற்ற பெரும்பாலான முஸ்லிம் மாணவர்கள் நல்ல நிலைக்கு வந்துள்ளார்கள். உயர் கல்வியைக் கற்கும் நோக்கில் இங்கு பெரும்பாலான முஸ்லிம் மாணவிகள் வருகிறார்கள். இந்த மாணவர்களால் கூட சண்முகா கல்லூரியின் ஒழுங்குகளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்பட்டது கிடையாது.

அண்மையில் அபாயா சர்ச்சை ஏற்பட்டது. புதிதாக நியமனம் பெற்று வந்த ஆசிரியரால் தான் இந்த அபாயா பிரச்சினை ஏற்பட்டது. அதிபர் இணக்கமாக சொல்லியும் அது சரியாக புரிந்துகொள்ளப்படாமல் ஏற்கனவே இங்கு கடமையாற்றிய ஆசிரியர்களும் சேர்ந்து அபாயா அணிந்து வந்தபோது இந்த பிரச்சினை வெடித்தது. இதற்கு எதிராக சண்முகா இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் இணைந்து குரல் எழுப்பினார்கள். இதன் பின்பு வலயக் கல்விப் பணிப்பாளர், மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோர் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு இந்த ஆசிரியர்களுக்கு தற்காலிக இடமாற்றம் வழங்கியுள்ளனர்.

சில இனக்குழுக்கள் இந்த விவகாரத்தை கையில் எடுத்துக் கொண்டு முகநூல் வாயிலான பிரச்சினையை பெரிதுபடுத்தி வந்துள்ளன. இவற்றுக்கு நாம் இடமளிக்கக் கூடாது. இனங்களுக்கிடையில் அமைதியும் நல்லிணக்கமும் காணப்படும் போதே அனைத்து விடயங்களையும் முன்னொண்டு செல்லலாம். கல்வி என்பது மிக அடிப்படையான விடயம்.

இந்த விடயம் மத்திய கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசியல்வாதிகள் சிறந்த வழிகாட்டல்களை வழங்க வேண்டும்.

- **இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு கல்வி அமைச்சு எத்தகையை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.?**

கிழக்கு மாகாண கல்வி அமைச்சு தேசிய பாடசாலை விவகாரத்தில் முழு அதிகாரமும் பெறவில்லை. ஆசிரியர்களை இடமாற்றல் போன்ற நடவடிக்கைகளுக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கோ, மாகாணக் கல்வி அமைச்சுக்கோ மிகப்பெருமளவில் அதிகாரம் செலுத்த முடியாது. நாட்டின் 327 தேசிய பாடசாலைகள் உள்ளன. எனவே மத்திய கல்வி அமைச்சின் கீழே இவை நிர்வகிக்கப்படுகின்றன. மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் மத்திய கல்வி அமைச்சுக்கு இந்த விவகாரம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு தீர்க்கமான முடிவு எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால் குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு தற்காலிக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

- **தமிழ் சமூகம் இந்தப் பிரச்சினையை எப்படிப் பார்க்கின்றது?**

திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் மாணவர்கள் பெருமளவில் முஸ்லிம் பாடசாலைகளிலேயே கற்கின்றார்கள். அதுபோன்று தமிழ் மாணவர்கள் அவர்களுடைய பாடசாலைகளிலேயே கற்கின்றார்கள். சில முஸ்லிம் மாணவர்கள் தமிழ் பாடசாலைகளிலும், தமிழ் மாணவர்கள் முஸ்லிம் பாடசாலைகளிலும் கற்று வருவதையும் காண முடிகின்றது.


கல்வி என்பது அடிப்படை உரிமை. அதை நாம் மறுக்கக் கூடாது. மூதூரில் உள்ள பெரியதொரு முஸ்லிம் பாடசாலையில் தமிழ் மாணவர்கள் உயர்கல்வி கற்கிறார்கள். எல்லா மாணவர்களும் (தமிழ் மாணவர்களாக இருந்தாலும்) முஸ்லிம்கள் அணியும் உடையையே அணிந்து வர வேண்டும் என்றொரு ஒழுங்கு அந்தப் பாடசாலையில் உள்ளது. எனவே அங்கு கல்வி கற்கச் செல்லும் தமிழ் பெண் மாணவிகள் அந்த ஆடையையே அணிந்து செல்கிறார்கள். இந்த விடயத்தை குறிப்பிட்ட மாணவர்களோ, அவர்களது பெற்றோரோ, அரசியல்வாதிகளோ பெரிய விடயமாக எடுக்கவில்லை.

எனவே அந்தப் பள்ளிக்கூடத்தின் ஒழுங்குகள் எதுவோ அந்த ஒழுங்குகளை அனுசரித்து போக வேண்டும். இதை நாம் அனுமதிக்க வேண்டும். அவ்வாறு செய்ய முடியாது, இவ்வாறு தான் செய்ய வேண்டும் என பிரச்சினையேற்பட்டால் அந்த மாணவர்களின் கல்வியே பாதிக்கப்படும். எனவே தமிழ் மாணவர்கள் முஸ்லிம் பெண் பிள்ளைகளின் ஆடைகளை அணிந்து கற்கச் செல்வதை இங்கு பிரச்சினையாகப் பார்ப்பதில்லை. கிழக்கிலுள்ள சில தமிழ் பாடசாலைகளுக்கு கற்பிக்கச் செல்கின்ற முஸ்லிம் ஆசிரியர்கள் அபாயா அணிந்து செல்கிறார்கள். இது பிரச்சினையாக நோக்கப்படுவதில்லை. ஆனால் பாரம்பரிய கலாசார விழுமியங்களை பின்பற்றுகின்ற பாடசாலை எனும் வகையில் சண்முகா கல்லூரியில் பாரம்பரிய ஒழுங்குகள் பின்பற்றப் படுகின்றது.

இந்நாட்டில் தமிழ் முஸ்லிம் இனங்கள் சில நேரங்களில் வேறுபட்டு நின்ற காரணத்தினால் பேரினவாதம் என்கின்ற அழுத்தம் அதிகமாக பதிவதற்கு காரணமாய் அமைந்துள்ளது. ஆகவே சிறுபான்மை இனங்கள் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். எங்களுக்கு மத்தியில் உள்ள சிற்சில முரண்பாடுகளை பூதாகரப்படுத்தாமல் நிதானமாக இந்தப் பிரச்சினைகளை அணுகி அவற்றை தீர்க்க வேண்டும். அரசியல்வாதிகளும் இதற்கு துணைபோகாமல் நிதானமாக இந்தப் பிரச்சினைகளை அணுகித் தீர்த்து வைக்க வேண்டும்.

- **இந்த விவகாரம் தமிழ் முஸ்லிம் உறவில் விரிசல்களை ஏற்படுத்திவிடும் என நீங்கள் கருதுகிறீர்களா?**

பெரிய பிரச்சினைகள் ஒன்றும் ஏற்படவில்லை. சில தமிழ் பெற்றோர்களும், பழைய மாணவர்களும் ஆர்ப்பாட்டம் செய்திருந்தார்கள். திருகோணமலையில் இதுவரை காலமும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு மத்தியில் சச்சரவுகள் ஏற்பட்டதில்லை. திருகோணமலை மூர் ஸ்ட்ரீட்டில் வாழும் முஸ்லிம் மக்கள் தமிழர்களுடன் சிறந்த உறவுகளை பேணி வருகின்றார்கள். இருதரப்பும் நெருங்கிய உறவுகளை பேணி வருகிறது. இந்தப் பிரதேசத்தில் அதிகளவான கோயில்கள் மற்றும் பள்ளிவாசல்கள் காணப்படுகின்றன. எனவே இந்த விவகாரம் தமிழ் முஸ்லிம் உறவில் விரிசல்களை ஏற்படுத்திவிடவில்லை. அவ்வாறு இடம்பெறுவதாக இருந்தாலும் அவற்றை சுமுகமான முறையில் தீர்த்து வைப்பதே பொறுப்புவாய்ந்தவர்களின் கடமையாகும்.



சிங்காரவேலு தண்டாயுதபாணி
முன்னாள் கிழக்கு மாகாணசபை கல்வியமைச்சர்

**தமிழ் மாணவர்கள் முஸ்லிம் பெண் பிள்ளைகளின் ஆடைகளை அணிந்து கற்கச் செல்வதை இங்கு பிரச்சினை யாகப் பார்ப்பதில்லை. கிழக்கிலுள்ள சில தமிழ் பாடசாலை களுக்கு கற்பிக்கச் செல்கின்ற முஸ்லிம் ஆசிரியர்கள் அபாயா அணிந்து செல்கிறார்கள். இது பிரச்சினையாக நோக்கப்படுவதில்லை. ஆனால் பாரம்பரிய கலாசார விழுமியங்களை பின்பற்றுகின்ற பாடசாலை எனும் வகையில் சண்முகா கல்லூரியில் பாரம்பரிய ஒழுங்குகள் பின்பற்றப்படுகின்றது.**

## எழுவாய், பயமிலை



அபூ ஷாமில்

# இனி முன்மாதிரிகளின் காலம்

இளைய சமுதாயம் அதிகமாக புத்தகங்களை வாசிக்க வேண்டும் என மலேசியாவின் புதிய அதிபராகப் பதவியேற்ற மஹாதிர் முஹம்மத் கூறியிருக்கிறார். மலேசியா அதிகமான பல்கலைக்கழகங்களைக் கொண்டுள்ள ஒரு நாடு. வெளிநாடுகளில் இருந்தெல்லாம் இங்கு வந்து கற்கின்ற மாணவர்கள் அதிகம். இலங்கையில் இருந்தும் மலேசியா சென்று கற்கும் மாணவர்கள் 6000 பேர் இருப்பதாகவும் ஒரு தகவல். இந்தளவுக்கு முஸ்லிம்கள் வாழும் மலேசியா அறிவுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பது எப்படி?

அங்கு வாழும் ஒரு சகோதரர் அண்மையில் பகிர்ந்து கொண்டதொரு சம்பவம் இந்தக் கேள்விக்கு விடையாக அமைந்தது. ஜும்ஆ தினத்தில் ஒரு மணி நேரம் முன்னதாக ஜும்ஆவுக்குச் சென்ற அவருக்கு அங்கு திரண்டிருந்த கூட்டம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அங்கு ஒரு புத்தக வெளியீட்டு விழா நடந்து கொண்டிருந்தது. ஏராளமான மக்கள் வருகை தந்திருந்தனர். விழா முடிய அனைவரும் தொடர்ந்து ஜும்ஆவில் கலந்து கொள்கின்றனர்.

இங்குள்ள பள்ளிவாசல்களின் நிலை என்ன ? பல பள்ளிவாசல்களில் தமிழ் வேதநூலாகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு சில புத்தகங்களை வாசிப்பதற்கு மட்டுமே அனுமதி இருக்கிறது. ஏனைய இஸ்லாமியப் புத்தகங்களைக் கூட பள்ளிவாசலில் கண்ணுக்குத் தெரிகின்ற விதமாக வைத்திருக்கவும் அனுமதிக்க மாட்டார்கள். பத்திரிகைகள் பற்றிக் கேட்கவும் வேண்டாம். இன்னும் சில பள்ளிவாசல்கள் தமது கொள்கை பற்றிய புத்தகங்களைத் தவிர வேறு எதனையும் கைகளில் அகப்படுவதற்கு வைக்க மாட்டார்கள். மாற்றுக் கொள்கைகளைப் பற்றி அறிந்து கொண்டால் தாங்கள் விதைக்கின்ற கொள்கைகளில் இருந்து மாறிச் சென்றுவிடுவார்கள் என்றொரு பயம் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

இப்படியான இடங்களில் இருந்து தான் பல்கலைக் கழகம் செல்வதைத் தடுக்கின்ற போதனைகளும், பெண் கல்வியை மறுக்கின்ற வழிகாட்டல்களும் முன்வைக்கப்படுகின்றன. பள்ளிவாசல்களில் புத்தகங்கள் வைப்பது எப்படிப் போனாலும் புத்தகங்களை வாசிக்கின்றவர்களே உருவாகி விடக் கூடாது என்று செயற்படும் பள்ளிவாசல்கள் நமக்குள்ளால் அனந்தம் இருக்கின்றன.

இந்த நிலையில் தான் கடந்த வாரம் திஹாரிய இப்ராஹிமிய்யா ஜும்ஆப் பள்ளிவாசல் இரண்டு புத்தக வெளியீடுகளுக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கும் செய்தி தேனாகத் தித்தித்தது. கடந்த ஞாயிற்றுக் கிழமை நோன்பில் அதிகம் பேசப்படும் ஸகாத் பற்றிய ஒரு புத்தக வெளியீடு நடைபெற்றுள்ளது. அடுத்த நாள் திங்கட் கிழமை, மீள்பார்வை வெளியீடான அழைப்புப் பாதையில் ஒரு பயணம் என்ற நூலின் வெளியீட்டு விழா சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது.

பள்ளிவாசல்களை அலங்கரித்தல் என்பதனூடாக பள்ளிவாசல் நிர்வாகங்கள் விளங்கி வைத்திருக்கின்ற, காபட் போடுதல், முன்றிலுக்கு சீமெந்துக் கல் பதித்தல், அலங்கார விளக்குகள் பொருத்துதல் போன்ற விடயங்களுக்கு அப்பால், சமூகத்தை பண்பாடுகளால் அலங்கரிக்கின்ற பணிகள் பள்ளிவாசல்களால் செய்யப்பட வேண்டியிருக்கின்றன என்பதையே இந்த நிகழ்வுகள் காட்டுகின்றன. பள்ளிவாசல்கள் செய்ய வேண்டிய பணியும் இதுதான். ஒரு இஸ்லாமிய சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒரு புத்தகமும் நூற்றுக் கணக்கான பயான்களும் மட்டும் போதுமானதாக இருக்கப் போவதில்லை. எந்த வகையில் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியுமோ அந்த வகைகளில் எல்லாம் செயற்படுவதற்குத் தயாரான நிலையில் தான் பள்ளிவாசல்கள் இருக்க வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தின் பண்பாடு, கல்வி போன்றவற்றிலான பின்னடைவுகள் இன்று இலங்கையின் ஏனைய சமூகங்களுக்கு மத்தியில் முஸ்லிம்களை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் சருகுகளாக மாற்றியிருக்கின்றன. அதிலிருந்து சமூகத்தைத் தூக்கியெடுக்கும் பணியை அல்லாஹ்வின் இல்லமான பள்ளிவாசல்கள் தான் செய்ய வேண்டும். இவை எதனையும் செய்வதற்கு எங்களது பள்ளிவாசலில் இடம் கொடுக்க மாட்டோம் என்று அடம்பிடிக்கும் ஆக்கிரமிப்பாளர்கள் அல்லாஹ்வுடைய மார்க்கம் இந்தப் பூமியில் கண்ணியம் பெறக் கூடாது என்ற கொள்கையிலேயே இருக்கிறார்கள். இவர்களிடமிருந்து பள்ளிவாசல்களைக் காப்பாற்றியாவது பள்ளிவாசல்களை மார்க்கத்தின் கண்ணியத்துக்காக உழைக்கின்ற மத்தியத்தலங்களாக மாற்ற வேண்டியிருக்கிறது.

அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் முன்மாதிரியாகச் செயற்படுகின்ற இவ்வாறான பள்ளிவாசல்கள் இனங்காணப்பட்டு சமூகத்துக்கு அடையாளப்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் அடுத்த தலைமுறையிலாவது பள்ளிவாசல்கள் தம் பணியைச் செய்யக் கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியா: அன்வர் இப்றாஹிமின் விடுதலை பிற்போடப்பட்டுள்ளது



மலேசியாவின் முன்னாள் பிரதமரும் நிதியமைச்சருமான அன்வர் இப்றாஹீம் சிறையிலிருந்து விடுவிக்கப்படுவார் என்ற ஊகங்கள் வெளிவந்துள்ள போதும், மலேசிய மன்னர் அன்வருக்கு அளிக்கும் பொது மன்னிப்பில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதாக மலேசிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அரசியல் கைதியொன்றை விடுதலை செய்வதற்கு நாட்டின் தலைவர் என்ற வகையில் மன்னருக்கு அதிகாரம் உள்ளது. எனினும், இதற்கான மரபார்ந்த முறைகளும் ஒழுங்குகளும் உள்ளன. அவற்றை மேற்கொள்வதற்கு சிறிது காலதாமதம் ஏற்படும் என அறிவிக்கப்படுகின்றது.

வெற்றி பெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டணியில் அன்வர் இப்றாஹீமின் மனைவியும் அங்கத்துவம் வகிக்கின்றார். அவர் பிரதமர் மஹாதிர் முஹம்மதுடன் இது குறித்து கலந்துரையாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அன்வர் இப்றாஹீமின் கட்சியான PKR மற்றும் அவரது சட்டத்தரணியான சிவராசா இந்தத் தகவலை உறுதி செய்துள்ளனர்.

அன்வரின் மனைவி வான் அஸீஸா வான் இஸ்மாயில், மஹாதிருடன் நடத்திய கலந்துரையாடல் திருப்தியளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.



## ஐக்கிய அமீரகத்துடனான நெருக்கடிக்குத் தீர்வு



யெமனுக்குச் சொந்தமான சொக்கோடா தீவில் ஐக்கிய அமீரகத்தின் படையினரை நிறுத்துவது குறித்து யெமனுக்கும் அமீரகத்திற்கும் இடையில் நிலவி வந்த முரண்பாடு முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. யெமன் பிரதமர் அஹ்மத் உபைத் இது குறித்து கருத்து வெளியிடுகையில், இத்தீவு குறித்த சர்ச்சை முடிந்து விட்டது. ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகப் போராடும் சவூதி கூட்டணி சர்வதேச அங்கீகாரம் பெற்ற யெமனின் அரசாங்கத்தை ஆதரிப்பதனால் சர்ச்சை இலகுவாகத் தீர்க்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

சவூதி அறேபியாவும் தனது படையினரை இத்தீவில் நிறுத்தியுள்ளது. இத்தீவு யுனெஸ்கோவின் கீழுள்ள உலக கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அமீரகம் இதில் 300 படையினரை நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேசப் பார்வை

# நகபா தினத்தில் காஸாவில் இஸ்ரேலின் வெறியாட்டம்

## 58 பலஸ்தீனர்கள் உயிரிழப்பு, 500 இற்கும் மேற்பட்டோர் காயம்

கடந்த 14-05-2018 அன்று காஸாவில் 70 ஆவது நகபா தினத்தை அமைதியாக நினைவுகூர்ந்த நிராயுதபாணிகளான மக்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் தாறுமாறாகச் சுட்டதில் குறைந்தது 58 பொதுமக்கள் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர். 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இஸ்ரேல் சட்டவிரோதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவடையும் இத்தருணத்தில், பலஸ்தீனர்கள் தமது நிலத்தை இழந்து 70 ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன. முஸ்லிம்களின் புனிதஸ்தலமான ஜெரூசலத்தை கடந்த ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இஸ்ரேலின் தலைநகராகப் பிரகடனம் செய்து, கடந்த வாரம் வொஷிங்டன் தூதரகம் டெல் அவிவிலிருந்து ஜெரூசலத்திற்கு மாற்றப்பட்டது. இந்த வைபவத்தில் ட்ரம்பின் மருமகனும் மகளும் இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதுவரும் அதிதிகளாகக் கலந்துகொண்டனர். இச்சந்தர்ப்பத்திலேயே காஸாவில் பலஸ்தீனர்கள் இந்நிகழ்வைக் கண்டித்தும் 70 ஆண்டுகால பெரும் துயரத்தை நினைவுகூர்ந்தும் அமைதி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அவர்கள் மீது இஸ்ரேல் இராணுவம் சரமாரியாகச் சுட்டதில் 58 பேர் உயிரிழந்தமை இஸ்ரேல் மீதான உலகக் கண்டனத்தைத் திருப்பியுள்ளது.



தென்னாபிரிக்க அரசாங்கம் இஸ்ரேலிலிருந்து தமது தூதுவரை பின்வாங்கியுள்ளது. அதேவேளை, உலகத்தின் பல நாடுகள் இஸ்ரேல் காஸாவில் மேற்கொண்ட வெறியாட்டத்தை வன்மையாகக் கண்டித்துள்ளன. குறிப்பாக துருக்கிய ஜனாதிபதி அர்துகான் காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்டு வருவது இனப்படுகொலை என்றும், இஸ்ரேல் இனவாதத்தைக் கட்டவிழ்க்கும் பயங்கரவாத நாடு என்றும் கண்டித்துள்ளார். பலஸ்தீனில் கொல்லப்பட்டவர்களுக்காக மூன்று நாள் துக்க தினத்தை அங்காரா அரசாங்கம் அறிவித்துள்ளது.

லண்டனில் துருக்கிய மாணவர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அர்துகான் இஸ்ரேலை பயங்கரவாத நாடு என்று தெரிவித்தார். "இஸ்ரேல் காஸாவில் செய்திருப்பது இனப்படுகொலையாகும். இந்தப் படுகொலை இஸ்ரேலிலிருந்தோ அமெரிக்காவிலிருந்தோ எங்கிருந்து இடம்பெற்றாலும் அதை நான் கண்டிக்கின்றேன் என அர்துகான் தெரிவித்தார்.

நக்பா என்பது யூதர்களால் பலஸ்தீனர்கள் வெளியேற்றப்பட்டு அகதிகளாக்கப்பட்ட துயர நாளைக் குறிக்கின்றது. இது 1948 மே 14 இல் இடம்பெற்றது.

கடந்த 69 ஆண்டுகளாக பலஸ்தினர்கள் இத்தினத்தை பெரும் துயர நாள் என்று நினைவுகூர்கின்றனர். இதேவேளை, 1948 மே 15 இல் இஸ்ரேல் பிரகடனம் செய்யப்பட்டது.

இந்தோனேசியா, மலேசியா, துருக்கி ஆகிய நாடுகளில் காஸா படுகொலைக்கு எதிராகவும், அமெரிக்கத் தூதரகம் ஜெரூசலத்திற்கு மாற்றப்பட்டதற்கு எதிராகவும் நக்பா தினத்தில் பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

# சூடானில் அமைச்சரவை மாற்றம்



சூடான் தேசிய காங்கிரஸ் தேசிய நல்லிணக்க அரசாங்கத்தின் அமைச்சரவையில் மாற்றம் கொண்டுவந்துள்ளது. அதன் படி புதிய 8 அமைச்சர்களும் 5 ராஜாங்க அமைச்சர்களும் 10 கவர்னர்களும் இணைக்கப்பட்டுள்ளனர். எனினும், எதிர்க்கட்சிகள் இந்த அமைச்சரவை மாற்றத்தை நிராகரித்துள்ளது.

ஜனாதிபதி உமர் பஷீரின் தலைமையில் கட்சித் தலைமையகத்தில் நடந்த கூட்டத்தைத் தொடர்ந்து அமைச்சரவை மாற்றம் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது. தேசிய காங்கிரஸ் கட்சி அமைச்சர்களில் 67 வீதத்தைக் கொண்டுள்ளனர். மொத்தமாக 31 அமைச்சர்களும் 43 ராஜாங்க அமைச்சர்களும் இரண்டு உப ஜனாதிபதிகளும் புதிய அமைச்சரவை மாற்றத்தில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சூடானில் 1989 இல் இடம்பெற்ற இரத்தம் சிந்தா இராணுவப் புரட்சியின் மூலம் உமர் பஷீர் ஜனாதிபதியானார். எனினும், அதன் பின்னர் நடைபெற்ற ஜனநாயகத் தேர்தல்களில் பஷீரின் தேசிய காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று வந்தது. 2011 இல் தென் சூடான் தனி நாடாய் பிரிந்து சென்ற பின்னர் சூடானின் பெற்றோலிய உற்பத்தி குறைவடைந்தது. பிரிவுக்கு முன்னர் நாளொன்றுக்கு 450,000 கச்சா எண்ணெய் பீப்பாய்களை உற்பத்தி செய்து வந்த சூடான் தற்போது 100,000 பீப்பாய்களையே உற்பத்தி செய்கின்றது.

# ஈராக்கில் சவூதி ஆதரவு ஷீஆ தலைவர் முக்ததா சத்ரின் கூட்டணி வெற்றி



பக்தாத் உட்பட 6 மாகாணங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஈராக்கின் முன்னணி ஷீஆ தலைவர்களுள் ஒருவரும் சவூதி அரேபியாவின் நெருக்கத்திற்குரியவருமான முக்ததா சத்ரின் கூட்டணி வெற்றியீட்டியுள்ளது.

ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தொடர்ந்து ஈரான் ஆதரவு அரசாங்கங்களே ஈராக்கில் வெற்றி பெற்று வந்தன. சத்ர் உருவாக்கிய புதிய சயுரூன் எனப்படும் கூட்டணி இம்முறை தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது. ஈராக்கிலுள்ள 18 மாகாணங்களில் 16 மாகாணங்களில் வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், சத்ரின் கூட்டணி முன்னிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈரான் ஆதரவுக் கூட்டணி இரண்டாவது இடத்தில் உள்ளது. அதேவேளை, தற்போதைய பிரதமர் ஹைதர் அல் ஆபாதியின் கூட்டணி மூன்றாவது இடத்தில் உள்ளது. குர்திஷ்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட துஹூர் மற்றும் கிர்குக் ஆகிய மாகாணங்களில் சத்ர் அணி போட்டியிடவில்லை. இம்மாகாணங்களில் நிலவும் பதட்ட நிலையினால் தேர்தல் முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை.

1.3 மில்லியன் வாக்காளர்கள் கலந்துகொள்ளும் இத்தேர்தலில் 329 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். இதில் சத்ர் கூட்டணி இதுவரை வெளியான முடிவுகளின் ... ஆசனங்களைப் பெற்றுள்ளது ... பாலும் இத்தேர்தலின் இறுதி முடிவுகள் சத்ர் அணிக்கு சாதகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# அமெரிக்கத் தூதரகம் மாற்றப்பட்டமைக்கு உலக நாடுகள் எதிர்ப்பு



இஸ்ரேலின் பாரம்பரியத் தலைநகர் டெல் அவிவிலிருந்து ஜெரூசலத்திற்கு அமெரிக்கத் தூதரகம் மாற்றப்பட்டமைக்கு உலக நாடுகள் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. ட்ரம்பின் தேர்தல் கால வாக்குறுதியொன்று நிறைவேற்றப்பட்டுள்ள போதும் அதற்கு பலஸ்தீன மக்கள் கொடுத்த விலை மிகப் பாரியது எனவும் ட்ரம்பின் நடவடிக்கை சர்வதேச சட்டங்களை மீறுகின்றது எனவும் லத்தீன் அமெரிக்க நாடுகளும் தென் அமெரிக்காவும் கண்டனம் ... நாடுகளின் தூதரகங்கள் உள்ளன. ஏற்கனவே உலகின் 107 நாடுகள் இஸ்ரேலை சுதந்திர நாடாக ஏற்க மறுத்து வருகின்றன. இதேவேளை, வொஷிங்டன் தூதரகம் மாற்றப்பட்ட நிகழ்வில் 33 நாடுகளே பங்குகொண்டிருந்தன. 53 நாடுகள் இந்நடவடிக்கைக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆட்சேபனை தெரிவித்துள்ளன.

கிழக்கு ஜெரூசலத்தை பலஸ்தீனர்கள் தமது தாயகமாகவும் எதிர்கால பலஸ்தீன நாட்டின் தலைநகராகவும் கருதுகின்றனர். வரலாற்று ரீதியாகவும் மத கலாச்சார ரீதியாகவும் ஜெரூசலம் பலஸ்தீனர்களின் பூர்வீக நிலமாகும். இந்நிலையில், ஜெரூசலத்தை இஸ்ரேலின் தலைநகராக ட்ரம்ப் அறிவித்தமை ஒரு பக்கத் தீர்மானம் என்றும், அகதிகளாய் வெளியேற்றப்பட்ட பலஸ்தீன் மக்களின் உரிமையை மறுக்கும் செயல் எனவும் கண்டனங்கள் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியா: மஹாதிரின் மீள்வருகையும் தென்கிழக்காசியாவுக்கான புதிய எதிர்பார்ப்பும்

• முஷாஹித் அஹ்மத்



கடந்த வாரம் மலேசியாவில் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் அந்நாட்டின் முன்னாள் பிரதமர் மஹாதிர் முஹம்மதின் கூட்டு எதிரணி வெற்றியீட்டியுள்ளது. 1957 இல் பிரிட்டனிடமிருந்து அரசியல் சுதந்திரம் பெற்றதிலிருந்து கடந்த 60 ஆண்டு கால இடைவெளியில் இத்தேர்தல் முடிவு மிக முக்கிய மாற்றம் என்று அந்நாட்டின் பிரபலமான Malaysia Kini.com எனும் இணையம் கூறுகின்றது.

UMNO - United Malays National Organization எனப்படும் பிரதான கட்சியும் அதிலிருந்து உருவாக்கப்பட்ட தேசிய முன்னணியான பெரிஸான் நெஷனல் கூட்டணியுமே 61 ஆண்டு காலமாக மலேசியாவின் ஆளும் கட்சியாக இருந்து வந்தது. 1990 இலேயே 13 இனத்துவக் கட்சிகளை உள்ளடக்கிய வகையில் பெரிஸான் நெஷனல் ஸ்தாபிக்கப்பட்டது. இக்கூட்டணியும் UMNOவும் தொடர்ச்சியாக தேர்தல் வெற்றிகளைக் குவித்து வந்தது.

மஹாதிரும் இந்தக் கட்சியிலிருந்துதான் 1981 இல் வேட்பாளராகக் களமிறங்கி நாட்டின் பிரதமரானார். 2003 ஆம் ஆண்டு வரை 22 ஆண்டுகள் பிரதமராய் பதவி வகித்த மஹாதிர், அரசியலிலிருந்து ஓய்வு பெற்று 15 ஆண்டுகளுக்குப் பின்னர் மீளவும் பிரதமராய் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மலேசியாவின் நவீனமயமாக்கலின் (Moderlization) தந்தை எனவும் 20 ஆம் நூற்றாண்டின் மலேசியாவின் சிற்பி எனவும் மஹாதிர் கருதப்படுவதற்கு பல அரசியல் நியாயங்கள் இருக்கவே செய்கின்றன. மஹாதிருக்கு முந்திய யுகம் மலேசியா இறப்பர் தோட்டத் தொழிற் துறையில் தங்கியிருந்த ஒரு விவசாய நாடு. மஹாதிரின் தூரதரிசனம், பொருளாதாரக் கொள்கை சீர்திருத்தம் மூலம் நாட்டை பொருளாதார நெருக்கடிகளிலிருந்து விடுவித்ததோடு, ஆசியப் புலிகள் (Asian Tigers) எனப்படும் ஆசியாவின் பொருளாதார முன்னேற்றகரமான நாடுகளின் வரிசையில் மலேசியாவை அவர் இணைத்தார். இதுவே, மஹாதிரின் மிகப் பெரும் சாதனையாகக் கொள்ளப்படுகின்றது.

விவசாயத்திலிருந்து வேகமாக வளர்ச்சியடையும் கைத்தொழில் மயப்பட்ட நாடாக மலேசியாவை மாற்றியமைத்த மஹாதிர், 2020 இல் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பட்டியலில் மலேசியா இணைந்து கொள்ளும் என்றும் அறிவித்திருந்தார். எனினும், 2003 இல் அவர் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றார்.

மஹாதிரின் வெளிநாட்டுக் கொள்கை தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளின் தலைவர்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகும். உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் தயவு தாட்சண்யத்துடன்தான் ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற தெற்காசிய மனப்பாங்கை மஹாதிர் உடைத்து நொறுக்கினார்.

ஒரு பன்மைப் பாங்கான நாட்டில் அனைத்து இனச் சமூகங்களையும் இணைத்துக் கொண்டு அரசியல் ஸ்திரப்பாட்டுடன் பொருளாதாரத்தை முன்னேற்றிச் செல்லலாம் என்பதற்கு மலேசியாவில் மஹாதிரின் கொள்கையும் சிங்கப்பூரில் லீ குவானின் கொள்கையும் முன்னோடி உதாரணங்களாகும்.

மஹாதிர் முதன் முறை பதவியேற்ற போது சீனச் சிறுபான்மையினரும் இந்தியச் சிறுபான்மையினரும் அச்சமடைந்தனர். மலேசிய சிறுபான்மைச் சமூகங்களை புறமொதுக்கி விட்டு மலாயர்களுக்கு அபிவிருத்தித் திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்பட்டு விடுமோ என்பதே அவர்களின் அச்சமாக இருந்தது. மலேசியாவின் 70 மில்லியன் மக்கள் தொகையில் 60 வீதமானவர்கள் மலாயர்கள். எஞ்சியவர்கள் சீன, இந்திய சிறுபான்மையினர்.

தெற்கு, தென்கிழக்காசியாவின் பிற நாடுகளைப் போன்று பேரினத் தேசிய வாதத்தை மஹாதிர் தூக்கிப் பிடித்து விடுவாரோ என்ற அச்சம் சிறுபான்மையினருக்கு இருந்தது. ஆனால், இன, மொழி, மதத் தேசியவாதங்களை தூக்கியெறிந்த மஹாதிர், பொருளாதாரத் தேசியவாதத்தை (Economic Nationalism) தனது கொள்கையாக வகுத்துக் கொண்டார். நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும். நாட்டை அத்தகைய முன்னேற்றத்தின்பால் இட்டுச் செல்ல வேண்டும். இதற்கு உற்பத்தித் துறையைப் பெருக்கி, ஏற்றுமதியை அதிகரிக்கும் பொருளாதாரத் துறை சீர்திருத்தங்களை அவர் அறிமுகப்படுத்தினார்.

நாட்டிலுள்ள மக்களில் திறமைசாலிகளுக்கு அவர் இடம் வழங்கினார். அரச நிறுவனங்களில் தகுதியானவர்களுக்கு பொறுப்புக்கள் பகிரப்பட்டன. நாடு விவசாயத்திலிருந்து வேகமாக கைத்தொழில் மயமாகியது. சீனர்களும் இந்தியர்களும் மஹாதிரை வெகுவாக ஆதரித்தனர். 1995 தேர்தலிலும் 1999 இல் நடந்த தேர்தலிலும் பெரிஸான் நெஷனல் பாரிய வெற்றியீட்டியமைக்கு மஹாதிரின் செல்வாக்கே காரணம்.

எவ்வாறாயினும் 2016 இல் மஹாதிர் எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பில் இணைந்தார். 2009 இலிருந்து பிரதமராக இருந்து வந்த நஜீப் ரஸ்ஸாக் மூன்றாம் முறை பிரதமர் பதவிக்கு களமிறங்க எண்ணிய சந்தர்ப்பத்தில் தேர்தல் நடந்தது. எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு எதிர்பார்ப்பின் கூட்டணி (Pakatan Haropan) என்ற பெயரில் களமிறங்கியது. இந்தக் கூட்டமைப்பே இப்போது வெற்றியீட்டியுள்ளது. இதன் மூலம் அம்னோவினதும் பெரிஸான் நெஷனலினதும் 61 ஆண்டுகால அரசியல் ஆதிக்கம் முடிவுக்கு வந்துள்ளது.

பிரதமர் நஜீபுக்கு எதிராக கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட பல பில்லியன் டொலர் ஊழல் குற்றச்சாட்டு மஹாதிரின் மீள்வருகைக்கு சாதகமான சூழலை உருவாக்கியது. 2016 இல் அல் ஜஸீராவுக்கு நேர்காணல் வழங்கிய மஹாதிர், அன்று முதலே நஜீபுக்கு எதிரான பிரச்சாரங்களைத் தொடங்கி விட்டார். நஜீப் நாட்டை சரியான திசையில் வழிநடாத்தவில்லை. அதனால் அவர் நாட்டின் பொருளாதாரத்தையும் அரசியலையும் சீர்குலைத்து விட்டார். அவர் பதவி விலகிச் செல்ல [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மஹாதிர் அந்த உரையில் கூறியிருந்தார்.

15 ஆண்டுகளுக்குப் பின்னர் எதிர்க் கட்சிகளின் கூட்டமைப்பினூடாக மீளவும் மஹாதிர் மலேசியாவின் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டதன் மூலம் உலகிலேயே மிக வயதான பிரதமர் என்ற பெருமையையும் பெற்றுக் கொள்கிறார். தொடக்கத்தில் தொழில் முறை வைத்தியராக விளங்கிய மஹாதிருக்கு இப்போது வயது 92.

1990 களின் இறுதிப் பகுதியில் மஹாதிர் பிரதமராக இருந்த போது தூர நோக்குடனும் சிறந்த அபிவிருத்திக் கொள்கையுடனும் நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்றார். அதன் மூலம் நவீன மலேசியாவின் சிற்பி எனப் பெயர் வாங்கினார். தலைநகர் கோலாலம்பூரை நவீனமயமாக்கினார். உலகத்தின் மிக உயர்ந்த கோபுரங்களை முதலில் நிர்மாணித்தவர் மஹாதிர்தான். அவரது பொருளியல் தேசியவாதம் மிகுந்த வரவேற்பையும் சிலாகிப்பையும் பெற்றது. ஆனால், மஹாதிரின் உள்நாட்டுக் கொள்கை தொடர்பான இன்னொரு பக்கம் உள்ளது. மஹாதிர் பிரதமராக இருந்தபோது அவரதும் அவரது குடும்பத்தினதும் ஊழல் மோசடிகளைச் [illegible]

இன, மொழி, மதத் தேசிய வாதங்களை தூக்கி யெறிந்த மஹாதிர், பொருளாதாரத் தேசியவாதத்தை (Economic Nationa lism) தனது கொள்கையாக வகுத்துக் கொண்டார். நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும். நாட்டை அத்தகைய முன்னேற்றத்தின்பால் இட்டுச் செல்ல வேண்டும். இதற்கு உற்பத்தித் துறையைப் பெருக்கி, ஏற்றுமதியை அதிகரிக்கும் பொருளாதாரத் துறை சீர்திருத்தங்களை அவர் அறிமுகப்படுத்தினார்.



நஜீப் ரஸ்ஸாக்



அன்வர் இப்றாஹீம்



மஹாதிர் முஹம்மத்

விசுவாசிகள், மஹாதிரின் விமர்சகர்கள் என்று இரண்டு முகாம்கள் உருவாகின.

இன்னொரு பக்கம் மஹாதிரின் ஊழல்களை கடுமையாக எதிர்த்து நின்ற அன்றைய எதிர்க்கட்சிகளின் கூட்டணியில்தான் இன்று மஹாதிர் களமிறங்கி வெற்றி பெற்றுள்ளார். அரசியல் எதிராளிகளை ஒடுக்குவதற்கு அவர் கொண்டு வந்த சர்ச்சைக்குரிய உள்நாட்டு பாதுகாப்புச் சட்டம் (Internal Security Act) அப்போது கடும் விமர்சனத்திற்கு உட்பட்டது.

மஹாதிர் இந்தச் சட்டத்தை அரசியல் எதிராளிகளுக்கு எதிராக மட்டுமன்றி, மலேசியாவின் முன்னணி இஸ்லாமிய சிந்தனையாளர்கள், அறிஞர்களுக்கு எதிராகவும் திருப்பினார். இந்தச் சட்டத்தால் மிக மோசமான பின்விளைவை எதிர்நோக்கியவர்தான் மலேசியாவின் முன்னாள் பிரதிப் பிரதமர் அன்வர் இப்றாஹீம். மஹாதிரும் அன்வரும் மிக நெருங்கிய நண்பர்கள். நாட்டின் நிதிய மைச்சராகவும் பிரதிப் பிரதமராகவும் விளங்கிய அன்வர் இப்றாஹீமின் அரசியல் செல்வாக்கைக் கண்டு அச்சமடைந்த மஹாதிர், உள்நாட்டு பாதுகாப்புச் சட்டத்தை அன்வருக்கு எதிராகப் பிரயோகித்தார். அன்வர் இப்றாஹீம் ஒருபால் உறவுக் குற்றச்சாட்டின் பெயரில் கடந்த 20 ஆண்டுகாலமாக சிறைவாசம் அனுபவிக்கின்றார். இதற்கு மூல காரணமாக இருந்தவர் டொக்டர் மஹாதிர் முஹம்மத் தான் என்பதில் சந்தேகமில்லை.

தற்போது மஹாதிரின் கொள்கையில் மாற்றம் வெளிப்பட்டுள்ளது. சமீப வாரங்களில் மஹாதிர் அன்வர் இப்றாஹீம் குறித்து தனது அக்கறையை வெளிப்படுத்தியுள்ளார். The Malaysian Insight எனும் பத்திரிகைக்கு மஹாதிர் வழங்கிய நேர்காணலில், "அன்வர் இப்றாஹீமின் உணர்வுகளை நான் புரிந்துகொள்கிறேன். எனது ஆட்சிக் காலத்தில்தான் அன்வர் சிறைக்கு அனுப்பப்பட்டார். எனவே என்னை அவர் இலகுவில் ஏற்றுக்கொள்ள மாட்டார்" எனக் கூறியிருந்தார்.

அன்வர் இப்றாஹீமின் மனைவி வான் அஸீஸா மஹாதிர் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பிலேயே இம்முறை தேர்தலில் களமிறங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பின்னணியிலேயே அம்னோ மஹாதிரை சந்தர்ப்பவாதி என்று கடுமையாகச் சாடியுள்ளது. தேர்தலுக்கு சற்று முன்பாகவும் மஹாதிர் சில குற்றச்சாட்டுகளுக்காக விசாரணைக்கு உட்பட்டிருந்தார். ஏப்ரல் 27 இல் மஹாதிர் பயணம் செய்ய இருந்த விமானமொன்று திருப்திகரமாய் இல்லை எனக் காரணம் கூறப்பட்டு அவரது பயணம் ரத்துச் செய்யப்பட்டது. இஸ்லாமியவாதிகள் மீதான அடக்குமுறை, அன்வர் இப்றாஹீம் மீதான மஹாதிரின் குற்றச்சாட்டு என்பன மஹாதிரின் கடந்த கால அரசியல், பொருளாதார சாதனைகளை விட அவருக்கு மலேசியர்களிடம் கடும் அதிருப்தியை தேடிக் கொடுத்தன.

ஆனால், நஜீப் ரஸ்ஸாக்கின் தலைமைத்துவ பலவீனமும் ஊழல் மோசடிகள் குறித்த குற்றச்சாட்டும் மஹாதிரின் மீள்வருகையைச் சாத்தியப் படுத்தியது. ஆட்சியமைப்பதற்குத் தேவைப்பட்ட ஆசனங்களை விட ஒரு மேலதிக ஆசனத்தால் மஹாதிரின் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. 222 ஆசனங்களைக் கொண்ட மலேசியப் பாராளுமன்றத்தில் 113 ஆசனங்களை பக்கடான் ஹரோ பான் பெற்றுள்ளது.

தென்கிழக்கு ஆசிய அரசியல் துறை நிபுணரும் ரோமிலுள்ள Johan Cobat பல்கலைக்கழக பேராசிரியருமான Bridget Welsh மஹாதிரின் மீள்வருகை குறித்து இவ்வாறு எழுதுகிறார். "மஹாதிர் ஒரு அரசியல் காட்சி மாற்றுனர் (Game Changer). அதிகாரத்தைக் கை மாற்றுவது சாத்தியமானதுதான் என்பதை இந்த வெற்றியின் மூலம் அவர் மக்களுக்கு உணர்த்தியுள்ளார்."

உண்மையில் மஹாதிர் குறைநிறைகளோடு கூடிய ஒரு சிறந்த தலைவர் என்பதில் சந்தேகமில்லை. அவர் மீதான சிலாகிப்புகள் இருப்பது போல் கடும் விமர்சனங்களும் உள்ளன. தெற்கிலுள்ள மாநிலங்கள் அவரது ஆட்சியில் அபிவிருத்தி கண்டது போல் வடக்கிலுள்ள கிராமப் புற மாநிலங்கள் வளர்ச்சி காணவில்லை. வெளிநாட்டவர்களுக்கு அபிவிருத்தி மாயை காட்டுவதற்கு நாட்டின் ஒட்டுமொத்த சொத்துக்களையும் தலைநகர் கோலாலம்பூரில் கொட்டி முடக்கியுள்ளார். அங்கிருந்து தூரச் செல்லச் செல்ல மஹாதிரின் பொருளாதாரக் கொள்கையிலுள்ள ஓட்டைகள் மெல்ல மெல்ல துலங்கும் என்று மஹாதிரை விமர்சிக்கின்றவர்கள் கூறுகிறார்கள்.

மஹாதிரின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி குறித்து பல்வேறுபட்ட விமர்சன அணுகுமுறைகள் உள்ளபோதும், பல்லின சமூகங்கள் வாழும் ஒரு நாட்டில் பெரும்பான்மை இன மேலாதிக்கத்தை நிறுவி, அரசியல் ஆதாயம் தேட முயலவில்லை என்பது மஹாதிரின் முக்கிய சாதனையாகும். கைத்தொழில் மயப்பட்ட ஆசியப் புலிகள் என்றழைக்கப்படும் வளர்ச்சியடைந்த ஆசிய நாடுகளின் வரிசையில் 10 ஆவது இடத்தில் இருக்கும் மலேசியா, அபிவிருத்தி அடைந்த நாடு என்ற இலக்கை நோக்கிச் செல்வதற்கு மஹாதிர் அடித்தளம் இட்டார் என்பதை நேர்மையான எந்த ஆய்வாளரும் நிராகரிக்க மாட்டார்கள்.

இதற்கு அடித்தளமாக இருந்தது மஹாதிர் உருவாக்கிய தேசிய நல்லிணக்கமே. இன்று மஹாதிரின் மீள்வருகையை மலேசியர்கள் இரண்டு விதமாகப் பார்க்கின்றனர். 61 ஆண்டுகளுக்குப் பின்னர் நாட்டில் ஏதோ ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளதை ஆதரிக்கும் மக்கள் மஹாதிரின் மீள்வருகையை நம்பிக்கையோடு பார்க்கின்றனர். இன்னொரு சாரார் இன்று தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அல்லது மலேசியாவை முன்னுதாரண நாடாக மாற்றுவதில் கடந்த காலத்தைப் போன்ற பங்களிப்பை ஆற்றும் நிலையில் மஹாதிர் இருப்பாரா என்ற சந்தேகத்தை எழுப்புகின்றனர். குறிப்பாக அவரது உடல் நிலையும் வயது முதிர்ச்சியும் உயிர்த்துடிப்புள்ள அரசியல் ஈடுபாட்டிற்குத் தடையாக இருக்கக் கூடும் என்பதே அவர்களின் கருத்தாகும்.

எவ்வாறாயினும் மஹாதிரின் மீள்வருகை தெற்காசியாவில் ஒரு பாரிய எதிர்பார்ப்பை எழுப்பியுள்ளது.

# அநுராதபுரம், இபலோகமவில் தாண்டவமாடும் இனவாதம்


## உண்மையில் நடந்தது என்ன?

• ஹெட்டி ரம்ஸி

அநுராதபுரம் மாவட்டம் இபலோகம பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட விஜிதபுர, பெலுங்கல எனும் பிரதேசத்தில் அமைந்துள்ள தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசம் ஒன்றை வீடமைப்பு திட்டம் ஒன்றிற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அழித்துள்ளதாக எழுந்துள்ள குற்றச்சாட்டை அடுத்து இபலோகம பிரதேச செயலாளர் சாஜிதா பானு மீது வீண் குற்றச்சாட்டுக்களை சுமத்தி இந்த விடயத்தை இனவாத ரீதியில் சித்தரிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது விடயம் தொடர்பில் ஆராயும் போது பல்வேறு உண்மைத் தகவல்களை வெளிக்கொணர முடிந்தது.

### நடந்தது என்ன?

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வேண்டுகோளுக்கிணங்க இபலோகம தொகுதியில் வீடற்றவர்களுக்கு வீட்டுத் திட்டமொன்றை அமைப்பதற்குப் பொருத்தமான இடம் குறித்து கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் நடைபெற்ற 'பொது பலாத் தின' கூட்டத்தில் இபலோகம பிரதேச செயலாளர் சாஜிதா பானுவினால் கருத்து வினவப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இலக்கம் 516 புளியங்குளம் பிரிவைச் சேர்ந்த கிராம சேவகரான என்.பி.கே. விஜேசிங்க, தனது கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டத்தை மேற்கொள்ள முடியும் எனக் குறிப்பிட்டு 10 ஏக்கர் நிலம் பற்றிய விபரத்தையும் தெரிவித்து 2017.11.22 ஆம் திகதி இபலோகம பிரதேச செயலாளருக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.





இபலோகம பிரதேச செயலாளர்
சாஜிதா பானு

இதில் கிழக்கு எல்லை தொல்பொருள் நிலம் என்பதும் அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலம் தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களின் இணக்கப்பாட்டை பெற்று வீடமைப்பு திட்டத்தை அமுல்படுத்துமாறு வீடமைப்பு அதிகார சபைக்கு அறிவித்தல் வழங்கும் படி இபலோகம பிரதேச செயலாளர் சாஜிதா மேற்படி கிராம சேவகரின் கடிதத்தில் குறிப்பொன்றை இட்டுள்ளார். கிராம சேவகரின் கடிதத்திற்கு பிரதேச செயலாளர் வழங்கிய குறிப்பை கவனத்திற் கொள்ளாமல் கிராம சேவகர் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த நிலம் பற்றிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பதில் பிரதேச செயலாளரான ஆர்.எம்.டீ. ரத்நாயக்க வீட்டுத் திட்டத்திற்கு பொருத்தமான இடமொன்றை பரிந்துரை செய்தல் எனும் தலைப்பில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அநுராபுரம் மாவட்ட முகாமையாளருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

பிரதேச செயலாளரின் குறிப்பின் படி வேலை நடக்காவிடினும் இந்தக் கடிதத்திலும் கூட குறிப்பிட்ட நிலத்தின் கிழக்கு எல்லை தொல்பொருள் பிரதேசம் என்பது தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு நிலம் அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட நிலம் வீடமைப்பு அதிகார சபைக்கு சட்டபூர்வமாக ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

நிலத்தினை ஆரம்பக் கட்டமாக அடையாளங் கண்டுகொள்வதின் மூலம் மாத்திரம் நிலத்தை தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு உரிமைப்படுத்திக் கொள்ளும் அதிகாரம் கிடைப்பதில்லை. சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பரிந்துரைகளைப் பெற்று குறிப்பிட்ட நிலத்தை நிலையாகவே வேறுபடுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகள் இன்னும் எஞ்சியிருக்கையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை 2018.04.09 ஆம் திகதி வீட்டுத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான அடிக்கல்லை நட்டியுள்ளது.

அடிக்கல் நட்டும் நிகழ்வுக்கு இபலோகம பிரதேச செயலாளர் சாஜிதாவுக்கு எவ்வித அழைப்புக்களும் விடுக்கப்படவில்லை என்பதும், அடிக்கல் நடப்படுவதாக அறிவித்தலொன்று மாத்திரமே விடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்த அறிவித்தலும் கூட குறிப்பிட்ட வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல் நடப்பட்டு முடிந்ததன் பிறகே பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே இதன்போது அந்த நடவடிக்கையை தடுக்கும் இயலுமைகளும் அவருக்குக் காணப்படவில்லை. அத்துடன் குறித்த நிகழ்வுக்கு பிரதேச செயலாளர் சார்பில் ஒரு பிரதிநிதியேனும் சென்றிருக்கவுமில்லை. இவ்வாறு அரசியல் அதிகார சபையின் சிற்சில தேவைகள் நிமித்தம் குறிப்பிட்ட விடயம் துரிதமாகவும் வலுக்கட்டாயமான முறையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெரிகிறது.

இந்நிலையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை புளியங்குளம் மத்திய தர வகுப்பினருக்கான மாதிரிக் கிராமத்திற்கும், புளியங்குளம் குறைந்த வருமானங்களை பெறுவோருக்கான மாதிரிக் கிராமத்திற்கும் 48 பேரை நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவுசெய்திருந்தது. இந்தப் பெயர்ப் பட்டியலை பிரதேச செயலகத்தின் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்துமாறும் அதற்கு ஏதும் எதிர்ப்பு வெளியிடப்பட்டால் எழுத்து மூலம் தனக்கு அறிவிக்குமாறும் மார்ச் மாதம் 19ஆம் திகதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் டபிள்யூ.எம்.ஆர்.எஸ். டீ.கே. விஜேரத்ன இபலோகம பிரதேச செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இவ்வறிவித்தலுக்கு அமைய வீடுகளைப் பெறுவோரின் பெயர் விபரம் அறிவித்தல் பலகையில் ஒட்டப்பட்டுள்ளது. வீடுகளை பெறுவதற்காக தெரிவுசெய்யப்பட்டோரில் இருவர் மாத்திரமே முஸ்லிம்கள். அத்துடன் இந்த 48 பேரும் இபலோகம பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டதனைத் தொடர்ந்து இதில் முறைகேடுகள் நடந்திருப்பதாக தெரிவித்து விவசாய அமைச்சர் துமிந்த திசாநாயக்க உடனடியாக இந்தத் திட்டத்தை அடுத்து வரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வரையில் இடைநிறுத்துமாறு 2018.04.04 ஆம் திகதி மின்னஞ்சல் மூலம் அறிவித்தல் வழங்கியுள்ளார். இது விடயம் தொடர்பில் 2018.04.04 ஆம் திகதியன்றே இபலோகம பிரதேச செயலாளர் சாஜிதா பானு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். இருந்தபோதிலும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை குறித்த நிலத்தினை அபிவிருத்தி செய்யும் பணியை மேற்கொண்டு வந்துள்ளது.

பூகொல்லாகம பிரதேசத்தில் ஒரு நிலப்பகுதி பெகோ இயந்திரம் கொண்டு தரைமட்டமாக்கப்படுவதாகவும், அங்கு தொல்பொருட்கள் காணப்படுவதாகவும் இபலோகம பிரதேச செயலாளருக்கு கிடைக்கப் பெற்ற தொலைபேசி அழைப்புக்கு இணங்க, அன்றைய தினமே கிராம சேவகர் சம்பவ இடத்துக்கு அனுப்பப்பட்டு பிரதேச செயலாளர் சாஜிதாவினால் குறித்த நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. தொல்பொருள் நிலம் அழிக்கப்படுவதாக அனுராதபுரம் தொல்பொருள் திணைக்களத்திற்கு 2018.04.25 அன்று அறிவித்தல் கடிதமொன்றும் பிரதேச செயலாளரினால் அனுப்பப்பட்டுள்ளது. எனவே வீடமைப்பு திட்டம் தடை செய்யப்பட்டதால் இந்தச் சிக்கலை விரைவாக தீர்த்து விட வேண்டும் என்ற நோக்கில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தொல்பொருள் திணைக்களத்திற்கு தமது வாகனத்தை கொடுத்து வெளிக்களப் பரிசோதனையை மேற்கொள்ளச் செய்துள்ளனர்.

இதன்படி 2018.05.03 ஆம் திகதியன்று தொல்பொருள் திணைக்களம் மேற்கொண்ட பரிசோதனையில் தொல்பொருள் பிரதேசம் அழிக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. இதனைத் தொடர்ந்து அனுராதபுரம் தொல்பொருட்கள் திணைக்களம் இபலோகம பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு எதிராக தொல்பொருட்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறி இபலோகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவுசெய்துள்ளனர்.

இந்நிலையில் 2018.05.05 அன்று மாவட்ட செயலாளர் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் உள்ளிட்டோர் தொல்பொருட்கள் அழிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்படும் இடத்திற்கு கள விஜயமொன்றை மேற்கொண்டு அங்கு பொது மக்களிடமும் வாக்கு மூலத்தைப் பெற்றுள்ளனர். அன்றைய தினம் பொலிஸாரும் தொல்பொருள் வனப்பகுதியை நீங்கள் வீடமைப்பு அதிகார சபைக்கு வழங்கினீர்களா? என பிரதேச செயலாளர் சாஜிதாவிடம் வினவியுள்ளனர். அதற்கவர், அப்படியொரு இடத்தையோ, தொல்பொருட்களை அழிப்பதற்கான அனுமதியையோ நாங்கள் வழங்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

### விசாரணையும் இடமாற்றமும்

இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கில் அனுராதபுரம் மாவட்ட செயலாளர் உதவி பிரதேச செயலாளரிடம் பொறுப்புக்களை ஒப்படைத்து விட்டு மாவட்ட செயலகத்திற்கு ஆஜராகுமாறு இபலோகம பிரதேச செயலாளர் சாஜிதாவுக்கு கடந்த 05ஆம் திகதி அறிவித்துள்ளார். லீவு நாட்களை தொடர்ந்து கடந்த 08ஆம் திகதி இபலோகம பிரதேச செயலாளர் மாவட்ட செயலகத்திற்கு சென்றுள்ளார். மறுதினம் 09ஆம் திகதி இவர் பளுகஸ்வெவ பிரதேச செயலகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

மீண்டும் இவர் கடந்த 14ஆம் திகதி மாவட்ட செயலகத்திற்கு அழைக்கப்பட்டு, அவருக்கு பதிலாக பளுகஸ்வெவ பிரதேசத்திற்கு பிறிதொரு பிரதேச செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். தற்பொழுது அனுராதபுரம் மாவட்ட செயலகத்தில் கடமை புரியும் இவர் எதிர்வரும் காலங்களில் எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்தப் பதவிகளில் அமர்த்தப்படுவார் என்பதில் நிச்சயமில்லாமல் உள்ளது.

இந்நிலையில் கடந்த 15ஆம் திகதி அனுராதபுரம் மாவட்ட செயலாளர், இபலோகம பிரதேச செயலாளர் மற்றும் பூகொல்லாகம பிரிவு கிராம சேவகர் ஆகியோர் உள்விவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதன்போது அதிகாரிகளின் குறைகளை சுட்டிக்காட்டிய அமைச்சர் வஜீர அபேவர்தன விசாரணைகளை துரிதப்படுத்துமாறு அறிவித்துள்ளார். இதேவேளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் தொல்பொருட்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படும் பிரதேசத்திற்கு வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இனவாதம்

இபலோகம பிரதேச செயலாளர் சாஜிதா பானு இனவாத நோக்கில் செயற்படவில்லை என்பதும், அவரது செயற்பாடுகளில் எவ்வித தவறுகளும் இல்லை என்பதும் மேற்படி விடயங்களிலிருந்து தெளிவாகிறது. இந்நிலையில் ஒரு சில சிங்கள ஊடகங்கள் தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க வனப்பகுதி அழிக்கப்படுவதாகவும், அதற்குரிய அனுமதியை இபலோகம பிரதேச செயலாளர் வழங்கியிருப்பதாகவும் தெரிவித்து விடயத்தை பூதாகரப்படுத்தியுள்ளன.

இபலோகம பிரதேச செயலாளர் ஒரு முஸ்லிம் என்பதால் இந்த விடயம் இனவாதிகளுக்கு கொளுத்த தீனியாய் அமைந்தது. கிழக்கு மாகாணத்தில் தொல்பொருட்கள் அழிக்கப்படுவதாகவும், [illegible] முஸ்லிம்கள் குடியமர்த்தப்படுவதாகவும் கூச்சலிட்டு வந்த சிங்கள இனவாதிகளுக்கு இந்த விடயம் புதிய தலைப்பாய் மாறியுள்ளது. ஒரு ஊடக நிறுவனத்தின் செய்தித் தயாரிப்பாளர் 'பிரதேச செயலாளர் முஸ்லிம் என்பதால் இபலோகம செய்தி வெற்றியளித்திருப்பதாகவும், நான்கைந்து நாட்களாக இந்தச் செய்தியை பிரசுரித்துச் செல்ல முடிந்ததாகவும்'' குறிப்பிட்டுள்ளார்.

இபலோகம பிரதேச செயலாளர் ஊடகங்களுக்கு தெரிவித்த விடயங்களுள் சில பகுதியை மாத்திரம் எடுத்து அவர் மீது குற்றம் சுமத்தப்படும் வகையில் சில சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. மெடில்லே பஞ்ஞாலோக தேரரின் பெயரில் உள்ள முகநூல் பக்கத்தில் 'துட்டகைமுனு மன்னனின் இதயமான விஜிதபுர, பெலும்கல தொல்லியல் வனப்பகுதியை பெகோ இயந்திரம் கொண்டு அழித்த இபலோகம பிரதேச செயலாளருக்கு எதிராக உடனடியாக சட்டத்தை அமுல்படுத்து!, அவளிடம் இந்நாட்டின் பண்டைய வரலாறு தொடர்பில் இம்மியளவு கௌரவமேனும் இல்லாத பாவத்திற்கு பல ஆயிரம் வருடங்கள் இப்பூமியில் ஆரோகணித்திருந்த விஜிதபுர, பெலும்கல தொல்பொருள் வனப்பகுதி இன்று தரைமட்ட மாக்கப்பட்டுள்ளது'' என பதிவிடப்பட்டிருந்தது.



அதிபர், எச்.என். சமீன்
அளுத் கந்திரியாகம சிங்களப் பாடசாலை

இந்தப் பதிவினை சுமார் 9500 பேர் பகிர்ந்துள்ளார்கள். 2000 பேர் தங்களது கருத்துக்களையும் பறிமாறியுள்ளனர். இதில் பெரும்பாலானோர் இனவாதக் கருத்துக்களை பதிவிட்டுள்ளனர். குறைந்தபட்சம் 4 லட்சம் பேருக்கு இந்தப் பதிவு சென்றிருக்கும் என நம்பப்படுகின்றது. முஸ்லிம் சமூகத்தை சேர்ந்த சகல அரசாங்க அதிகாரிகளையும் நீக்க வேண்டும், முஸ்லிம்கள் திட்டமிட்ட அடிப்படையில் அரசாங்க சேவையில் அதிகாரத்தைப் பிடித்துள்ளார்கள், முஸ்லிம்களுக்கு தொல்பொருள் முக்கியத்துவமிக்க இடங்களின் பெறுமதி தெரிவதில்லை என்றவாறு பல்வேறு கருத்துக்கள் மேற்படி கருத்துக்கு கீழால் பதிவிடப்பட்டிருந்தன.

சிங்கள ஊடகங்களில் வெளியான போலிச் செய்தியைத் தொடர்ந்து இபலோகம பிரதேச செயலகத்தை சுற்றிவளைத்த ராவண பலகாயவைச் சேர்ந்த தேரர்கள் ''பிரதேச செயலாளரின் உறவினர்களுக்கு வழங்கவே தொல்பொருள் நிலம் அழிக்கப்பட்டுள்ளது'' என்பதாக தெரிவித்துள்ளனர். கடந்த 12ஆம் திகதி இபலோகம பிரதேசத்திற்கு வருகை தந்த முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா ''சிங்கள பௌத்த இனத்தை அடிமைப்படுத்தி வேறு இனத்தவர்களை குடியமர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டம்'' என்பதாக கருத்து வெளியிட்டிருந்தார். பொதுபல சேனாவைச் சேர்ந்த தேரர்களும் சம்பவ இடத்திற்கு விரைந்து பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இபலோகம பிரதேச செயலாளர் ஒரு முஸ்லிம். எனவே அவரை அந்தப் பதவியிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்ற கோணத்திலேயே இனவாதிகள் இந்த விடயத்தை அணுகியிருப்பது தெரிகிறது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பலவந்தத்திலும் அவசரத்திலும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் காரணமாகவே தொல்பொருள் நிலம் அழிக்கப்பட்டிருப்பது உறுதியாகியுள்ளது. வீடுகளைப் பெறுவதற்கு நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்பட்டவர்களுள் இருவர் மாத்திரமே முஸ்லிம்கள். ஏனைய 46 பேரும் சிங்களவர்கள். அத்துடன் இவர்கள் (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முஹம்மது சல்மானின் கண்டுபிடிப்பு

• அனஸ் அப்பாஸ்

குறைந்த செலவில் வீட்டுக்குத் தேவையான மின்சக்தியை (சூரிய சக்தி மூலம்) (Low Cost Solar Power System) பூர்த்தி செய்யும் கருவி ஒன்றை கண்டு பிடித்து தேசிய விருதை வென்றுள்ளார் சமீம் முஹம்மது சல்மான் குர்ஷித்.

மூதூர் 223, கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் அப்துல் மஜீத் சமீம்-ஷுஹூதா தம்பதிகளின் மூத்த புதல்வரான இவர், தனது ஆரம்பக் கல்வியை மூதூர் ஆயிஷா வித்தியாலயத்தில் கற்றார். பின்னர், தரம் -10 இல் இருந்து மூதூர் அல்-ஹிலால் மத்திய கல்லூரியில் கல்வியைத் தொடர்ந் தார். சல்மானின் தந்தை ஒரு வியாபாரி. தாய் இல்லத்தரசி.


தன்னிடமுள்ள புத்தாக்க திறன் வெளிப்பாடு தரம்-04 இல் முதன் முதலில் வெளிப்பட்டதாகக் குறிப்பிடும் சல்மான், இதன்போது பெற்றோர் ஆர்வ மூட்டியதுடன், ஆசிரியை முனீரா, அதி பர் ஹிஷாம் சேர் ஆகியோர் வழங்கிய ஒத்துழைப்பு மகத்தானது என்கின்றார்.

சல்மான் குர்ஷித் குறித்து அல்-ஹிலால் மத்திய கல்லூரி அதிபர் முபாரக் அவர்களிடம் ஆயிஷா வித்தியாலய அதிபர் ஹிஷாம் அவர்கள் வழங்கிய வாய்மொழி சான்றிதழும், திறன் வெளிப் பாட்டு உத்தரவாதமும் சல்மானின் அடைவை துரிதமாக்கியது. ''2016 ஆம் ஆண்டு Energy Education Programme இல் நீ பங்குபற்ற வேண்டும்'' என்று புதிய பாடசாலை அதிபர் முபாரக் சேர் கூறியதும், மறுப்பேதும் இன்றி சவாலை ஏற்று, கல்வி அமைச்சினால் நடாத்தப் பட்ட இப்போட்டியில் மாகாண மட்டத் தில் இரண்டாமிடத்தைப் பெற்று தனது திறமைக்கான முதல் அங்கீகாரத்தை சுவீ கரித்தார் சல்மான்.

ஐந்து மாதங்கள் நகர்ந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான பாடசாலை சக்திவள கழக உறுப்பினர்களுக்கிடையிலான தேசிய போட்டிக்கான அழைப்பு வந்தது. இத னை கல்வி அமைச்சுடன் இணைந்து சக்திவள அமைச்சு நடாத்தியது. உற்சாக மேலீடு இன்னும் அதிகரிக்க, அதிலும் களமிறங்கினார் சல்மான். இம்முறை தேசிய ரீதியான போட்டி என்பதால் பெறுபேறுகள் பாடசாலைக்கு அனுப்பும் வரை காத்திருக்குமாறு கூறப்பட்டது. பொறுமைக்கான சோதனை ஒரு மாதத்தை எட்ட, அந்த மகிழ்ச்சிகரமான செய்தி கல்வி அமைச்சின் உத்தியோக பூர்வ இணையதளம் ஊடாக கிடைக்கப் பெற்றது. அவ்வருடம் தேசிய மட்ட முதலிடம் வழங்கப்படவில்லை. சல் மான் குர்ஷித் இரண்டாமிடம் எனவும், இன்னும் இருவர் மூன்றாம் இடங்கள் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மகிழ்வுடன் க.பொ.த (சா/தர) பரீட் சையை எழுதி முடித்து இரண்டு நாட் களில் தேசிய ரீதியான விருது வழங்கும் விழாவுக்காக கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்ட பத்திற்கு விரைந்தார் சல்மான். பதக்கம், சான்றிதழுடன் ரூபா. 40,000 பணப் பரிசும் அவருக்கு வழங்கி கௌரவிக்கப் பட்டது. பல்வேறு துறைகளில் சாதனை படைத்தோருக்கான விருதுகள் இதன் போது வழங்கப்பட்டன.

பொதுவாக இலங்கையில் ஒவ்வொரு வீட்டுக்கும் அரசாங்கம் 230v 2000w முதல் 6000w வரையான மின்சக்தி யையே விநியோகிக்கின்றது. சல்மான் உருவாக்கியுள்ள இப்புதிய முயற்சியால் 230v 3000w மின்சாரத்தை விநியோகிக்க முடியுமாக இருக்கின்றது. இவ்வாறு தொடராக ஐந்து வருடங்களுக்கு எவ் வித செலவுமின்றி மின்சாரத்தை பெற முடியும் என உத்தரவாதம் தருகின்றார் அவர். ஐந்து வருடங்கள் கடக்கின்ற போது இக்கருவியில் உள்ள மின்கலம் (Battery) இன் ஆயுட்காலம் குறைவதே அதற்கான காரணம். மேலும், பாவனைக் காலத்தில் இக்கருவி பராமரிப்பு (Service) செய்யப்படவும் வேண்டும்.



இலங்கை ரூபாவில் இதற்கான செலவு அண்ணளவாக 20,000 முதல் 30,000 வரை ஆகும். வீடொன்றில் உள்ள சகல இலத்திரனியல் பொருட்களும் (உதாரணமாக, ஸ்திரி (Iron) செய்வதில் இருந்து சலவை இயந்திரம் (Washing Machine வரை) இதன்மூலம் சுலபமாக இயங்கும். இதனைச் சந்தைப்படுத்துவ தால் வணிக ரீதியான இலாபம் கிடைப் பதோடு தேசிய ரீதியான உற்பத்திக்கு பங்களித்த மன நிறைவையும் அடைய முடியும். எனவே, அதற்கான ஆக்கபூர்வ மான செயற்பாடுகளில் அவரது பெற் றோர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் பங்களிப்பார்கள் என நம்புகின்றேன்.

தனது வழிகாட்டிகளாக அன்புத் தந்தையையும், பயாஸ் ஆசிரியரையும் குறிப்பிடும் இவர், பெற்றோருக்கும், பாடசாலை அதிபர் M. முபாரக், ஸஹ்யா நானா, ஹிசாம் ஆசிரியர், ஷிபா ஆசிரியர், பயாஸ் ஆசிரியர், முனீரா ஆசிரியர் மற்றும் நளீம் மாமா ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றார்.

''வளர்முக நாடு என்ற அடிப்படை யில் நீர் வளங்கள் அல்லது வளி (காற்று) மூலமாகவே இலங்கை அதிக மின்சா ரத்தை பெறுகின்றது. நீர் மூலமெனில் மின்னேரியா, கொத்மலை நீர்த்தேக்கம் போன்றவற்றில் இருந்தும், காற்றின் மூலமெனில் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் இருந்தும் மின் உற்பத்தி செய்யப்படுகின்றது. இதற்காக அதிக செலவு செய்யப்படுவதுடன், வீண் விரய மும் அதிகம் நேர்கின்றது. இக்கருவியை நாம் பயன்படுத்த ஆரம்பித்தால் அரசாங் கத்துக்கு எவ்வித செலவும் இருக்காது. எமது தேவையை நாமே பூர்த்தி செய்ய லாம். இக்கருவியில் உள்ள விசேடம் என்னவெனில் தன்னியக்க தொழிற் பாடு, தானாகவே சூரிய சக்தியை சேமி த்து தானாகவே மின்சக்தியாக விநியோ கிக்கின்றது. சூழலுக்கு எவ்வித பாதிப் பும் இல்லை.''

''இலங்கையிலுள்ள பாடசாலைகள் தோறும் சக்தி-வள கழகம் என்ற ஒன்று ஆரம்பிக்கப்பட்டதே சூழலுக்கு நன்மை பயப்பனவற்றை இயற்கையில் இருந்து பெற்று உற்பத்தி செய்வதற்கே. அந்த குறிக்கோளையும் எனது கண்டுபிடிப்பு நிறைவேற்றுகின்றது. அண்மையில் பாகிஸ்தான் நாட்டின் கராச்சி மாநிலத் தில் இதுபோன்று கருவிகள் வீடுதோறும் பொருத்தப்பட்டு அதற்கான வரி அரசி னால் அறவிடப்படுகின்றது. இலங்கை யில் தாராளமாக சூரிய ஒளி கிடைக் கின்றது. உதாரணமாக, வரட்சி நிலையில் உள்ள அனுராதபுர மாவட்டத்தை நோக் கினால் பரீட்சார்த்தமாக இம்முயற்சியை அரசாங்கம் அங்கு ஆரம்பிக்க முடியும்'' என்று கூறி முடித்தார் தற்போது க. பொ.த. உயர் தரப்பிரிவில் முதல் வரு டம் கற்று வரும் சல்மான் குர்ஷித்.

கிட்டியஎதிர்காலத்தில் காந்தப் புலனை மட்டும் பயன்படுத்தி மின்சக் தியை பெற்றுக்கொள்ளும் கருவியை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு வரும் 16 வயதுடைய இளம் கண்டுபிடிப் பாளர் சல்மான் குர்ஷிதுக்கு அன்பு கலந்த வாழ்த்துக்கள்!

# ஜம்இய்யதுல் உலமாவின் தோல்வி

• ஸலாஹுதீன்

இலங்கை முஸ்லிம்களின் தலைமை த்துவமாக தம்மை வரித்துக் கொண்டு 90 வருட காலம் கோலோச்சிய அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா என் றொரு சபை இனியும் தேவைதானா அல் லது இதனை முஸ்லிம்களின் தலைமை யாக தொடர்ந்தும் ஏற்றுக் கொள் வதா என்ற கேள்விக்கு சமூகம் விரைவில் விடைகண்டு விடும் எனத் தெரிகிறது.

நாட்டில் ஆங்காங்கே நடத்தப்பட்டு வரும் மன்றங்களிலும் சபைகளிலும் தற்போது புதியதொரு தலைமை உரு வாக்குவது தொடர்பான விடயமே பேசு பொருளாக மாறியிருக்கின்றது. முஸ்லிம் சமூகத்துக்கான தலைமை ஒன்றில்லை என்கின்ற உண்மையை நடந்து முடிகின்ற ஒவ்வொரு சம்பவங்களும் உணர்த்திச் செல்கின்றன. இதுதான் தனக்கான ஒரு தலைமையைத் தேடும் படலத்தை சமூ கத்தில் தூண்டி விட்டிருக்கிறது.




அப்படியானால் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தலைமைச் சபை இல்லையா என்ற கேள்வி எழும்புவ தற்கு வாய்ப்பில்லை என்கின்ற அள வுக்கு ஜம்இய்யதுல் உலமா மீதான நம் பிக்கையீனம்தான் சமூகத்தில் வளர்ந்தி ருக்கிறது. 94 வருடங்களாக ஜம்இய்ய துல் உலமா இலங்கையில் இயங்கி வருகிறது என்பதைத் தவிர வேறெதனை அது சாதித்திருக்கின்றது என்ற கேள் விக்கு ஜம்இய்யதுல் உலமாவிடம் எண் ணிலடங்காத பதில்கள் இருக்கலாம். ஆனாலும் தலைமையாக இருந்து சமூ கத்துக்குச் செய்ய வேண்டியவை என சமூகம் பட்டியல் போட்டு வைத்திருக் கின்ற விடயங்களில் ஜம்இய்யதுல் உலமா பதிலளிக்கும் நிலையில் எதுவும் செய்யப்படவில்லை என்பதை மிம்பர் போட்டுத்தான் சொல்ல வேண்டியதில் லை.

உலமாக்களின் சபை என்ற வகையில் மார்க்க விவகாரங்களில் அது முஸ்லிம் சமூகத்துக்குச் செய்திருக்க வேண்டிய விடயங்கள் ஏராளம் இருக்கின்றன. உலமா சபையின் அங்கத்த வர்களான உலமாக்கள் எங்கிருந்து வருகிறார்கள்? இலங்கையில் முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட சுமார் 235 மத்ரஸாக்களில் இருந்துதான் உலமாக்கள் இங்கு வந்து சேருகிறார்கள். இவர்களை உலமாக்கள் என அடையா ளம் காண்பதற்கு குறித்த மத்ரஸாக்கள் வழங்கும் ஷஹாதாக்களை ஆவணமா கப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் குறித்த மத்ரஸாக்களை அடையாளம் காண்பதற்கு அகில இலங்கை ஜம்இய் யதுல் உலமா என்ன ஆவணங்களை வேண்டியிருக்கிறது?

உலமாக்களை உருவாக்குகின்ற மத்ர ஸாக்கள் உலமா சபையில் பதிவுசெய் யப்பட்டிருக்க வேண்டுமென்ற எந்தக் கட்டாயமுமில்லை. உலமா சபையின் நெறிமுறைகளுக்கேற்ப பட்டம் வழங்கி யிருக்க வேண்டும் என்ற எந்தத் தேவைப் பாடும் இல்லை. குறித்த விடயப் பரப் பில் கற்கையைப் பூர்த்தி செய்தவர்கள் தான் உலமாக்களாக இருக்க முடியும் என்ற கொள்கை வகுப்புக்களும் கூட இல்லை. உலமாக்கள் உருவாகி வரக் கூடிய மத்ரஸாக்களை ஒருங்கிணைப்ப தற்கான எந்தப் பொறிமுறையும் 90 வரு டங்களாக உலமா சபையிடம் இல்லை என்பதோடு, மத்ரஸாக்களுக்கான பொது வான பாடத்திட்டம் ஒன்றையாவது இது வரை காலத்துக்கும் ஜம்இய்யதுல் உலமா உருவாக்கவும் இல்லை.

இலங்கையில் மத்ரஸாக்களை பதிவு செய்யும் வேலையை அரசாங்கமே செய் கிறது. முஸ்லிம் சமய கலாச்சார திணை க்களத்திலேயே மத்ரஸாக்கள் பதிவு செய்யப்படுகின்றன. இவர்களாவது ஒரு பொதுவான பாடத் திட்டத்தை உருவாக் கினார்களா என்று கேட்டால், பொது வான பாடத்திட்டம் ஒன்றின் கீழ் மத்ர ஸாக்களை ஒருங்கிணைப்பதற்கான முயற்சி நடந்திருக்கிறது. ஆனால் இறு தித் தறுவாயில் ஜம்இய்யதுல் உலமா வின் தலையீட்டால் அந்த முயற்சி கை விடப்பட்டிருக்கிறது என்றுதான் தெரிய வருகிறது.

இந்த வகையில் தமது சபையில் அங் கத்தவர்களாக இருக்க வேண்டிய உல மாக்களை உருவாக்குகின்ற மத்ரஸாக் கள் விடயத்திலேயே ஜம்இய்யதுல் உலமா தோல்வியடைந்திருக்கிறது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உல மாவின் உத்தரவுகளை செயற்படுத்து கின்ற மையங்களாகவும் உலமாக்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் நிலையங் களாகவும் பள்ளிவாசல்கள் தொழிற் படுகின்றன. இலங்கையில் இருக்கும் 2500 க்கு மேற்பட்ட பள்ளிவாசல்களில் பெரும்பாலானவை எந்த ஒருங்கிணை ப்புகளுக்கும் கீழ் வராமல் தன்னிச்சை யாகவே செயற்படுகின்றன.

இந்தப் பள்ளிவாசல்கள் எப்படி இயங்க வேண்டும், என்னென்ன பணி களைச் செய்ய வேண்டும் என்றெல்லாம் வகுத்துக் கொடுக்கின்ற பொறுப்பு ஜம் இய்யதுல் உலமாவைத் தவிர வேறு யாருக்கும் இல்லை. ஆனால் இந்தத் 90 வருட கால ஜம்இய்யதுல் உலமாவின் வரலாற்றில் இன்றுவரை இது நடை பெறவில்லை. அனைத்துப் பள்ளிவாசல் களையும் ஒரு வலையமைப்பின் கீழ் தொழிற்படச் செய்கின்ற பணியிலும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தோல்வியடைந்திருக்கிறது.

1924 இல் அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா தோற்றம் பெறும் போது காதியானிகளை எதிர்கொள்வதே அவர்களின் பிரதான சவாலாக இருந்தது. இந்தச் சவால்களை வெற்றிகரமாக எதிர் கொண்டமை அப்போதைய ஜம்இய்ய துல் உலமாவின் சாதனையாகவே கருதப் பட வேண்டும். அதற்குப் பின்னரான 90 வருட காலப் பிரிவில் இலங்கை முஸ் லிம் சமூகத்துக்குள்ளாலும் வெளியா லும் பல்வேறு பிரிவுகளும் தோற்றம் பெற்றிருக்கின்றன. சமூகத்துக்குள்ளால் தோற்றம் பெற்றவற்றில் பல்வேறு சிந்த னைப் பிரிவுகளுக்கும் உரிய அமைப்புக் களும் ஜமாஅத்துக்களும் உருவாகி யுள்ளன.

ஜம்இய்யதுல் உலமா இஸ்லாம் பற்றி வைத்துள்ள கொள்கைகளுக்கு மாற்ற மான பல சிந்தனைகள் சமூகத்துக்குள் ளால் இந்த அமைப்புக்களாலும் ஜமா அத்களாலும் இற்றை வரை பரவியிருக் கின்றன. இவற்றில் சில நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய நவீன சிந்தனை களாகவும் இன்னும் சில சமூகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய சிந்தனை களாகவும் இன்னும் சில வழிபிறழ்ந்த கொள்கைகளாகவும் உள்ளன.

இவற்றுக்குச் சமூகத்தின் அங்கீகாரத் தைப் பெற்றுக் கொடுப்பதோ, அல்லது நிராகரிப்பதோ, அல்லது இந்தச் சிந்த னைப் பிரிவுகள் முன்வைக்கின்ற விட யங்கள் தொடர்பில் சரியான தீர்வை முன்வைப்பதோ உலமாக்களின் சபை யாகிய ஜம்இய்யதுல் உலமாவின் பொறுப்பின் கீழேயே வருகிறது. ஆனால் இன்று வரை இந்த விடயங்க ளில் சமூகம் குழம்பிப் போய் அது சமூகத்தின் இருப்பையே நாட்டில் கேள்விக்குறியாக்கும் அளவுக்கு வந்த பின்னரும் இவை தொடர்பில் தெளி வான நிலைப்பாட்டை எடுத்து சமூகத் துக்கு வழிகாட்டுவதில் உலமாக்களின் தலைமைத்துவ சபை என்ற வகையில் ஜம்இய்யதுல் உலமா தோற்றுப் போயி ருக்கிறது.

மத்ரஸாக்கள், பள்ளிவாசல்கள், ஜமா அத்துக்கள் அனைத்துமே உலமாக்களின் சபையான அகில இலங்கை ஜம்இய்ய துல் உலமாவின் நேரடி வழிகாட்டலில் இயங்க வேண்டிய வைகளாக இருந்தும் இந்த முக்கியமான பணியை இன்று வரை ஜம்இய்யதுல் உலமா செய்ய வில்லை.

சமூகத்தில் இன்றுவரை நிலவுகின்ற பிரச்சினைகளுக்கும் பிளவுகளுக்கும் இந்த மூன்று பகுதிகளும் தான் காரண மாக இருக்கின்றன. ஜம்இய்யதுல் உலமா இந்த விடயங்களில் தலையிட்டு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காமை தான் இன்று முஸ்லிம் சமூகத்துக்குள்ளே நடக்கும் வெட்டுக் குத்துக்களுக்கும் காட்டிக் கொடுப்புக்களுக்கும் காரண மாக அமைந்திருக்கின்றன. மொத்தமாகச் சொல்லப் போனால், சமூகத்தின் இன் றைய பின்னடைவுக்கு ஜம்இய்யதுல் உலமாவால் மட்டுமே செய்யப்பட முடி யுமான விவகாரங்களில் ஜம்மியதுல் உலமா தனது பணியை முழுமையாகச் செய்யாதமை தான் காரணமாகும்.

நகைப்புக்குரிய விடயம் என்னவென் றால், உலமா சபையால் மட்டுமே செய்ய முடியுமான பணிகளை விட்டு, அது விளம்பரம் தேடும் களச் செயற்பாடு களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட தாகும். இதனால் களத்தில் எந்த சிவில் அமைப்புக்களும் தோன்ற விடாமல் ஜம் இய்யதுல் உலமா கவனமாக காய்நகர்த் தியிருக்கிறது. இதனை ஜம்இய்யதுல் உலமா தனது வெற்றியாக நினைக்க லாம். ஆனால் இது ஒட்டுமொத்த சமூ கத்தினதும் தோல்வியாகும். முஸ்லிம் அரசியல்வாதிகள் சோரம் போயுள்ள நிலையில், காத்திரமாகச் செயற்பட வேண்டிய எந்த சிவில் (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




• ஏ.கே. பிஷ்ருல் றிபாத் (நளீமி) B.A

ஈமானின் தூண்களில் ஒன்றான நோன்பு பல்வேறு மகத்தான குறிக்கோள்களை தன்னகத்தே கொண்டுள்ளன. ஒவ்வொரு வருடமும் எம்மைத் தரிசித்து விடைபெற்றுச் செல்லும் இவ்வுன்னத வணக்கம் எம்மில் விடடுச் செல்லும் மாற்றங்கள் என்ன என்பதனை நாம் சற்றேனும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அந்த வகையில் இஸ்லாத்தின் அடிப்படை வணக்க வழிபாடுகளான தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்றவை பல்வேறு மகத்தான குறிக்கோள்களையும், இலக்குகளையும் தன்னகத்தே பொதிந்துள்ளது. அவற்றில் பிரதானமான இலக்காக மனிதனை ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாற்றுவது அமைந்திருப்பதை அல்குர்ஆனை ஆழமாக படிக்கும் எவரும் இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

தொழுகையின் பிரதான இலக்கை அல்குர்ஆன் வரையறுக்கும் போது "நிச்சயமாக தொழுகையானது மானக்கேடான மற்றும் வெறுக்கத்தக்க விடயங்களை விட்டும் தடுக்கின்றது." (அல் அன்கபூத்: 45)

தொழுகையை நல்ல முறையில் நிறைவேற்றுகின்ற மனிதனை அந்த தொழுகை மானக்கேடான மற்றும் வெறுக்கத்தக்க விடயங்களை விட்டும் பாதுகாத்து நல்ல நிலைக்கு மாற்றுகின்றது.

ஸகாத் எனும் கடமையின் பிரதான குறிக்கோளை அல்குர்ஆன் அடையாளப்படுத்தும் போது "நபியே! அவர்களுடைய செல்வங்களிலிருந்து ஸகாத்தை நீர் எடுத்து, அதன் மூலம் நீர் அவர்களை தூய்மைப்படுத்தி பரிசுத்தப்படுத்துவீராக."(அத் தௌபா: 103)

ஸகாத்தை நல்ல முறையில் நிறைவேற்றுவதன் மூலம் குறித்த மனிதனின் உள்ளம் மற்றும் செல்வம் அதனால் தூய்மைபெறுகின்றது. உலோபித்தனத்திலிருந்து மனிதனை விடுவிக்கின்றது.

ஹஜ் கடமையானது "மோசமான பேச்சு, பிழையான நடத்தை, பாவங்கள், பெரும் தவறுகளை விட்டும் மனிதனைத் தடுக்கின்றது."(அல் பகரா: 197) எனவே ஹஜ்ஜும் ஓர் நல்ல மனிதனை, முன்மாதிரி முஸ்லிமை உருவாக்கின்றது.

நோன்பை கடமையாக்கியதன் குறிக்கோளை அல் குர்ஆன் விளக்கும் போது "விசுவாசம் கொண்டோர்களே! நீங்கள் இறையச்சம் கொண்டவர்களாக மாறுவதற்காக உங்கள் முன்பிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்ததைப் போன்று உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது" (அல் பகரா: 283)

நோன்பு அனைத்து சமூகங்களுக்கும் பொதுவாக விதிக்கப்பட்ட ஒரு கடமை, இறைவன் பற்றிய அச்ச உணர்வை மனித உள்ளத்தில் தோற்றுவிப்பதே அதன் இலக்காகும். அந்த வகையில் ஒரு மாத கால ஆன்மீகப் பயிற்சி நெறியொன்று முஸ்லிம் சமூகத்தின் மீது விதியாக்கப்பட்டுள்ளது என்று நோன்பின் நோக்கத்தை இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட வசனம் விளக்குகின்றது.

இவ்வாறு இஸ்லாத்தின் கடமைகளை நோக்குகின்ற போது தொழுகை, தொழுகைக்காக மாத்திரம் இல்லை. மாறாக அதன் மூலம் மானக்கேடான மற்றும் வெறுக்கத்தக்க விடயங்களை விட்டும் தூரமான தனி மனிதனை இலக்காகக் கொண்டுள்ளது. ஸகாத் வெறும் ஒரு கடமையாக மாத்திரமின்றி ஆன்மீகத்தில் பலமான தூய்மையான உள்ளத்தையுடைய தனிமனிதனை உருவாக்கும் குறிக்கோள் உடையது. ஹஜ் வெறும் ஒரு கிரியை மாத்திரமின்றி பாவச் சுமைகளற்ற, பிழையான நடத்தைகளை விட்டும் தூரமான ஒரு தனிமனிதனை உருவாக்கும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

அதே போல் நோன்பும் வெறும் நோன்பிற்காக மாத்திரம் கிடையாது. பல்வேறு இலக்குகளையும் குறிக்கோள்களையும் கொண்டுள்ள நோன்பின் பிரதான இலக்குகளில் ஒன்றாக இஸ்லாம் எதிர்பார்க்கின்ற, ஆன்மீகத்திலே மிகவும் பலம்மிக்க ஒரு தனிமனிதனை உருவாக்கும் மிகப் பெரும் நோக்கம் அதன் பின்னால் பொதிந்துள்ளது.

## ரமழான் மாற்றங்களை நிகழ்த்தும் பாசறை

ரமழான் மாதத்தில் நோன்புடன் இணைந்ததாக ஐவேளை பர்ளான மற்றும் தராவீஹ், கியாமுல்லைல் போன்ற சுன்னத்தான தொழுகைகள் உள்ளடங்கியிருக்கின்றன. ஸதகா, தானதர்மங்கள் அதிகமாக வழங்கப்படும் மாதமாக காணப்படுகின்றது. இத்தகைய வணக்கங்கள் அனைத்தும் ஒன்று சேரப் பெற்றிருப்பதனால் ஒரு பாரிய மாற்றத்தை அவை ஒரு தனிமனிதனில் ஏற்படுத்துகின்றன.

மனிதன் பழகிய பழக்கங்களை மாற்ற முடியாது என்பது உலகின் ஒரு பொது விதி. ஆனால் நோன்பு அந்த மனிதனையும், அவனால் விடமுடியாது என்று காணப்படும் பழக்க வழக்கங்களையும் கூட முழுமையாக மாற்றிவிடுகின்றது. நோன்பு மனிதன் தூக்கத்தில் இருந்து எழும்பும் நேரத்தை மாற்றுகின்றது. உணவு உட்கொள்ளும் நேரசூசியை முழுமையாக மாற்றிவிடுகின்றது. இவ்வாறு மனிதனது அன்றாட வாழ்வொழுங்கில் பாரியதொரு மாற்றத்தை இந்த நோன்பு ஏற்படுத்தி விடுகின்றது.

எனவே மனிதனுக்கு தீய பண்புகளையும், துர்ப் பழக்கங்களையும் மாற்ற முடியாது என்ற நம்பிக்கை போலியானது. புகைத்தல், மது அருந்துதல், பிழையான நடத்தைகள் போன்ற தீய பழக்கங்களுக்கு அடிமைப்பட்ட மனிதன் தன்னால் இவற்றை மாற்றிக் கொள்ள முடியாது என்பது மிகப்பெரும் பொய்யாகும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்ற விதி இஸ்லாத்தில் கிடையாது. மாறத் தயாராக உள்ளவன் ஐம்பதில் அல்ல எண்பதில் இருப்பினும் மாற முடியும் என்பதுதான் இஸ்லாத்தின் நியதி.

"ஒரு சமூகம் தன்னை மாற்றிக் கொள்ளாதவரை அல்லாஹ் அவர்களை மாற்ற மாட்டான்" என்பதுதான் இறை நியதி.

எனவே ஹராத்தில் மூழ்கி வாழும் மனிதனுக்கு பாவங்கள், தவறுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியாது என்ற மனோ நிலையில் வாழும் மனிதனுக்கு தன்னை நல்ல நிலைக்கு மாற்றிக் கொள்ள சிறந்த வாய்ப்பாக ரமழான் அமைகின்றது.

## கஷ்டங்களை உணர்த்தும் மாதம்

ரமழான் ஒரு தனிமனிதனின் வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்களில் உதவும் மனப்பாங்கு, தாராளத் தன்மை, சகோதரத்துவ வாஞ்சை முக்கியமானவை. நோன்பு நோற்பதன் மூலம் ஓர் அடியான் பசி, தாகம், வறுமை என்பவற்றின் கஷ்டங்களையும் வேதனைகளையும் அனுபவத்தின் வாயிலாக உணர்ந்து கொள்கின்றான். அதனால் அவனில் பிறருக்கு உதவும் மனப்பாங்கு இயல்பாகவே தோற்றம் பெறுகின்றது. றஸூல் (ஸல்) அவர்கள் ரமழானில் தான தர்மங்கள் செய்யும் வேகம் ஏனைய நாட்களை விட பன்மடங்கு அதிகரித்திருந்தது.

இமாம் இப்னு அப் பாஸ் (ரழி) அவர்கள் அதனை அறிவிக்கின்ற போது "றஸூல் (ஸல்) அவர்கள் ரமழானில் வீசும் காற்றை விட வேகமாக கொடை கொடுக்கக் கூடிய வராக இருந்தார்கள்" என வர்ணிக்கின்றார்கள்.

எனவே இந்த ரமழான் மற்ற மனிதர்களின் கஷ் டங்களைப் புரிந்த, இறை பாதையில் செலவழிக்கக் கூடிய ஒரு நல்ல மனித னை உருவாக்கின்றது. கஞ் சத்தனம் கொண்டவர்க ளும் தங்களை மாற்றிக் கொள்வதற்கான ஒரு வருடாந்த பயிற்சி நெறியாக இது அமைந்துள்ளது.

## இறை நெருக்கம் மிக்க மனிதனாக

மறுமை என்ற தொலை தூர இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் எமது வாழ்க்கைப் பயணம் வெற்றிகரமாக நிறைவு பெற தேவையான கட்டுச் சாதங்களுள் நோன்பு மிக முக்கியமானது. அந்த வகையில் ரமழான் மனிதனில் ஏற்படுத்தும் மாற்றங்களில் ஒன்று தான் ஆன்மீகப் பலம் மிக்க, இறை நெருக்கத்தையுடைய தனி மனிதர்களை உருவாக்குவது.

இன்றைய நவீன உலகின் இயந்திர வாழ்வொழுங்கில் சிக்கித் தவிக்கும் மனிதர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முதன்மையானது ஆன்மீக வறுமை (Spritual poverty) ஆகும். தொழில்நுட்ப வ்ளர்ச்சியில் உச்சத்தை தொட்டிருக்கும் அறிவியல் உலகம் இந்த ஆன்மீக வறு மைக்கான சரியான தீர்வை முன்வைக்க முடியாது திணறிப்போயுள்ளது.

ஆனால் இப்பிரச்சினைக்கான சிறந்த தீர்வை அன்றும் இன்றும் இஸ்லாம் முன்வைக்கத் தவறவில்லை. அந்த வகையில் இந்த ரமழானில் நோன்பினூடாக, பர்ளான மற்றும் நபிலான தொழுகைகளின் ஊடாக,ஈமானிய அமர்வுகளின் ஊடாக, இறை ஞாபகத்தின் மூலமாக, இன்னும் பல்வேறுபட்ட வணக்கங்களினூடாக ஒரு சிறந்த ஆன்மீகப் பயிற்சியை வழங்குகின்றது. எனவே ஒரு முஸ்லிமைப் பொருத்தவரை நோன்பு அவனது பாவக்கரைகளை பரிசுத்தப்படுத்தும் ஆன்மீகக் குழியலறையாகவும் தனது இரட்சகனை அடிக்கடி நினைத்துப் பார்க்கும் திக்ரின் மேய்ச்சல் நிலமாகவும் விளங்குகின்றது.

ரமழானின் இறுதிப் பத்தை அடைகின்ற போது இறை நெருக்கத்தை இன்னும் பலப்படுத்துவதற்தான சந்தர்ப்பமாக 'இஃதிகாப்' அமைந்திருப்பதைப் பார்க்க முடியும்.

## குர்ஆனிய மனிதனை உருவாக்குகின்றது

ரமழான் மாதத்தை அல்குர்ஆன் இறங்கிய மாதமாக அல்லாஹ் அடையாளப்படுத்துகின்றான். 'இப்புனித மாத்திலே அல்லாஹ் குர்ஆனை இறக்கி வைத்தான். அது மக்களுக்கு வழிகாட்டியாகவும் நேர்வழியின் தெளிவுறையாகவும் சத்தியத்தையும் அசத்தியத்தியத்தையும் பிரித்துக் காட்டுவதாகவும் விளங்குகின்றது." (அல்பகறா: 185)

உலக வரலாற்றையே மாற்றியமைத்த அல்குர்ஆனுடனான உறவை மிகவும் வலுப்படுத்திக் கொள்வதற்கான மிகச்சிறந்த சந்தர்ப்பமாக இந்த ஷஹ்றுல் குர்ஆன் என்று அழைக்கப்படுகின்ற ரமழான் மாதம் அமைந்துள்ளது. எனவே ஏனைய மாதங்களை விட அதிகம் அல்குர்ஆனை நீண்ட நேரம் ஓத வேண்டிய செவிமடுக்க வேண்டிய, மனனமிட வேண்டிய, விளங்க வேண்டிய, நடைமுறைப்படுத்த வேண்டிய ஒரு மாதமாக இது விளங்குகின்றது.

எனவே ஒரு முஸ்லிம் தனது ஏனைய மாதங்களில் குர்ஆனுடன் கொண்டுள்ள தொடர்பை ரமழானில் பன்மடங்காக அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

அல் குர்ஆனை விளங்க முயற்சிக்காத சமூகத்தை நோக்கி அல்குர்ஆன் கேள்வி எழுப்புகின்றது. "அவர்கள் இந்த குர்ஆனை ஆழமாக விளங்கி நல்லுணர்ச்சி பெற மாட்டார்களா? அல்லது அவர்களது உள்ளங்களுக்கு பூட்டிடப்பட்டுள்ளதா?"

## ஸகாதுல் பித்ர் ஏற்படுத்தும் மாற்றம்

ரமழான் ஒரு தனிமனிதனின் வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்களுக்கான இறுதியான பயிற்சிகளில் ஒன்றாக ஸகாதுல் பித்ர் அமைந்துள்ளது. மனிதன் என்ற ரீதியில் நோன்பில் விடும் தவறுகளை, பிழைகளை முழுமையாக கரைத்து விடக்கூடியதாக இந்த வணக்கம் காணப்படுகின்றது.

எனவே நோன்பைப் பொறுத்தமட்டில் இரு கோணங்களில் அருளாகக் காணப்படுகின்றது. ஒன்று நோன்பு அதிக நன்மைகளைப் பெற்றுத் தரும் என்ற வகையில் அது அருளாகும். மறு கோணத்தில் தனிமனிதனுக்கு தன்னை மாற்றிக் கொள்வதற்கான நல்ல சந்தர்ப்பம் என்ற வகையிலும் அருளாகும்.

ஆக நோன்பு ஒரு உயர்ந்த பயிற்சியின் மாதம். மாற்றத்தின் மாதம். அதனை நன்கு பயன்படுத்திக் கொள்ள தனி மனிதர்களும் சமூகமும் தம்மை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். நிகழ்ச்சி ஒழுங்கை தயாரித்துக் கொள்ள வேண்டும். அடுத்த ரமழான் வரை நாம் உயிர் வாழ்வோமா என்பதும் நிச்சியமில்லை. "மரணம் வருவதற்கு முன்னர் உனது வாழ்வைப் பயன்படுத்திக் கொள்" என்ற நபி மொழிக்கேற்ப இம்முறை எம்மால் முடியுமான அளவு அருள் மிகு ரமழானைப் பயன்படுத்தி ரப்பானிய மனிதனாக மாறி இறுதியில் றய்யானினூடாக சுவனத்தை அடைய முயற்சிப் போம்.!

---

## சிலாவத்துறை... (01 ஆம் பக்கத் தொடர்)

களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வேண்டுகோளின் பேரில் ஐக்கிய அரபு ராஜ்ஜியம் முன்வந்திருந்தது. தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள் மீள்குடியேற்றத்துக்காக தமது நிலங்களுக்குத் திரும்பி வரும் பொழுது 60 ஏக்கருக்கு மேற்பட்ட அவர்களது காணிகள் அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டிருந்தன. இந்த வேளையில் ஏற்கனவே குடியமர்ந்துள்ள தமிழர்களின் குடியிருப்புக்களுக்குப் பக்கத்தில் உள்ள அரச காணிகளில் இருந்து இவர்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு, வீடமைப்புத் திட்டமொன்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்படவிருந்த வேளையிலேயே, அங்கிருந்த தமிழர்கள் இந்த 70 வீடுகளில் தமக்கும் பங்கு கோரியிருக்கின்றனர். இதனைத் தொடர்ந்து குறித்த 70 குடும்பங்களுக்குமான வீட்டுத் திட்ட வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டு சுனாமிப் பேரழிவில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கென சவூதி அரசாங்கத்தினால் நுரைச்சோலையில் கட்டி முடிக்கப்பட்ட 500 வீடுகளும் கூட இனரீதியாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையினால் இன்று வரை அவை கையளிக்கப்படாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாதத்திற்கு... (01 ஆம் பக்கத் தொடர்)

பாடசாலைக் கட்டடமொன்றை இவர்கள் அரசாங்கத்தின் சார்பில் இந்தக் கல்லூரிக்கு நிர்மாணித்துக் கொடுத்துள்ளனர். முஸ்லிம் கல்விக்கென நிதியுதவி அளித்து உதவ வேண்டிய பிரதமர் இதனுடைய திறப்பு விழாவுக்கு அழைக்கப்பட்டு, விழா விமரிசையாக நடத்தப்பட்டுள்ளது. இதேபோல கொழும்பு பாத்திமா மகளிர் கல்லூரிக்கும் 04 மாடிக் கட்டடமொன்றை 7 கோடி ரூபா செலவில் முஸ்லிம் செல்வந்தர் ஒருவர் நிர்மாணித்துக் கொடுத்திருந்தார்.

## முஸ்லிம் சமூகத்தி... (01 ஆம் பக்கத் தொடர்)

முஸ்லிம் சமூகம் அதன் உள்ளக தலைமைத்துவப் பொறிமுறைகளில் நம்பிக்கை இழந்திருக்கிறது. அந்த இடத்தை நிரப்புவதற்கே இந்தத் தலைமைத்துவச் சபை உருவாக்கப்படுகிறது. ஏற்கனவே அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, தேசிய சூறா கவுன்சில், ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில்கள் இருந்தாலும், இந்தச் சபை அவற்றுடன் இணையாது தனியாகச் செயற்படும் என சித்தி லெப்பை ஆய்வுப் பேரவையின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

முஸ்லிம் தேசியமும் சகவாழ்வும் என்ற தொனிப்பொருளில் சித்தி லெப்பை ஆய்வு மன்றம் தனது முதலாவது தேசிய ஆய்வு மாநாட்டை நடத்தவிருக்கிறது. எதிர்வரும் ஜூலை மாதம் 22 ஆம் திகதி இந்த ஆய்வு மன்றம் கொழும்பில் நடைபெறும். இந்த ஆய்வு மாநாட்டின் போதே தேசிய முஸ்லிம் தலைமைத்துவ சபை பிரகடனம் செய்யப்படவுள்ளது.

தேசிய முஸ்லிம் தலைமைத்துவப் பேரவை நாடு முழுவதுமுள்ள 25 மாவட்டங்களிலும் இருந்து பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும். 09 மாகாணங்களிலும் இருந்து தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளை வைத்து சுப்ரீம் கவுன்சில் உருவாக்கப்படும். இது இயக்கங்களையோ கட்சிகளையோ சாராது செயற்படும். சித்தி லெப்பை ஆய்வு மன்றம் இந்தத் தலைமைத்துவ சபை உருவாக்கத்துக்கான ஒருங்கிணைப்பாளராகச் செயற்படும் எனவும் இந்த ஊடகவியலாளர் மாநாட்டின் போது தெரிவிக்கப்பட்டது.

## முஸ்லிம்கள் பணக்கார... (01 ஆம் பக்கத் தொடர்)

தொழில்நுட்ப வளர்ச்சியுடன் நிதி மோசடி நாளாந்தம் அதிகரித்துள்ளதனால் இதனை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்காக பல்வேறு அரச நிறுவனங்களுடனான தொடர்புகள் அத்தியாவசியமாகின்றன.

இதற்கமைவாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம், மதுவரித்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் பணிப்பாளர் நாயகம் மற்றும் பொதுக்காப்பு அமைச்சினதும் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அமைச்சின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய வகையில் சட்டவிரோத பணப்பரிமாற்றலையும் பயங்கரவாதத்திற்கு நிதி வழங்கப்படுவதையும் தடுப்பது தொடர்பான தேசிய ஒருங்கிணைப்புக்குழுவின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக பதிய அங்கத்தவர்களை இணைப்பது தொடர்பில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பித்த பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## அமைச்சர்களின்... (01 ஆம் பக்கத் தொடர்)

ஈத்தம்பழத்துக்கு கடந்த காலங்களில் அரசாங்கம் வரிவிதித்து வந்தது. இந்த வரியையும் முஸ்லிம் சமய கலாச்சாரத்துக்கென ஒதுக்கிய நிதியிலிருந்தே அரசாங்கம் அறவிட்டும் வந்தது. 2016 ஆம் ஆண்டில் இலவச ஈத்தம் பழத்துக்கென அரசாங்கம் 02 கோடி ரூபாவை முஸ்லிம் சமய கலாசார நிதியிலிருந்து வரியாக அறவிட்டிருந்தது.

கடந்த வருடம் இந்த வரியை சவூதி அரசாங்கம் பொறுப்பேற்பதாக அறிவித்திருந்தது. இந்த நிலையில் சவூதி அரசாங்கம் போதுமான பேரீத்தம் பழங்களை வழங்கவில்லை என அமைச்சர் ரிஷாத் பதியுதீனுடைய அமைச்சின் கீழாலுள்ள சதொசவினூடாக 150 மெட்ரிக் டொன் பேரீச்சம்பழம் இறக்குமதி செய்யப்பட்டன. இம்முறை மொத்தமான 250 மெட்ரிக் டொன் பேரீச்சம்பழம் சதொசவினூடாக இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படவிருக்கின்றன.

முஸ்லிம்கள் நோன்பு துறப்பதற்கு ஈத்தம்பழத்தின் முக்கியத்துவத்தை முஸ்லிம் சமய கலாச்சார அமைச்சர் ஹலீமும், நல்லிணக்க இராஜாங்க அமைச்சர் பௌஸியும் எடுத்துரைத்ததன் பின்னர், பிரதமர் உடனடியாக இதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை வழங்கியுள்ளார்.

பேரீத்தம்பழம் இன்னும் ஒருவாரத்தில் பள்ளிவாசல்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைவிலகலில் மாணவர் தொடர்பான காரணிகள்

சிறார்களின் ஆரம்பக் கல்வி விருத்தி அவர்களின் எதிர்காலக் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்கினை ஆற்றுகின்றது. ஆரம்பக் கல்வியின் அடித்தளம் உறுதியாக இருக்கும் போது இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்விக்கான சிறந்த முதலீடாக அதுவே கொள்ளப்படுகின்றது. அந்த வகையில் தரம் 01 முதல் 03 வரையான மாணவர்களின் கிரமமான பாடசாலை வருகையும் கற்றல் ஈடுபாடும் அவர்களின் அடுத்த கட்ட கல்வி நடவடிக்கைகளில் செறிந்த செல்வாக்கினைக் கொண்டுள்ளதாக கல்வியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். தரம் 03 வரை ஒரு பிள்ளையின் பாட சாலை வருகையும் பிள்ளை பெறும் எண்ணறிவு மற்றும் மொழியறிவு என்ப னவும் அதன் எதிர்கால தொடர்ச்சியான வருகையையும் கல்வி ஈடுபாட்டையும் எதிர்வுகூறும் குறிகாட்டிகளாக உள்ளன என கல்வியியலாளர்கள் கூறுகின்றனர். (Freelan & Joseph 2003)

தரம் 03 இல் சிறப்பாக வாசிக்கத் தெரியாத பிள்ளைகளின் அடைவு மட்டம் குறைகின்றது. அதன் விளைவாக பிள்ளையின் கற்றல் ஆர்வமும் குறைகின்றது. தாய்மொழி ஆற்றல் இல்லாத பிள்ளைகளின் கற்றல் ஈடுபாடு குறைந்து அடுத்தடுத்த தரங்களில் அவர்கள் இடைவிலகத் தூண்டப்படுகின்றனர். சிறப்பான கற்றல் நடவடிக்கைகளில் அவர்களால் ஈடுபட முடியாமையே இதற்குரிய காரணமாகும். எனவே, ஆரம்ப நிலை மாணவர்களது மொழியறிவு குறிப்பாக எழுத்தறிவு, அடிப்படை இலக்கணம் குறித்த அறிவு அவர்களது தொடர்ச்சியான கற்றலுக்கு இன்றியமையாதது.

ஆசிரியர்களும் பெற்றோர்களும் இதனை உறுதிசெய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். ஆரம்பக் கல்வியின் அடிப்படைகள் உறுதியாக இடப்படாத பிள்ளைகள் இடைநிலைக் கல்வியிலிருந்து பின்வாங்குவதற்கான வாய்ப்பு உள்ளதை Freelan என்பவரது ஆய்வு நிறுவியுள்ளது. ஜோசப் மற்றும் பிரிலென்



ஆகியோர் இணைந்து மேற்கொண்ட ஓர் ஆய்வு, ஆரம்ப வகுப்பறைகளில் உள்ள மொழித்திறன் அற்ற மாணவர்களின் இடைவிலகலுக்கான சாத்தியக் கூறு அதிகம் என்பதை நிறுவியுள்ளது.

தரம் 03 இல் வாசிப்பு மற்றும் எழுதுவதில் ஒரு பிள்ளை எதிர்நோக்கும் இடர்பாடுகளைக் களைய பெற்றோர் போதியளவு முயற்சிகளை மேற்கொள்ளவில்லையெனில் பிள்ளையின் அப்பிரச்சினை மென்மேலும் சிக்கலாகி இறுதியில் வகுப்பறைக் கற்றலை முன்கொண்டு செல்ல முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றது. இது இடைவிலகலைத் துரிதமாக்குகின்றது என Freelan கூறுகின்றார். அடிப்படையான வாசிப்புத் திறன், எழுத்துத்திறன் இல்லாத, வறுமைப்பட்ட பிள்ளைகள் கல்வி மீது வெறுப்புக் கொள்கின்றனர். பின்னர் அதுவே அவர்களைக் கல்வியிலிருந்து முற்றாகத் தூரமாக்குகின்றது. (யுனெஸ்கோ 2005)

பெரும்பாலும் மாணவிகளைவிட மாணவர்களே பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்ய முன்னர் இடைவிலகுகின்றனர். (குணவர்தன 2012). அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இப்போக்கு பொதுவானதாகும். குறிப்பாக ஆசிய நாடுகளில் பெண்களைவிட ஆண்களே ஒப்பீட்டு ரீதியில் பாடசாலைக் கல்வியிலிருந்து அதிகம் இடைவிலகுகின்றனர். (Hale 1998). மாணவர்கள் தொழில்வாய்ப்புக்களைத் தேடிச் செல்வதே இவ்வாறு பாடசாலைக் கல்வியை இடையில் விட்டுவிடுவதற்கான மூலகாரணமாகும். இந்த வகையில் பெண்களின் எண்ணிக்கையை விட ஆண்களின் எண்ணிக்கை இருமடங்காக உள்ளது. (Hale 1998).

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அறிக்கைப்படி பாடசாலையிலிருந்து இடைவிலகும் மாணவிகள் தமது இளைய சகோதரிகளைக் கண்காணிப்பதற்கு வீட்டில் தங்கியிருக்குமாறும் பாடசாலை செல்வதைத் தவிர்க்குமாறும் மறைமுகமாக அழுத்தப்படுகின்றனர். திருமணம் செய்வதற்கும் குறிப்பிட்டளவு பெண்கள் இடைவிலகுகின்றனர். ஆபிரிக்கா, ஆசியா, மத்திய கிழக்கு நாடுகளில் மாணவிகள் இடைவிலகுவதற்கு கலாசார, மதம்சார் காரணிகளும் பங்களிக்கின்றன. மத்தியகிழக்கு, ஆபிரிக்க நாடுகளில் பெண் கல்விக்கு மிகக் குறைந்த முக்கியத்துவமே அளிக்கப்படுகின்றது. சிலபோது எந்தவித முக்கியத்துவமும் வழங்கப்படுவதில்லை. மதம் சார் சட்டங்களாலும் மரபுகளாலும் பெண்களின் பாடசாலைக் கல்வி கட்டுப்படுத்தப்படுகின்றது.

இடைவிலகலை ஏற்படுத்துகின்ற மாணவர் தரப்பிலுள்ள காரணிகள் பல்வேறுபட்டவை. மாணவனின் உடல் ஆரோக்கியம், உள ஆரோக்கியம், கற்றல் மீதான ஆர்வம், நுண்ணறிவு ஈவு, கல்விக்கான பெறுமானம் போன்றவற்றோடு ஒரு மாணவனில் காணப்படும் கற்றல் குறைபாடு, போதியளவு நினைவாற்றலின்மை, சிலவகை உள ரீதியான மாறுபாடுகள் என்பனவும் இடைவிலகலைத் தூண்டும் வாய்ப்புள்ளது. உடற்குறைபாடுள்ள பிள்ளைகள், உளக் குறைபாடுள்ள பிள்ளைகள், கற்றலில் பின்தங்கிய, மெல்லக் கற்கும், கற்றலில் இடர்பாடுடைய பிள்ளைகள், பொருத்தப்பாடற்ற நடத்தையுடைய பிள்ளைகள், நெறிபிறழ்ந்த இளம் குற்றவாளிகள் இடைநிலைக் கல்வியிலிருந்து இடைவிலகிச் செல்வதற்கான வாய்ப்புள்ளதையும் ஆய்வுகள் நிறுவியுள்ளன. (அருணாதிலக 2003)

படிப்பதிலும் எழுதுவதிலும் உச்சரிப்பதிலும் மற்றும் கணிதம் போன்ற பாடங்களைக் கற்பதிலும் ஏற்படும் குறைபாடே பொதுவாகக் கற்றல் குறைபாடு (Learning Disability) எனப்படுகின்றது. கல்வி உளவியலாளர்களும் உள மருத்துவர்களும் இது குறித்து பல்வேறு கோட்பாடுகளை முன்வைத்துள்ளனர். டிஸ்பிரக்ஸியா, டிஸ்கோல்குலியா, டிஸ்கிராபியா, டிஸ்லெக்ஸியா என்பவை இத்தகைய கற்றல் குறைபாடுகளின்பாற்பட்டவை. எதிர்பார்க்கப்படும் ஆகக் குறைந்தபட்ச வாசிப்பு, எழுத்து மட்டத்தைக் கூட அடையப் பெறாத நிலையே இது. ஒரு பிள்ளை இவற்றின் பாதிப்புக்கு உட்படுவது பரம்பரை ரீதியான பிரச்சினையாகும். இவர்கள் சிறப்பாக கவனிக்கப்பட வேண்டியவர்கள்.

இதே போன்று கற்றலில் பின்தங்கல், மெல்லக் கற்றல் ஆகிய இரு சொற்றொடர்களும் நெருங்கிய தொடர்புடையன. பெரும்பாலும் இவை ஒன்றையே குறிக்கின்றது. பின்தங்கிய நிலை மாணவரின் வயதுக்கேற்ற நியமத்தைக் குறிக்கின்றது. ஒரு பிள்ளை தனது வயதுக்குரிய வகுப்பு நியமத்திலும் தாழ்வான வகுப்பில் காணப்படின் அவர் கற்றலில் பின்தங்கியவர் எனப்படுவார். கற்றல் குறைபாடுடையோர் மெதுவாக அல்லது தாமதித்துக் கற்போர், மெல்லக் கற்போர் எனக் கருதப்படுவர்.

கடந்த காலங்களில் நுண்மதி ஈவின் அடிப்படையில் இவர்கள் இனங்காணப்பட்டனர். 1996 ஆம் ஆண்டின் பின்னர் கல்விசார் பின்தங்கிய நிலையை மீள் வரையறை செய்தனர். பாட அடைவுகளின் தகுதிநிலையில் ஒரு மாணவன் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்துக்குரிய மட்டத்தை அடையத் தவறுவானாயின் ஒரு வகுப்பு அல்லது பல பாடங்களில் அல்லது ஒரு பாடத்தில் குறைவாக இருந்தால் அவன் பின்தங்கியவன் எனக் கருதப்படுகின்றான். (விமலா கிருஷ்ண பிள்ளை 2001)

பின்தங்கிய நிலைக்கான காரணிகள் பல. வீட்டுச் சூழல் தொடர்பான காரணிகள், பாடசாலை தொடர்பான காரணிகள், தனியாள் தொடர்பான காரணிகள் என அவற்றை வேறுபடுத்தி நோக்கலாம். இங்கு தனியாள் தொடர்பான காரணிகளாக பின்வருவன அடையாளப்படுத்தப்படுகின்றன. நுண்மதிக் குறைவு, உடல், உளக் குறைபாடுகள், போஷாக்குக் குறைபாடு, உடல் ஆரோக்கியமின்மை, நோய், முதிர்ச்சிக்கு முன் கற்றலை ஆரம்பித்தல், மனவெழுச்சிச் சிக்கல்கள் (விமலா கிருஷ்ணபிள்ளை 2001) (தொடரும்)

---

15 மனநலம்

# மனக் கோளாறுகளை வகைப்படுத்தல்

**உலக சுகாதார அமைப்பினால் வெளியிடப்பட்ட உள மாறாட்டங்கள் பற்றிய சர்வதேச வகைப்பாட்டை கடந்த இதழில் நோக்கினோம். அதன் தொடர்ச்சியை இந்த இதழிலும் நோக்குவோம்.**



**4. F 31 - F 39 (மனோநிலைக் கோளாறு)**

மனோநிலையில் ஏற்படும் அனைத்து வகை மாறாட்டங்களும் இவ்வகையில் அடங்குகின்றது. அந்த வகையில் பின்வரும் உப வகைகள் இப்பிரதான பகுதியில் அடங்குகின்றன.

1. பயம், பீதி தொடர்பான மாறாட்டங்கள்
2. உளச் சோர்வு தொடர்பான கோளாறுகள்
3. இரு துருவ மாறாட்டங்கள்
4. மீள மீள ஏற்படும் மனச் சோர்வுக் கோளாறுகள்
5. நீடித்த மனோநிலைக் கோளாறுகள்

**5. F 40 - F 49 (நரம்பியல், மன அழுத்தம் தொடர்பானதும் உடல், உள ரீதியிலுமான மாறாட்டங்கள்**

நரம்பு பாதிப்பதனால் ஏற்படக் கூடிய உள மாறாட்டங்களும் உடல் போலித் தோற்ற மாறாட்டங்களும் இவ்வகையில் அடங்குகின்றன. இதன் உப வகைகள் பின்வருமாறு அமைகின்றன.

1. பதகளிப்புக் கோளாறு
2. அச்சம் மற்றும் பீதி தொடர்பான மாறாட்டங்கள்
3. நிர்ப்பந்த நீடிப்புக் கோளாறு
4. உளச் சிதைவு மாறாட்டங்கள்
5. போலித் தோற்றக் கோளாறுகள்
6. மனஅழுத்தத்தின் விளைவாக ஏற்படும் கோளாறுகள்

**6. F 50 - F 59 (உளவியல் இடையூறுகள் மற்றும் உடலியல் காரணிகளால் ஏற்படும் நடத்தை மாறாட்டங்கள்)**

இதில் பின்வரும் நடத்தைக் கோளாறுகள் உள்ளடங்குகின்றன.

1. உணவு தொடர்பான மாறாட்டம்
2. உடல் சாரா உறக்க மாறாட்டம்
3. பாலியல் செயலிழப்பு
4. உள மற்றும் நடத்தைக் கோளாறுகள்

**7. F 60 - F 69 (வளர்ந்தோர் ஆளுமைக் கோளாறுகள் தன்னையும் ஏனையோரையும் நிர்வகிக்க முடியாத வகையிலான சுய ஆளுமைக் கோளாறுகள் இதில் அடங்குகின்றன. இவ்வகையில் அடங்கும் உப பிரிவுகள் இவை.**

1. பாலியல் செயற்பாட்டுக் கோளாறு
2. பால்நிலை அடையாள மாறாட்டம்
3. நீடித்த ஆளுமைக் கோளாறு

**8. F 70 - F 79 (அறிகைத் திறன் போதியளவு வளர்ச்சியடையாததால் ஏற்படக் கூடிய ஒழுங்கீனங்கள், கோளாறுகள், மாறாட்டங்கள் அனைத்தும் இவ்வகையில் அடங்கும்.**

இதில் தீவிர மனவளர்ச்சிக் குறைபாடுகள், நடுத்தரமான மனவளர்ச்சிக் குறைபாடுகள், கீழ்நிலை மனவளர்ச்சிக் குறைபாடுகள் என அறிகைத் திறன் வளர்ச்சிக்கு ஏற்ப மனவளர்ச்சிக் குறைபாடுகள் வகைப்படுத்தப்படுகின்றன.

**9. F 80 - F 89 (உளவிருத்தி தொடர்பான குறைபாடுகள்)**

குழந்தைகளில் ஏற்படும் வளர்ச்சித் தாமதம், மத்திய நரம்புத் தொகுதியில் ஏற்படும் வளர்ச்சிக் குறைபாடு, உயிரியல் முதிர்ச்சியில் ஏற்படும் தாமதம் போன்றவற்றினால் ஏற்படக் கூடிய மாறாட்டங்களையும் கோளாறுகளையும் இது குறித்து நிற்கின்றது. இதில் பின்வரும் வகைகள் உள்ளடங்குகின்றன.

1. மொழி, பேச்சு தொடர்பாக குழந்தைகளில் ஏற்படும் குறைபாடு
2. அறிகைத் திறன் வளர்ச்சியில் ஏற்படும் குறைபாடு
3. இயக்கத் திறனில் ஏற்படும் குறைபாடு

**10. F 90 - F 98 (நடத்தை மற்றும் உணர்ச்சி சார் கோளாறுகள்**

குழந்தைப் பருவத்திலும் கட்டிளமைப் பருவத்தின் ஆரம்பத்திலும் ஏற்படக் கூடிய நடத்தை மாறாட்டங்கள், ஒழுங்கீனங்கள் இவ்வகையில் அடங்குகின்றன. இதில் பின்வருவன முக்கியமானவை.

1. அதீத உணர்ச்சிக் கோளாறு
2. அதீத செயலார்வக் கோளாறு
3. நடத்தைக் கோளாறு

**11. F 99**

இது எந்த வகைப்பாட்டிலும் குறிப்பிடப்படாத [illegible] நடத்தை [illegible] களையும் உள்ளடக்குகின்றது.

---

# பெண்கள் நீதிபதிகளாகப் பணியாற்றுதல்

நீதிபதியைக் குறிப்பதற்கு அறபு மொழியில் காழி எனும் சொல் பயன்படுத்தப்படுகின்றது. கழா என்ற வினைச் சொல்லில் இருந்தே இச்சொல் தோன்றியுள்ளது. தீர்ப்பளித்தான் என்பது இதன் அர்த்தம். இமாம் இப்னு ஹஸ்ம் (ரஹ்) அவர்கள் மார்க்கத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி அநீதியான செயல்கள் மற்றும் அத்துமீறல்களைத் தடுக்கும் சட்டத் தீர்ப்பே கழா என்கிறரார்.

புகழ்பெற்ற சமூகவியலாளரும் வரலாற்று மேதையுமான இமாம் இப்னு கல்தூன் (ரஹ்) தனது முகத்திமாவில் முரண்பாடுகளுக்கு முடிவு கட்டுதல் என இச்சொல்லை விளக்குகிறார். ஏனெனில், கழா என்பதற்கு தீர்த்துக் கட்டுதல் எனவும் அர்த்தம் உள்ளது. பர்ஹூம் எனும் சிந்தனையாளர் ஷரீஆவின் ஏவல்களை நிறைவேற்றல் என இச்சொல்லுக்கு விளக்கமளிக்கிறார். பாகிஸ்தானிய அறிஞர் ஹபீஸ் நீதிமன்றத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் தீர்ப்பு என்கிறார்.

றஸூல் (ஸல்) அவர்களின் காலத்திலிருந்து கடந்த 1439 ஆண்டுகளாக நீதிபதியைக் குறிப்பதற்கு இச்சொல்லே இஸ்லாமிய நாடுகளில் பரிபாஷையில் உள்ளது. புகஹாக்கள் (சட்ட அறிஞர்கள்), முப்திகள் (தீர்ப்புச் சொல்பவர்கள்), முஜ்தஹித்கள் (கிளையம்சங்களில் சட்டம் வகுப்பவர்கள்) போன்றோரின் பங்களிப்பு இஸ்லாமிய சட்டத்துறையில் முதன்மையானதாய் இருக்கின்ற அதேவேளை நீதித் துறையில் காழிகளின் பங்களிப்பே முக்கியமானதாகும்.

இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்ப கால கட்டத்தில் இஸ்லாமிய சமூகத்திற்குத் தலைமை வகித்த தலைவர்களே நீதிபதியாகவும் செயற்பட்டுள்ளனர். றஸூல் (ஸல்) அவர்களின் காலத்தில் அவர்களே நீதிபதியாக இருந்தார்கள். குலபாஉர் ராஷிதூன்கள் காலத்திலும் உமைய்ய, அப்பாஸிய ஆட்சியின் போதும் பின்னர் தோன்றிய உஸ்மானியர் ஆட்சியின் போதும் இஸ்லாமிய சாம்ராஜ்யம் விரிவடைந்ததால் சமூகத் தலைமைகளிடமிருந்து காழி பதவிகள் பிரிக்கப்பட்டு பரந்துபட்ட ஆட்சிப் பிரதேசங்களின் கீழிருந்த ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் காழிகள் நியமிக்கப்பட்டனர்.

## நீதிபதிக்கான தகுதிகளும் பெண்கள் நீதிபதிகளாய் இருத்தலும்

பெண்கள் நீதிமன்றங்களில் நீதிபதிகளாய் நியமிக்கப்படுவதை ஆட்சேபிக்கும் சில இஸ்லாமிய அறிஞர்கள் உள்ளனர். அவர்கள் தமது கருத்துக்கு ஆதரவான சில சான்றுகளை வரலாற்றிலிருந்தும் மூலாதார வசனங்களுக்கு பொருள்கோடல் செய்வதிலிருந்தும் முன்வைக்கின்றனர். ஷாபிஈ மத்ஹபைச் சேர்ந்த இமாம் நவவி (ரஹ்) தனது மின்ஹாஜுத் தாலிபீன் எனும் நூலில் நீதிபதிகளின் தகுதிகளை வரையறுக்கும் போது சுதந்திரமான ஆண், முஸ்லிம், வயது வந்தவர், நற்பண்பு கொண்டவர், பார்வை, கேள்விப் புலன்கள் தெளிவாக உள்ளவர், சட்டத்தை ஆழமாக விளங்கியவர் எனக் குறிப்பிடுகின்றார். இதில் அவர் ஆணாகவும் இருக்க வேண்டுமென்று வரையறை செய்துள்ளதைக் காணலாம்.

இப்னு பர்ஹூன் எனும் மாலிக்மத்ஹபைச் சேர்ந்த அறிஞர் ஆண்கள் மாத்திரமே நீதிபதிகளாய் செயற்பட முடியும் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார். இமாம் இப்னு குதாமா (ரஹ்) தனது அல் முக்னி எனும் நூலில் பெண்களின் வகிபாகத்தை விளக்கும் போது வீட்டில் தங்கியிருந்து பிள்ளைகளைப் பராமரிப்பதோடு மார்க்கக் கடமைகளில் ஈடுபடுவதே அவளது அடிப்படைப் பொறுப்பு எனக் குறிப்பிட்டுள்ளார். பெண்களின் இயல்பு நீதிபதிப் பதவிக்கு உகந்ததல்ல என்பதே இமாம் இப்னு குதாமாவின் நிலைப்பாடாகும்.

பொதுவாகப் பெண்களின் எந்தத்; தலைமையையும் (முழுத் தலைமைத்துவம் மற்றும் பகுதித் தலைமைத்துவம்) ஏற்க முடியாதெனக் கருதுகின்றவர்களே பெண்கள் நீதிபதிகளாய் அமர்வதை ஆட்சேபிக்கின்றனர். இதற்கு அவர்கள் ஸூறதுந் நிஸாவின் 34 ஆம் வசனத்தைப் பிரதான ஆதாரமாகக் காட்டுகின்றனர். ஆயினும் இந்த வசனம் பெண்களின் நீதிபதிப் பதவியை ஆட்சேபிக்கின்ற அல்லது அதற்கு எதிரான கருத்தைத் தரவில்லை என்பதே சமகால சட்ட அறிஞர்களின் நிலைப்பாடாகும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜோர்தானுக்கான... (01 ஆம் பக்கத் தொடர்)

தற்போது இலங்கையிலிருந்து ஜோர்தானுக்கு இறக்குமதி செய்யப்படும் தேயிலை சிரியா, ஈராக், பலஸ்தீன் நாடுகளுக்கு மீள ஏற்றுமதி செய்யப்படுகின்றன .இவற்றுக்கு மேலதிகமாக இலங்கையிலிருந்து பழங்களை இறக்குமதி செய்வதற்கு ஜோர்தானில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்குவது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

ஜோர்தானிய சுற்றுலாத்துறையினருடன் மேற்கொள்ளப்பட்ட சந்திப்பின் போது, ஜோர்தானுக்கான நேரடி விமான சேவை இன்மை பற்றியும், விசா நெருக்கடிகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளன. இடைநிறுத்தப்பட்டுள்ள ரோயல் ஜோர்தான் விமான சேவையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பிலும் இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்தவர்களுக்கான சமய சுற்றுலாக்களை ஊக்குவிப்பது தொடர்பிலும் இதன்போது பேசப்பட்டுள்ளது. இதற்காக இலங்கையிலிருந்து ஜோர்தான் செல்வோரின் விசா நடைமுறைகளை இலகுபடுத்த வேண்டும் என முன்வைக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலனை செய்வதாக ஜோர்தான் சுற்றுலா சபையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## சாஜிதா... (01 ஆம் பக்கத் தொடர்)



துப்பர வாக்கல் வேலைகளின் போதே தொல் பொருட்கள் சேதமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. இருந்த போதிலும், பிரதேச செயலாளர் ஒரு முஸ்லிம் என்ற காரணத்தினால் இந்தத் தவறை சாஜிதா பானுவின் மீது திணிப்பதற்கு இனவாத பௌத்த அமைப்புக்களும், அவர்களின் ஊதுகுழல்களான ஊடகங்களும் பெரும் முயற்சி செய்து வருகின்றன.

புராதனச் சின்னங்களை சேதமாக்கிய குற்றத்துக்கு உரியவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஓமல்பே சோபித தேரர் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளருக்கு வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார். அது போல பல பௌத்த அமைப்புக்கள் இதற்கெதிராக உயர்மட்ட அழுத்தங்களையும் பிரயோகித்து வருகின்றன.

இந்நிலையில் பிரதேச செயலாளர் இபலோகம் பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து பலுகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவுக்கு இடமாற்றப்பட்டுள்ளார். பின்னர் அவர் அங்கிருந்து அனுராதபுர கச்சேரிக்கு மாற்றப்பட்டுள்ளார். தொல்பொருட்களை சேதமாக்கியதாக இவர் குற்றஞ்சாட்டப்படுவாரானால் இவருக்கு பிணை கிடைக்க முடியாத சூழல் உருவாகி வருகிறது. இதற்கெதிராக உயர் நீதிமன்றத்தில் தாம் நடவடிக்கை எடுத்து வருவதாக சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் தெரிவித்தார்.

இதற்கு முன்னரும் முஸ்லிம்களுக்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்கினார் என்று குற்றஞ்சாட்டி பொத்துவில் நீதிபதி அப்துல் வாஹிதுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. திருகோணமலை சண்முக இந்து மகளிர் கல்லூரி விவகாரத்திலும் பாதிக்கப்பட்ட முஸ்லிம் ஆசிரியர்களே இடமாற்றப்பட்டனர்.

## அனுராதபுரம்... (10 ஆம் பக்கத் தொடர்)

எவரும் வெளியிடத்திலிருந்து அழைத்து வரப்படுபவர்கள் அல்ல. இபலோகம பிரதேச செயலகத்திற்கு உட்பட்டவர்கள். வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையே நேர்முகப் பரீட்சையை நடாத்தி இவர்களை தெரிவுசெய்துள்ளது. அறிவித்தல் பலகையில் போடும் பணியை மாத்திரமே பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளது. இந்நிலையில் பிரதேச செயலாளரின் தனிப்பட்ட நோக்கங்களுக்காக வேண்டி தொல்பொருள் நிலம் அழிக்கப்பட்டிருப்பதாக கூறும் கருத்தில் எவ்வித உண்மைத் தன்மைகளும் இல்லை. இது சிறுபிள்ளைத் தனமான கருத்துக்கள்.

### சகவாழ்வுக்கான எடுத்துக் காட்டு

இபலோகம பிரதேச செயலாளர் சாஜிதா பானுவின் கணவரான எச்.என். சமீன் அளுத் கந்திரியாகம சிங்களப் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி வருகின்றார்.

கடந்த காலப் பகுதியில் மூடப்படவிருந்த கந்திரியாகம வித்தியாலயத்தை பாதுகாத்து சிறந்த முறையில் பாடசாலையை பராமரித்து வரும் அதிபராகவும் இவர் உள்ளார். 5 ஆம் வகுப்பு வரையிலுள்ள இந்தப் பாடசாலையில் தற்பொழுது 120 மாணவர்களும் 8 ஆசிரியர்களும் கடமையாற்றி வருகின்றனர். இங்கு 3 ஆசிரியர்கள் மாத்திரமே முஸ்லிம்கள். சகல மாணவர்களும் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

எனவே இங்கு 5 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றி வருகின்ற சமீன் அதிபர் அவர்களை தொடர்ந்தும் இந்தப் பாடசாலையிலேயே கடமைபுரியுமாறு பிரதேசவாசிகள் வலியுறுத்தியும் வருகின்றனர். இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை (14) மாகாணக் கல்விப் பணிப்பாளரும் தன்னை தொலைபேசியில் அழைத்து 'சமீம், முஸ்லிம் கிராமமொன்றை அமைக்கப் போகின்றீர்களா''? என தன்னிடம் வினவியதாகவும் அவர் வருத்தத்துடன் தெரிவித்திருந்தார்.

மாணவர்கள் எந்த இனத்தை சார்ந்தவர்களாக இருப்பினும் அவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதே தனது தலையாய கடமையென்னும் குறிக்கோளில் மேலதிக வகுப்புக்களையும் நடாத்தி மாணவர்களின் நலனில் அதிக கரிசனை செலுத்தி வரும் இவரது குடும்பத்தில் பிரச்சினை என்று தெரிந்ததும் மக்களும் ஆசிரியர்களும் முன்வந்து உதவியுள்ளார்கள்.

எனவே இப்படிப்பட்ட மக்கள் வாழும் பிரதேசத்தில் சில சிங்கள இனவாத ஊடகங்களும் இனவாதிகளும் அத்துமீறிப் பிரவேசித்து அந்த மக்களின் இயல்பு வாழ்க்கையை குழப்ப முனைவது சகவாழ்வுக்கு விரோதமான செயற்பாடாகும். எனவே நல்லிணக்கம், சகவாழ்வு போன்ற துறைகளுக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சர்கள் இந்த விடயத்தில் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு சிறந்த அதிகாரிகள் எந்தச் சமூகத்தவர்களாக இருப்பினும் அவர்களை பாதுகாக்கும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

## இம்இய்யதுல்... (11 ஆம் பக்கத் தொடர்)

அமைப்புக்களும் சமகாலத்தில் களத்தில் இல்லை. யாராவது சகவாழ்வு தொடர்பில் செயற்பட்டால் அதனை விழுங்கி விடுவது, யாராவது வெள்ள நிவாரணம் என்று வந்தால் அதிலும் தலையிடுவது என எல்லாவற்றையும் தலையில் போட்டுக் கொண்டதால் களத்தில் இன்று வரை பலமானதொரு சிவில் அமைப்பு உருவாக முடியவில்லை.

இன்று பலமானதொரு சிவில் நிறுவனத்தின் தேவை வெகுவாக உணரப்பட்ட போதும், அப்படியொன்றைக் காணமுடியாமல் செய்துவிட்ட தவறு ஜம்இய்யதுல் உலமாவையே சாரும். இதனுடைய பயனைத் தான் சண்முகா கல்லூரி அபாயா விவகாரத்தில் சமூகம் சந்தித்தது. முஸ்லிம்களின் உடைக் கலாச்சாரத்துக்கு எதிர்ப்பு வந்த போது இந்த விவகாரத்தில் தலையிட்டிருக்க வேண்டிய ஜம்இய்யதுல் உலமா, இது நிவாரணப் பணி அல்ல, அதனால் எங்களுக்குச் சம்பந்தமில்லை என்பது போல பேசாமல் இருந்து விட்டது.

இதுபோன்ற பல விடயங்கள் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவை தலைமைச் சபையாக ஏற்றுக் கொள்வதில் சமூகத்தின் மத்தியில் நம்பிக்கையீனங்களையும் அதிருப்தியையும் ஏற்படுத்தி இருக்கின்றன. அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா என்ற பாரிய சக்தியின் பின்னால் சமூகம் ஒன்றுதிரள்வதற்கு எப்போதும் தயாராகவே இருந்தது. ஆனாலும் தனது பணியில் அது விடுகின்ற தவறுகளாலும், தலைமைக்கு இருக்கக் கூடாத விடாப்பிடியான பிடிவாதங்களாலும் மக்கள் அந்த சபையினை விட்டுத் தூரமாகத் தொடங்கியுள்ளனர்.

இனி புதியதொரு தலைமைத்துவ சபையொன்று கதையாடல்களில் சமூகம் ஈடுபடவும் தொடங்கியிருக்கிறது. இருக்கின்ற தலைமைகளுக்கு மேலதிகமாக இன்னுமொரு சபையைக் கொண்டு வருதலில் சமூகத்தில் இணக்கப்பாடான கருத்துக்கள் இல்லாவிட்டாலும், வேறு வழியில்லை என்ற நிலைமையில் சமூகம் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவது தெரிகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தை இஸ்லாத்துக்கு விரோதமான வழிகெட்ட கொள்கைகளும் பயன்படுத்திக் கொள்ள முடியும். அப்படி நடக்குமிடத்து அந்தத் தலைமையை நோக்கி முஸ்லிம் சமூகத்தின் தலைமைகளில் அதிருப்தி கொண்டவர்கள் சாயவும் முடியும். அப்படி ஒரு அபாயம் நடக்குமானால் அதற்குரிய முழுப் பொறுப்பையும் தற்போதுள்ள ஜம்இய்யதுல் உலமாவின் தலைமையும் இதன் நிர்வாக உறுப்பினர்களுமே பொறுப்பேற்க வேண்டும்.

## அபாயாவில்... (03 ஆம் பக்கத் தொடர்)

உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் உட்பட LTTE ஆதரவு சக்திகளும் இந்த சர்ச்சையின் பின்னணியில் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார். இந்த விடயத்தை சமாதானமான முறையில் தீர்த்து வைக்கதான் பல தமிழ் அரசியல்வாதிகளோடு தொடர்புகளை ஏற்படுத்தியதாகவும் ஆனால் எந்தவொரு தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகளும் இதற்குப் பதிலளிக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சில தகவல்களின் படி ஒரு RSS முகவர் முஸ்லிம் பெண் போல் பாசாங்கு செய்து ஹபாயா அணிந்து வந்து கல்லூரிக்குள் வேண்டத்தகாத முறையில் நடந்து இந்த விடயத்துக்கு மேலும் தூபம் இட முனைந்தமை தெரிய வந்துள்ளது. இவரிடம் தமிழ் பெண்களையும் தமிழ் சலாசாரத்தையும் கேவலப்படுத்தும் வகையிலான சில படங்களும் எழுத்துக் குறிப்புக்களும் கூட இருந்துள்ளன. இவை முஸ்லிம்களின் பெயரால் தயாரிக்கப்பட்டவை போல் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது நிச்சயம் இனங்களுக்கு இடையில் முரண்பாட்டைத் தூண்டிவிடும் ஒரு சதி முயற்சியே அன்றி வேறொன்றும் இல்லை.

இவற்றைப் புரிந்து கொள்ள முடியாத இரு சமூகங்களையும் சேர்ந்த குறுகிய நோக்கம் கொண்ட சில சக்திகள் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டிய வண்ணம் உள்ளனர்.

இந்தப் பிராந்தியத்தில் உள்ள கல்வி அதிகாரிகள் உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு இந்தப் பிரச்சினைக்கு மிக விரைவில் நியாயமான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். நிலைமை கட்டுப்பாட்டை மீறிச் செல்லுமுன் சமாதானமான முறையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

இந்தச் சம்பவம் பற்றி பக்கச்சார்பற்ற விதத்தில் நியாயமான ஒரு விசாரணை நடத்தப்பட்டால், இந்தச் சம்பவத்தின் பின்னால் உள்ள உண்மையான தீய சக்திகளை அடையாளம் காண அது வழி வகுக்கும். ஆனால் நாட்டில் காணப்படும் குழப்பமான சரிவடைந்து வரும் அரசியல் சூழ்நிலை காரணமாக இவ்வாறான ஒரு விசாரணை நடத்தப்பட்டு உண்மைகள் வெளிக் கொண்டு வரப்படுவது பெரும்பாலும் சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்படுகின்றது.

மறுபுறத்தில் முஸ்லிம் நாடுகளில் யுத்தத்தை தூண்டி விடுவதிலும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற போர்வையில் அந்த நாடுகளை சின்னாபின்னப் படுத்துவதிலும் பிரதான சூத்திரதாரியாகத் திகழும் இஸ்ரேலின் பிரசன்னமும் தற்போது இந்த நாட்டில் உள்ளது. அவர்களும் முஸ்லிம்களுக்கு எதிரான தமது சொந்த வேலைத் திட்டத்தோடுதான் இங்கு வந்துள்ளனர். ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இந்த நாட்டில் இஸ்ரேலின் வருகையோடு தான் இனவாத அமைப்புக்கள் தலை தூக்கின. இன்று இந்த நாட்டில் முஸ்லிம்களால் நிம்மதியாக வாழ முடியாத சூழலை அவர்கள் முன்னின்று உருவாக்கினர்.

இஸ்ரேலிய யூத சக்திகள் முஸ்லிம்களுக்கு எதிரான சதி நடவடிக்கைகளில் RSS உடன் கூட்டுச் சேர்ந்துள்ளனர். பல்வேறு சக்திகளை முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டி விடுவதில் இந்த சக்திகள் தற்போது முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் தமிழர்களைக் கொண்ட ஒரு குழு எந்த விதமான நியாயமான் காரணமும் இன்றி இஸ்ரேலுக்கு ஆதரவாக மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது. இஸ்ரேலின் கொடியுடன் அவ்வாறான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவது முஸ்லிம்களின் ஆத்திரத்தைத் தூண்டும் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். இருந்தாலும் இவை பற்றி கவலைப்படாமல் அந்தக் கூலிப்படையினர் எதற்காக ஆர்ப்பாட்டம் நடத்துகின்றோம் என்பது தெரியாமலேயே இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதேவேளை இஸ்ரேலியர்கள் இந்த நாட்டில் அரசாங்கத்தின் ஆதரவு மற்றும் ஆசீர்வாதம் என்பனவற்றுடன்தான் தங்கியுள்ளனர். கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அவர்கள் பல்வேறு திட்டங்களோடு பல்வேறு போர்வையில் நடமாடி வருகின்றனர் என சில தகவல்கள் கிடைத்துள்ளன. இவர்களது வருகையின் பின்தான் சிங்கள மக்களின் எண்ணங்கள் முஸ்லிம்களுக்கு எதிராகத் திசை திருப்பப்பட்டு அண்மைக்கால அசம்பாவிதங்களும் இடம்பெற்றன.

இஸ்லாத்தை முன்னொருபோதும் இல்லாத வகையில் காரசாரமாக விமர்சிக்கவும், கேலி செய்யவும் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தவும் தீவிரவாத பௌத்த அமைப்புக்கள் ஈடுபடத் தொடங்கியது இவர்களின் தூண்டலில் தான் என்பது பரவலாக உள்ள சந்தேகமாகும். பொது பல சேனா அமைப்புக்கு தென் பகுதியில் ஒரு இல்லத்தை அன்பளிப்பாக வழங்கியவர் ஒரு ஜெர்மனிய யூதர் என்பதும் இங்கே நினைவூட்டத்தக்கது. இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் சீர்குலைக்க வேண்டும் என்பது தான் இவர்களின் நோக்கம் என்பது தெட்டத் தெளிவாகப் புலனாகும் ஒரு விடயமாகும்.

அழிவை ஏற்படுத்தும் நோக்கில் செயற்படும் சிங்கள இனவாத அமைப்பான பொது பல சேனாவும் ஏனைய பௌத்த அமைப்புக்களும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டு வருகின்றன. ரணில் - மைத்திரி கூட்டரசும் இந்த நாட்டு முஸ்லிம்களுக்கு பேரழிவாகவே அமைந்துள்ளது. இந்நிலையில் தற்போதைய அரசின் ஆதரவும் இந்த இனவாத சக்திகளுக்குக் கிடைத்துள்ளது. இவற்றைக் கருத்திற் கொண்டு தான் திருகோணமலையில் ஏற்படுத்தப்பட்டுள்ள அபாயா விவகாரத்துக்கு எவ்வித காலதாமதமும் இன்றி இணக்கமானதொரு தீர்வு காணப்பட வேண்டியது கட்டாயமாகும்.

பிரிவினையையும் அழிவையும் ஏற்படுத்த துடித்துக் கொண்டிருக்கும் RSS, BJP மற்றும் VHP போன்ற சக்திகளுக்கு இடமளிப்பது இந்த நாட்டில் ஒரு போதும் நன்மையை ஏற்படுத்தாது. அது தற்போது எமக்கு நன்மையளிக்கக் கூடியதும் எமக்கு மிக அத்தியாவசியமாகத் தேவைப்படுவதுமான இரு சமூகங்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்துக்கு சாவு மணி அடிப்பதாகவே அமையும். வடக்கு கிழக்கில் மட்டும் அல்ல அதற்கு வெளியிலும் இதே நிலைதான்.

## முஸ்லிம்-தமிழ்... (06 ஆம் பக்கத் தொடர்)

கருத்துகளும், குறிப்பிடத்தக்க எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் வல்லமையைக் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது.

முஸ்லிம் அரசியல் தலைவர்களும் அரசியல்வாதிகளும் இவ்விடயத்தில் 'சுரணை கெட்ட' தனமாக நடந்து கொண்டுள்ளமை, முஸ்லிம் சமூக ஆர்வலர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மத்தியில், கடுமையான ஆத்திரத்தை உண்டுபண்ணியிருக்கின்றது.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ள கருத்துகள், முஸ்லிம்களின் மனதைக் காயப்படுத்தியுள்ளன என்பதை வெளிப்படையாகவே காண முடிகின்றது. ஒரு காலத்தில், ஒருமித்துப் பயணித்த முஸ்லிம் அரசியலும் தமிழர் அரசியலும், வெவ்வேறு பாதைகளில் பயணித்துக் கொண்டிருந்தாலும், தமிழ், முஸ்லிம் உறவில் சிறியதோர் இடைவெளி ஏற்பட்டிருந்தாலும், அவற்றையெல்லாம் கடந்து, இரு இனங்களுக்கும் இடையிலான ஒரு பரஸ்பர புரிந்துணர்வு, இருந்தே வருகின்றது.

அபிலாஷைகளும் இனப்பிரச்சினைத் தீர்வில் மாறுபட்ட எதிர்பார்ப்புகளும் கொண்ட சமூகங்கள் என்றாலும், இணக்கப்பாடானதொரு சூழல் காணப்பட்டதை மறுப்பதற்கில்லை. ஆனால், அவற்றையெல்லாம் அபாயா விவகாரமும் சம்பந்தனின் அறிக்கையும் பாதிப்பை ஏற்படுத்திவிடுமோ என்று, அச்சப்பட வேண்டியுள்ளது என்றுதான் சொல்ல வேண்டும்.

சம்பந்தப்பட்ட பாடசாலையின் மரபுரிமை பற்றி, ஏற்றுக் கொள்ளத்தக்க பல விடயங்களைக் குறிப்பிட்ட சம்பந்தன், சேலை அணிந்து வருவதே பொருத்தமானது எனவும், அபாயாவுக்கு பச்சைக் கொடி காட்டாத வண்ணமும், கருத்துத் தெரிவித்திருப்பதே இதற்குக் காரணம் எனலாம். அபாயாவுக்காகச் சேலை மீது வசைபாடுவது தவறு; அது எவ்வாறு தமிழர்களின் மனதைப் புண்படுத்தி இருக்கின்றதோ அதுபோலவே, அபாயா விவகாரமும் எதிர்க்கட்சித் தலைவரின் கருத்தும் ஒன்றிரண்டு ஊடகங்கள், இதைக் கையாண்ட விதமும் முஸ்லிம்களின் உள்ளத்தைக் காயப்படுத்தி இருக்கின்றன.

எனவே, அபாயா விவகாரத்தைப் பெரிதாக்கி, யாரோ சில சக்திகள், அதில் இலாபம் உழைக்க முனைவது தெரிகின்றது.

இது, தமிழ் - முஸ்லிம் உறவின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் பெரும் பங்காற்றும். எனவே, இந்தச் சதிவலைக்குள், முஸ்லிம்களும் தமிழர்களும் மாட்டிக் கொள்ளாது, ஒவ்வோர் இனத்தின், மதத்தின் கலாசார உரிமையை உறுதிப்படுத்த, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.



மீள்பார்வை உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | 4000.00 | ஐக்கிய இராச்சியம் | 5500.00 |
| 12 இதழ்கள் | ரூபா 600.00 | தனிப் பிரதி | ரூபா 100.00 | மலேசியா | 4000.00 | அமெரிக்கா | 6500.00 |
| 24 இதழ்கள் | ரூபா 1200.00 | ஒரு வருடம் | ரூபா 3500.00 | ஐக்கிய அரபு இராச்சியம் | 4000.00 | அவுஸ்திரேலியா | 4700.00 |
| | | | | | | சீனா | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எண்ணங்களே வாழ்க்கையை அமைக்கின்றன. ஒவ்வொரு மனிதனின் எண்ணங்களே அவனது வாழ்க்கைக்குக் காரணமாய் அமைகிறது. நல்ல எண்ணங்கள், நல்ல சிந்தனைகள், நல்ல சூழ்நிலையை உருவாக்குகின்றன. தீய எண்ணங்கள், தீய சிந்தனைகள், தீய சூழ்நிலையை உருவாக்குகின்றன.

இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே எண்ண அலைகளால் சூழப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும், சுற்றுப் புறமும், செயல்பாடுகளும் இந்த எண்ண அலைகளாலேயே வழிநடத்தப்படுகிறது.

நல்ல சிந்தனையை விதைக்கும் மனிதன் நல்ல எண்ண அலைகளால் ஈர்க்கப்படுகிறான். அதே எண்ண அலைகள் கொண்ட மற்றவர்களும் அவன்பால் ஈர்க்கபடுகிறார்கள். அதேபோல் தீய சிந்தனையை விதைக்கும் மனிதன் தீய எண்ண அலைகளால் ஈர்க்கப்படுகிறான்.

நல்ல எண்ணங்களை விதைப்போம், நல்ல சமுதாயத்தை உருவாக்குவோம்.

# நிராகரிப்பாளர்களுக்கு மத்தியில் உறுதியுடன் நின்ற பெண்

ரம்லா என்ற பெண் அபூ சுப்யானின் மகள்.அபூ சுப்யான் ஆரம்பம் தொட்டு நீண்ட காலமாக இஸ்லாத்திற்கு எதிராக நின்றவர். எனினும் ரம்லா குர்ரின் வீட்டினுள்ளிலிருந்தே மிகவும் ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றார். இது அபூ ஸுப்யானுக்கும் பெரும் பிரச்சினையாகவும், இஸ்லாத்தை எதிர்க்கும் மக்காவின் தலைமைகளுக்கு முன்னால் அவமானமாகவும் போய்விட்டது.ரம்லாவை மாற்ற அபூ சுப்யான் எடுத்த முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை.

ரம்லா ஹபஷாவுக்கு ஹிஜ்ரத்தும் செய்கிறார். அங்கே அவருக்கு இன்னொரு சோதனை காத்திருந்தது. அவளது கணவன் உபைத் துல்லாஹ் இப்னு ஜஹ்ஷ் கிறித்தவ மதத்திற்கு மாறிவிடுகிறார். இப்போது ரம்லாவுக்கு கணவனோடு வாழவும் முடியவில்லை. மீண்டும் மக்காவுக்குத் திரும்பி குடும்பத்தோடு வாழவும் முடியாது. எனினும் ரம்லா உறுதியோடு இஸ்லாத்தில் நிலைக்கிறார்கள். அந்த ஜிஹ்ரத்தின் பூமியிலேயே வாழ்கிறார்கள்.

இத்தகைய சோதனைக்குட்பட்ட பெண்ணை இறைதூதர் (ஸல்) மணமுடித்துக் கொண்டார்கள். புரட்சியாளர்கள் உஸ்மான் (ரலி) வீட்டைச் சூழ்ந்து தண்ணீர் உணவு போவதையும் தடுத்துவிடுகிறார்கள். அப்போது தண்ணீரை எடுத்துக் கொண்டு புரட்சியாளர்களின் எதிர்ப்பைத் தாண்டி உஸ்மானிடம் செல்கிறார்.

# தனித்துவமும்! அடையாளமும்



அனைவரும் தம்மை அடையாளப்படுத்தி கொள் வதில்தான் ஆர்வமுள்ளவராக இருக்கிறோம். தன்னை ஒரு சிறந்த தலைவனாக, பொறுப்புள்ளவனாக, தந்தையாக, அன்னையாக, மகனாக, மொழி, தேசம் மற்றும் இனப்பற்றுள்ளவனாக, ஆற்றல், புகழ், செல்வம், கல்வி, பதவி, செல்வாக்கு முதலியவற்றில் வளம் மிக்கவனாக அடையாளப்படுத்திக் கொள்கிறோம்.

இவை அனைத்தும் அடையாளங்களே ஒழிய இவை நம்முடைய உண்மை நிலை அல்ல! இந்த அடையாளங்களில் நாம் நம்மை தொலைத்து விட்டோம் என்பதைக் கூட மறந்துவிட்டோம்!

அடையாளம் என்பது பொய்யான தோற்றம்! அது உங்களின் உண்மை நிலை அல்ல! உங்களை நீங்கள் மென்மேலும் அடையாளப்படுத்திக் கொண்டால் உண்மையை உணர வாய்ப்பில்லாமல் போய்விடும்! அடையாளங்கள் உங்களை விட்டு நீங்கும்போது உண்மையை உணராவிட்டால் நீங்கள் காணாமல் போய்விடுவீர்கள்!

அடையாளங்களை நீக்கி நமது உண்மை யதார்த்தத்தை அறிந்து கொண்டால் அதுவே எல்லா கட்டுகளிருந்தும் நம்மை விடுவிக்கும். தனித்துவமே உண்மையின் மணம். உங்களின் இருப்புநிலை! அடையாளம் ஏதுமற்ற இயல்புநிலை! அது யாராலும் உங்களுக்கு வழங்கப்பட்டதல்ல.

# ஸுஜூதின் மூலம் உனக்கு நீ உதவிக்கொள்



மீள்பார்வை

தொகுப்பு: அஸாருதீன்

ரபீஆ இப்னு கஃப் அல் அஸ்லம் இறைதூதர் (ஸல்) அவர்களுக்கு பணிவிடை செய்யப் போட்டியிட்ட இளைஞர்களில் ஒருவர். இஷாத் தொழுது எல்லோரும் வீடு சென்று விட்டாலும் ரபீஆ இறைதூதர் (ஸல்) அவர்கள் இருக்கும் அறைப் பக்கமாகப் போய் அறையின் அருகாமையில் உட்கார்ந்து கொள்வார். இறைதூதர் (ஸல்) அவர்கள் ஏதாவது வேலைக்கு அழைப்பார்கள் என்ற எதிர்பார்ப்பிலேயே இப்படி உட்கார்ந்திருப்பார். சிலபோது இறைதூதர் (ஸல்) அறையின் கதவைத் திறந்து வுழு செய்ய தண்ணீர் கொண்டுவருமாறு கேட்பார்கள். உடனே ரபீஆ தண்ணீரைக் கொண்டுவந்து கொடுப்பார். வேறு ஏதாவது வேலைகளுக்காக அனுப்பினாலும் பதிலில் போன்றே இரவிலும் அவ்வேலையைச் செய்ய உற்சாகமாகப் போவார்.

ரபீஆ தனக்குப் பணிவிடை செய்வதில் கொண்டிருக்கும் ஆர்வத்தையும், ஆசையையும் இறைதூதர் (ஸல்) அவதானித்தார்கள். இரவு, பகல் என்று பாராது அதற்கு முன்வருகின்றமையையும் கண்டார்கள். இஷாத் தொழுகையின் பின்னால் ஒருநாள் ரபீஆவோடு தனித்திருக்கும் போது: 'ரபீஆ நீ எதையாவது கேள் நான் தருகிறேன்.' என்றார்கள். ரபீஆ திகைத்துத் தடுமாறிப் போனார். தான் பணிவிடைக்கு ஏதாவது கேட்க வேண்டுமென்ற எண்ணமே அவருக்குத் தோன்றவில்லை. எனவே என்ன கேட்பதுஎன்று அவர் தடுமாறினார். உலக விடயங்கள் எதையாவது கேட்க அவருக்குத் தோன்றவில்லை. உலகப் பற்றிலிருந்து அவர் நீங்கியிருந்தார்.

இந்நிலையில் அவரதுபதில்: 'அல்லாஹ்வின் தூதரே சுவர்க்கத்தில் உங்களோடிருக்க வேண்டுமெனக் கேட்கிறேன்' என்றமைந்தது. இவ்வேண்டுதல் மிகப் பெரிய விடயம் எனக் கண்ட இறைதூதர் (ஸல்) இவ்வேண்டுதலில் அவர் பிடிவாதமாக உள்ளாரா என உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினார்கள். எனவே, "ரபீஆ! வேறெதையும் கேட்கவில்லையா?!" என வினவினார்கள்.அப்போது ரபீஆ உறுதியுடன்: 'அல்லாஹ்வின் தூதரே அதுதான் வேறெதுவுமல்ல' என்றார். அப்போது இறைதூதர் (ஸல்) அவர்கள்: 'நான் செய்து தருகிறேன். அதிகமான ஸுஜூதின் மூலம் உனக்கு நீ உதவிக்கொள்.' என்றார்கள்.

# அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி)

அல்குர்ஆனுக்கு விளக்கம்ளிப்பதில் சிறந்து விளங்கிய ஒருவர்தான் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள். நபித் தோழர்கள் அவரை அல் ஹப்ரு (அறிஞர்) என்ற பெயர் கொண்டு அழைத்தனர். அவர் நபி (ஸல்) அவர்களது ஹதீஸ்களைத் தேடிப் பிடிக்கக் கூடியவராகக் காணப்பட்டார். நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும்போது அவரது வயது பதிமூன்று, அவர் தன்னைப் பற்றி ஒருமுறை இவ்வாறு கூறியுள்ளார்.

எங்கேனும் ஒரு மனிதரிடத்தில் தூதர் (ஸல்) அவர்களது ஒரு ஹதீஸ் இருக்கும் செய்தி எனக்குக் கிடைத்து விட்டால் உடனே அவரைத் தேடி அவரது இடத்திற்குச் செல்வேன். அவர் வரும் வரைக்கும் அவரது வீட்டு வாசலில் எனது போர்வையைத் தலையணையாக வைத்து படுத்துக்கொள்வேன். வீசுகின்ற காற்று மண்ணைவாரி என் மீது இறைத்து விடும். அவர் வெளியே வந்து (நான் இருக்கும் நிலையில்) என்னைக் காண்பார்.அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்களது சிறிய தந்தையின் மகனே! நீங்கள் எதற்காக இங்கு வந்தீர்கள்? நீங்கள் எனக்குத் தூது அனுப்பி இருக்கக் கூடாதா? நான் உங்களிடம் வந்திருப்பேனே! எனக் கூறுவார். அதற்கு இல்லை! நான்தான் உங்களிடம் வர வேண்டும் என்று கூறி அவரிடம் ஹதீஸைக் கேட்பேன் என்கிறார்கள், அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள்.

இவர் தப்ஸீர் கலையிலும், அல்குர்ஆனிலும், அதனுடன் தொடர்புள்ள இதர கலைகளிலும், ஹதீஸிலும், கவிதையுடன் தொடர்புற்ற கலைகளிலும், அரபுமொழியிலும் மின்னும் தாரகையாகத் திகழ்ந்தார்கள்.

# 'இனிவரும் நாட்களெல்லாம்'

## இனித்திடும் பாக்கள் எல்லாம் ஓர் பார்வை




நிகழ்கால மற்றும் கடந்தகால தோற்றத்தில் மனிதனின் நிறமும் வடிவமும் இல்லாது வெறும் கற்பனைச் சுவரில் ஏந்தி நிற்கும் சித்திரம் போல் கவிதைகள் உருப்பெறுவதில்லை. இலக்கியத்தின் பாடுபொருள், வாழ்க்கையின் அனுபவம் சார்ந்தே வெளிப்படுகிறது. அனுபவிக்காத எந்த ஒரு விடயத்தையும் எந்த கவிதையிலும் காணமுடியாது.

ஒரே வரியில் சில நேரங்களில் வாசகனின் உள்ளத்தில் பளிச்சிட வைக்கும் வகையில் பொருளையோ அல்லது காட்சியையோ படைத்துக்காட்டும் பண்பு சங்க கால இலக்கியங்களில் காணலாம் .அந்த வகையில் கவிஞர் நஜ்முல் ஹுசைனின் கவிதைகளில் ஒற்றை வரியில் மனதை கவரக் கூடிய பல கவிதைகள் இருந்தன. 'இனிவரும் நாட்களெல்லாம்' நூலில் பல கவிதைகளை நான் மீண்டும் மீண்டும் வாசித்தேன். அதன் வார்த்தைக் கையாடல் மிக நுட்பமாக ஒரு எழுத்தில் எப்படி வித்தியாசப்படுத்துவது என்பதை இவரின் கவிதைகளில் காணக் கூடியதாக இருந்தது. உதாரணமாக -'மக்கம் பக்கம் வைக்கிறது சொர்க்கம்- 'இவ்வாறான வரிகள் வாசித்த பின் மறப்பதும் இல்லை. பதிந்து விடுகிறது. இதுவே ஒரு கவிஞனின் வெற்றி.

நகர்புற வாழ்க்கையை படம் பிடித்து காட்டிய போதும் கவிதை சந்தங்களில் அழகாய் இசைக்கிறது. இவ்வாறான கவிதை நூல்களை வாசிக்கும் போது புதிய தலைமுறையினர் நிறைய இதில் இருந்து கற்றுக் கொள்ளலாம்.

'இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ் எங்கள் மொழி' எனும் கவிதையில் பல விடயங்களை உள்ளடக்கி இருக்கின்றார் கவிஞர். கவிக்கோ அப்துல் ரஹ்மான் போன்ற ஆளுமைகள் உட்பட சாஹிரா கல்லூரியையும் ஹிரா குகையையும் தனது வார்த்தைகளால் கச்சிதமாய் சொற்களில் கோர்த்து இருக்கிறார்.

அது ஒரு தொடர் போல நகர்வது வித்தியாசம் .

'அவள் எப்போதும்
ஒரு மூச்சாய்
எழுதுவதில்லை
குடும்பத்தினருக்காகவும்
இடை இடையே
பெருமூச்சு விட்டுத்தான் எழுதுகிறாள்'

ஒரு சில வரிகளில் இலக்கிய துறையில் இருக்கும் பெண்களை அப்படியே அகத் துறிஞ்சி இருக்கின்றார். மொத்த துன்பமும் இந்த வரிகளில் சொல்லி இருப்பது அவரின் புலமையை உறுதிசெய்கிறது.

'இனிவரும் நாட்களெல்லாம்' கவிதை தொகுதியில் வாழ்வியல் மார்க்கம் என எல்லா வகையான கவிதைகளும் அடங்கி இருக்கிறது. வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

சித்தரிக்கப்பட்டும் கற்பனைகளில் கத்தரிக்க முடியாத உண்மைகளை உவமைகளுடன் சுமந்திருக்கும் இந்த கவிதை தொகுதி 'இனிவரும் நாட்களெல்லாம் இனித்திடும் பாக்கள் எல்லாம்'

சிமாரா அலி
'ஊதாப்பூ'

# அபூ சலாஹ் என்ற அதிசயப் போராளி

மொஹமட் நிசௌஸ்

இவன்கா என்ற
இஸ்ரேலின் விருந்தாளியே

'இவன் கா'லமாகிப் போனது
இஸ்ரேலுக்கு வெற்றியல்ல
இழுக்கு.
ஒரு ஊனமுற்றவனைக் கூட
உயிர் கொல்லுமளவிற்கு
ஈனப் பிறவிகள்
இந்த இஸ்ரேலியர்கள்
என்று நிரூபித்து விட்டார்கள்

'இவன் கா'ல் இழந்தாலும்
எதிரி மீது வீசும் கல் இழக்கவில்லை.
பலஸ்தீனப் போராட்டத்தின்
பலம் புரிகிறதா?

'இவன் கா'வல் படையென்ற
காவாலிப் படைக்கு
இரையாக்கப் பட்டாலும்
இந்தப் போராட்டம்
இறுதி வரை ஓயாது.

'இவன் கா' ட்டு மிராண்டிகளை
எதிர்த்தது போல்
இன்னும் ஆயிரம்
இளைஞர்கள் இணைந்து
இஸ்ரேல் ஒழியும் வரை
எதிர்த்து நிற்பார்கள்

'இவன் கா'ஸாவில்
இழந்த இரத்தம்
உலகமெங்குமுள்ள
உணர்ச்சிகளில் தெறிக்கும்
அது
இஸ்ரேலின் எலும்பை
இரண்டாய் முறிக்கும்

அபூ சலாஹ் என்ற
ஆக்ரோஷப் போராளியே
உன் கால்களைக் கொடுத்து
ஓராயிரம் கால்களை
ஓரணியில் சேர்த்தாய்
உன் உயிரைக் கொடுத்து
ஒரு போராட்டத்துக்கு
உயிரூட்டினாய்.
உன்
மண்ணறை
மணமாய் அமையட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை

# விளையாட்டு



## ஆண்டின் சிறந்த ப்ரீமியர் லீக் வீரர் விருதும் சலாஹ் வசமானது

இங்கிலாந்து ப்ரீமியர் லீக் தொடரின் இந்த பருவத்தின் சிறந்த வீரருக்கான விருதை லிவர்பூல் முன்கள வீரர் முஹம்மது சலாஹ் வென்றுள்ளார். எகிப்து தேசிய அணி வீரரான 25 வயதுடைய சலாஹ் கடந்த ஆண்டு ரோமா அணியில் இருந்து 34 மில்லியன் பிரித்தானிய பவுண்களுக்கு ஒப்பந்தமான பின் தனது முதல் ப்ரீமியர் லீக் பருவத்தில் 37 லீக் போட்டிகளிலும் 31 கோல்களை பெற்றுள்ளார்.

சலாஹ் ஏற்கனவே தொழில்முறை கால்பந்து சம்மேளனத்தின் ஆண்டின் சிறந்த வீரர் மற்றும் கால்பந்து செய்தியாளர் சம்மேளனத்தின் ஆண்டின் சிறந்த வீரருக்கான விருது ஆகிய விருதுகளை வென்றுள்ளார். இது தவிர, லிவர்பூல் அணியின் பருவத்தின் சிறந்த வீரர் மற்றும் ஆபிரிக்காவின் ஆண்டின் சிறந்த வீரர் விருதையும் அவர் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் நிபுணர்கள் குழு, ப்ரீமியர் லீக் தலைவர்கள் மற்றும் ரசிகர்களின் பொது வாக்குகள் ஆகியவற்றை ஒன்றிணைத்த ஒரு சிக்கலான தேர்வு முறை மூலமே சலாஹ் ஆண்டின் சிறந்த ப்ரீமியர் லீக் வீரர் விருதை வென்றுள்ளார்.


வெகுவிரைவில்



GALLE CATERERS SINCE 1998

தலைநகர் கொழும்பில் அறுசுவை உணவுகள் வழங்கி பல இலட்சக்கணக்கானோரின் அபிமானத்தையும் பாராட்டையும் பெற்ற Galle Caterers நிறுவனத்தின் கிளை நிறுவனம் வெகுவிரைவில்

நீர்கொழும்பில்

இல. 79 கொழும்பு வீதி, நீர்கொழும்பு.

தலைமையகம் இல, 140 A, கடவத்தை வீதி தெஹிவளை.

தனித்துவமிக்க உணவுகள் | பிரியாணி - கோழி, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி மரக்கறி, மீன், இறால்
சிடுகு - கோழி, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, மரக்கறி

0114 330 348 / 0114 200 926 / 0776 698 183

www.facebook.com/GalleCaterers | E-Mail: info@www.gallecaterers.lk | Web : www.gallecaterers.lk

AR Creations 0771383771




ஈராக்கிய பேரறிஞர் உஸ்தாத் முஹம்மத் அஹ்மத் ராஷித் அவர்கள் எழுதிய 'அல்-முன்தலக்' எனும் புத்தகத்தின் மொழிபெயர்ப்பு நூலான 'அழைப்புப் பாதையில் ஒரு பயணம்' வெளியீட்டு விழா திஹாரிய மஸ்ஜிதுல் இப்றாஹிமிய்யா கேட்போர் கூடத்தில் ஜமாஅதுஸ் ஸலாமாவின் தலைவர் உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத் (நளீமி) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக அல்குர்ஆன் திறந்த கல்லூரியின் பணிப்பாளர் உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் (நளீமி) அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன், புத்தக அறிமுகத்தை சர்வதேசப் பார்வையின் பிரதம ஆசிரியர் அஷ்ஷெய்க் ரஊப் ஸெய்ன் (நளீமி) அவர்கள் செய்தார்கள். மீள்பார்வை வெளியீடான இதனை அஷ்ஷெய்க் மிஹ்ழார் எம். ரஷீத் (நளீமி) அவர்கள் தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார்.




பலஸ்தீன மக்கள் தமது சொந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட 70 ஆவது நக்பா தினம் இலங்கை பலஸ்தீன் நட்புறவுச் சங்கத்தின் அனுசரணையில் பலஸ்தீன தூதரகத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் அனுஷ்டிக்கப்பட்டது. முச்சக்கர வண்டி ஊர்வலங்களும், கையெழுத்திடும் நிகழ்வுகளும், ஞாபகார்த்த மாநாடும் இதையொட்டி நிகழ்த்தப்பட்டன.



சூரா கவுன்சிலின் ஏற்பாட்டில் ஜாமியா நளீமியா கலா பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெக் எஸ்.எம்.எம். பழீல் எழுதிய இலங்கை மத நல்லிணக்கத்தில் இஸ்லாமிய மத விடயங்கள் சம்பந்தமாக சிங்கள மொழிமூலமான நூல் 09-05-2018 கொழும்பு தபால் கேட்போர் கூடத்தில் வெளியீடப்பட்டது. இந்நிகழ்வில் ஜாமியா நளீமியா கலாபீடத்தின் பணிப்பாளர் எம்.ஏ.எம். சுக்ரி, பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார், தகவல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் கலாநிதி ரங்கா கலன்சூரிய இஸ்லாமிய மதம் மற்று இலங்கையில் பர்மா, பாக்கிஸ்தான் போன்ற நாடுகளில் ஊடக மற்றும் சமூகத் தலங்கள் ஊடாக பொய்யாக பரப்படும் செய்திகள் பற்றி பிரதான உரை நிகழ்த்தினார்.



அகில இலங்கை முஸ்லீம் லீக்கின் ஸ்தாபகர் தினம் கடந்த வெள்ளிக்கிழமை (11) கொழும்பு தாபல் தலைமையக கேட்போர் கூடத்தில் அகில இலங்கை முஸ்லீம் லீக்கின் தலைவர் பி.எம் பாருக் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சட்டம் ஒழுங்கு மற்றும் பொது நிருவாக முகாமைத்துவ அமைச்சர் ரன்ஜித் மத்துமபண்டா கலந்து சிறப்பித்தார். கௌரவ பேச்சாளராக வல்பொல ராகுல பௌத்த கல்வி நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கல்கந்த தம்மானந்த தேரோவும், முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரும் கலந்து கொண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.